நகரம்-கிராமம்-துர்கம்-இவைகளில், வாயு திக்கு முதல் ரஜ்ஜுபாதனம் செய்யவேண்டும். தெற்கு முதல் வடக்கு வரையில், கிழக்கு மேற்கில் செல்லும் ஸூத்திரமாகும். மேற்கு திக்கு முதல் கிழக்கு திக்கு வரையில் தெற்கு வடக்காக மற்றொரு ஸூத்திரத்தை விடவேண்டும். (கல்பிக்கவேண்டும்). பிரம்ஹஸ்தானத்திற்கு கிழக்கில் உள்ள அந்த ஸூத்திரத்திற்கு *திரி ஸூத்திரம் என்று பெயர். 24

[illegible]

* அந்த ஸூத்திரமானது பிரம்ஹஸ்தானத்திற்குப் பக்கங்களிலிருந்தால் அதற்கு திரிஸூத்திரம், என்று இருக்க வேண்டுமென்று தோன்றுகிறது.

ததோ த⁴நம் பஶ்சிமம் தா⁴ந்யம் த³க்ஷிணம் தத꞉ |
ப்³ரஹ்மஸ்தா²நாது³த்தரம் ஸுக²மித்யபி⁴தீ⁴யதே || ௨௫ ||

*ஸுக²ப்ரமாணம் யத்ஸூத்ரம் தத்ப்ரமாண-
விதோ⁴ச்யதே |
ஏகஹஸ்தம் த்³விஹஸ்தம் வா த்ரிஹஸ்தம் பரிதோ(அ)தி⁴கம் |
விமாநம் மண்ட³பவ்யாஸாத் பாத³யேத் *[illegible] ||

[illegible]
[illegible]
[illegible]
[illegible]

அதற்கு மேற்கிலுள்ளது, தனமாகும். (தனஸ்தானமாகும்.) அதற்கு தெற்கில் தானியஸ்தானமாகும். பிரம்ஹஸ்தானத்திற்கு வடபக்கத்திலுள்ளது ஸுகம். (ஸுகஸ்தானம்) என்று கூறப்படுகிறது. 25

ஸுகஸ்தானத்தை அளவிடுகின்ற ஸூத்திரத்தின் பிரமாணத்தைக் கூறுகிறேன் :—

ஸுக பிரமாண ஸூத்திரமானது, சுற்றிலும் ஒருமுழம்-இரண்டுமுழம்-மூன்று முழம் அதிகமாகும்.

விமானமானது உறுதியாக இருப்பதற்காக மண்டபத்தின் அகலம் எவ்வளவோ, அவ்வளவு புதைக்கவேண்டும். (அஸ்திவாரம் இருக்கவேண்டும்.) 26½

மேஷ மாதத்தில் முதலாவது 10 நாட்களில் 2-அங்குலமும், மத்தியிலுள்ள 10 நாட்களில் 1-அங்குலமும், ஒதுக்கிச்

---

* ஸுக²ப்ரமாணம் இதி பாட²꞉ |
* [illegible] இதி பாட²꞉ |

𑌷𑌟𑍍𑌷𑌟𑍍𑌸𑌪𑍍𑌤𑌾𑌷𑍍𑌟𑌕𑌾𑌦𑍍𑌯𑍇𑌷𑍁 𑌤𑍍𑌰𑌿𑌸𑌮𑌾𑌸𑌕𑌂
𑌸𑍂𑌤𑍍𑌰𑌭𑍇𑌦𑌾𑌦𑍍𑌯𑌜𑌾𑌕𑍍𑌷𑌂
𑌮𑌧𑍍𑌯𑌂 𑌪𑌶𑍍𑌚𑌾𑌤𑍍𑌯𑌂 𑌚 𑌶𑍇𑌷𑌾𑌦𑍍𑌵𑌿𑌷𑍁 𑌦𑌶𑌦 𑌸𑌕𑍋𑌟𑌯𑍋𑌸𑍍𑌤𑍁
𑌦𑌿𑌨𑍇 𑌤𑍍𑌯𑌜𑍍𑌯 𑌯𑌥𑌾𑌙𑍍𑌗𑍁𑌲𑌾𑌨𑍍 ॥ ௨௭ ॥

𑌸𑌂𑌕𑍍𑌷𑌿𑌪𑍍𑌯 𑌹𑌾𑌰𑍋𑌮𑌧𑍍𑌯𑌮𑌂 𑌸𑌮𑌾𑌪𑌿𑌕𑌂
𑌤𑍍𑌯𑌜𑍇𑌤𑍍 𑌪𑌾𑌦𑍋𑌨𑌾𑌙𑍍𑌗𑌂 𑌅𑌙𑍍𑌗𑍁𑌲𑌾𑌦𑍀𑌨𑍍𑌯𑍁𑌕𑍍𑌤𑌿𑌤𑌃 ।
𑌤𑌤𑍍𑌪𑌶𑍍𑌚𑌾𑌤𑍍 𑌕𑌾𑌷𑍍𑌠𑌾𑌦𑍌 𑌵𑍃𑌦𑍍𑌧𑌿 𑌤𑌦𑌗𑍍𑌰𑌾𑌤𑍍
𑌵𑌿𑌸𑍃𑌜𑍍𑌯 𑌸𑍂𑌤𑍍𑌰𑌂 𑌵𑌿𑌦𑌧𑍀𑌤 𑌚 𑌭𑍂𑌮𑌿𑌮𑍍 ॥ ௨௮ ॥

𑌇𑌤𑌿 𑌮𑌯𑌮𑌤𑍇 𑌵𑌾𑌸𑍍𑌤𑍁𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑍇 𑌦𑌿𑌕𑍍𑌪𑌰𑌿𑌚𑍍𑌛𑍇𑌦𑍋 𑌨𑌾𑌮
𑌷𑌷𑍍𑌠𑍋𑌽𑌧𑍍𑌯𑌾𑌯𑌃 ।

சேர்க்கவேண்டும். (ஸூத்திரத்தை கல்பிக்கவேண்டும்.) மூன்ருவது 10 நாட்களுக்கு ஒதுக்கம் கிடையாது.

விருஷப மாதத்தில் முறையே ஒவ்வொரு 10 நாட்களிலும், 0, 1, 2 அங்குலம் ஒதுக்கவேண்டும்.

ஆனி மாதத்தில் முறையே 2, 3, 4 அங்குலங்களும்
ஆடி மாதத்தில் முறையே 4, 3, 2 அங்குலங்களும்
ஆவணி மாதத்தில் முறையே 2, 1, 0 அங்குலங்களும்
புரட்டாசி மாதத்தில் முறையே 0, 1, 2 அங்குலங்களும்
ஐப்பசி மாதத்தில் முறையே 2, 3, 4 அங்குலங்களும்
கார்த்திகை மாதத்தில் முறையே 4, 5, 6 அங்குலங்களும்
மார்கழி மாதத்தில் முறையே 6, 7, 8 அங்குலங்களும்
தை மாதத்தில் முறையே 8, 7, 6 அங்குலங்களும்
மாசி மாதத்தில் முறையே 6, 5, 4 அங்குலங்களும்
பங்குனி மாதத்தில் முறையே 4, 3, 2 அங்குலங்களும்
ஒதுக்கி ஸூத்திரத்தை கல்பிக்கவேண்டும்.

ராசியையும் ஸூரிய கதியையும் பார்த்து முன்பு கூறப்பட்ட அங்குலக் கணக்கில், யுக்தியுடன் ஒதுக்கி அதன் பிறகு, அந்த எல்லையிலிருந்து ஸூத்திர பாதம் செய்து பூமியைக் கல்பித்துக்கொள்ளவேண்டும். 28

திக் பரிச்சேதம் என்னும் ஆருவது அத்தியாயம் முற்றும்.

𑌅𑌥 𑌸𑌪𑍍𑌤𑌮𑍋𑌽𑌧𑍍𑌯𑌾𑌯𑌃 ॥

𑌵𑌕𑍍𑌷𑍍𑌯𑍇𑌽𑌹𑌂 𑌪𑌦𑌵𑌿𑌨𑍍𑌯𑌾𑌸𑌂 𑌸𑌰𑍍𑌵𑌵𑌾𑌸𑍍𑌤𑍁 𑌸𑌮𑌾𑌸𑌤𑌃 ।
𑌸𑌕𑌲𑌂 𑌪𑍇𑌚𑌕𑌂 𑌪𑍀𑌠𑌂 𑌮𑌹𑌾𑌪𑍀𑌠𑌂 𑌤𑌥𑍈𑌵 𑌚 ॥ ௧ ॥

𑌉𑌪𑌪𑍀𑌠𑍋𑌗𑍍𑌰𑌪𑍀𑌠𑌂 𑌸𑍍𑌥𑌣𑍍𑌡𑌿𑌲𑌂 𑌚𑌾𑌪𑌿 𑌚𑌣𑍍𑌡𑌿𑌤𑌮𑍍 ।
𑌮𑌣𑍍𑌡𑍂𑌕𑌪𑌦𑌕𑌂 𑌚𑍈𑌵 𑌪𑌦𑌂 𑌪𑌰𑌮𑌶𑌾𑌯𑌿𑌕𑌮𑍍 ॥ ௨ ॥

𑌤𑌥𑌾𑌸𑌨𑌂 𑌚 𑌸𑍍𑌥𑌾𑌨𑍀𑌯𑌂 𑌦𑍇𑌶𑍀𑌯𑍋𑌭𑌯𑌚𑌣𑍍𑌡𑌿𑌤𑌮𑍍 ।
𑌭𑌦𑍍𑌰𑌂 𑌮𑌹𑌾𑌸𑌨𑌂 𑌪𑌦𑍍𑌮𑌗𑌰𑍍𑌭𑌂 𑌚 𑌤𑍍𑌰𑌿𑌯𑍁𑌤𑌂 𑌪𑌦𑌮𑍍 ॥ ௩ ॥

𑌵𑍍𑌰𑌤𑌭𑍋𑌗𑌪𑌦𑌂 𑌚𑍈𑌵 𑌕𑌰𑍍𑌣𑌾𑌷𑍍𑌟𑌕𑌪𑌦𑌂 𑌤𑌥𑌾 ।
𑌗𑌣𑌿𑌤𑌂 𑌪𑌦𑌮𑌿𑌤𑍍𑌯𑍁𑌕𑍍𑌤𑌂 𑌪𑌦𑌂 𑌸𑍂𑌰𑍍𑌯𑌵𑌿𑌶𑌾𑌲𑌕𑌮𑍍 ॥ ௪ ॥

𑌸𑍁𑌸𑌂𑌹𑌿𑌤𑌪𑌦𑌂 𑌚𑍈𑌵 𑌸𑍁𑌪𑍍𑌰𑌤𑍀𑌕𑌾𑌨𑍍𑌤𑌮𑍇𑌵 𑌚 ।
𑌵𑌿𑌶𑌾𑌲𑌂 𑌵𑌿𑌪𑍍𑌰𑌗𑌰𑍍𑌭𑌂 𑌚 𑌵𑌿𑌶𑍍𑌵𑍇𑌶𑌂 𑌚 𑌤𑌥𑌾𑌪𑌰𑌮𑍍 ॥ ௫ ॥

𑌤𑌥𑌾 𑌵𑌿𑌪𑍁𑌲𑌭𑍋𑌗𑌂 𑌚 𑌪𑌦𑌂 𑌵𑌿𑌪𑍍𑌰𑌤𑌿𑌕𑌾𑌨𑍍𑌤𑌕𑌮𑍍 ।

ஏழாவது அத்தியாயம்

ஸகலவிதமான வாஸ்துவுக்கும் புராதனமாகக் கூறப் பட்டு வருகின்ற பதவிந்யாஸத்தைக் கூறுகிறேன்.

அவைகள் முறையே, ஸகலபதம் 1, பேசகபீடபதம் 2, மஹாபீடபதம் 3, உபபீடபதம் 4, உக்ரபீடபதம் 5, ஸ்தண்டிலபீடபதம் 6, மண்டூக பதம் 7, பரமசாயிகபதம் 8, ஆஸநபதம் 9, ஸ்தாநீயபதம் 10, தேசீயபதம் 11, உபய சண்டிதபதம் 12, பத்ரபதம் 13, மஹாஸனபதம் 14, பத்ம கர்பபதம், 15, த்ரியுதபதம் 16, விரதபோகபதம் 17, கர்ணஷ்டகபதம் 18, கணிதபதம் 19, ஸூரிய விசாலகபதம், 20, ஸுஸம்ஹிதபதம் 21, ஸுப்ரதீகாந்தபதம் 22, விசால

विशालाक्षपदं चैव विप्रभक्तिकसंज्ञकम् ॥ ६ ॥

पदं विश्वेशसारं च तथैवेश्वरकान्तकम् ।
इन्द्रकान्तपदं चैव द्वात्रिंशत् कथितानि हि* ॥७॥

सकलं पदमेकं स्यात् पेचकं तु चतुष्पदम् ।
पीठं नवपदं चैव महापीठं षोडशकम् ॥ ८ ॥

पञ्चविंशत्युपपीठं षट्त्रिंशदुग्रपीठकम् ।
स्थण्डिलं सप्तसप्तांशं मण्डूकं चाष्टकाष्टकम् ॥९॥

परमशायिपदं चैव नवनवपदं भवेत् ।

பதம் 23, விப்ரகர்பபதம் 24, விச்வேசபதம் 25, விபுலபோகபதம் 26, விப்ரதிகாந்தபதம் 27, விசாலாக்ஷபதம் 28, விப்ரபக்திகபதம் 29, விச்வேசஸாரபதம் 30, ஈசுவரகாந்தபதம் 31, இந்திரகாந்தபதம் 32, என்று 32 பதங்கள் கூறப்பட்டிருக்கின்றன. 7

ஏகபதமாக இருப்பதற்கு ஸகலம் என்று பெயர்.

4-பதமுள்ளதற்கு பேசகபதம் என்று பெயர்
9-பதமுள்ளதற்கு பீடபதம் என்று பெயர்
16-பதமுள்ளதற்கு மஹாபீடம் என்று பெயர்
25-பதமுள்ளதற்கு உபபீடம் என்று பெயர்
36-பதமுள்ளதற்கு உக்கிரபீடம் என்று பெயர்
49-பதமுள்ளதற்கு ஸ்தண்டிலம் என்று பெயர்
64-பதமுள்ளதற்கு மண்டூக பதம் என்று பெயர்
81-பதமுள்ளதற்கு பரமசாயிபதம் என்று பெயர்

---

*[illegible]

[illegible] ॥ ௰ ॥

[illegible] ।
[illegible] ॥ ௧௧ ॥

[illegible] ।
[illegible] ॥ ௧௨ ॥

[illegible] ।
[illegible] ॥ ௧௩ ॥

[illegible] ।
[illegible] ॥

[illegible] ।
[illegible] ॥ ௧௪ ॥

100-பதமுள்ளதற்கு ஆஸநபதம் என்று பெயர்
121-பதமுள்ளதற்கு ஸ்தாநீயம் என்று பெயர்
144-பதமுள்ளதற்கு தேசீயம் என்று பெயர்
169-பதமுள்ளதற்கு உபசண்டிதம் என்று பெயர்
196-பதமுள்ளதற்கு பத்ரபதம் என்று பெயர்
225-பதமுள்ளதற்கு மஹாஸநம் என்று பெயர்
256-பதமுள்ளதற்கு பத்மகர்பம் என்று பெயர்
289-பதமுள்ளதற்கு த்ரியுதம் என்று பெயர்
324-பதமுள்ளதற்கு விரதபோகம் என்று பெயர்
369-பதமுள்ளதற்கு கர்ணாஷ்டக பதம் என்று பெயர்
400-பதமுள்ளதற்கு கணிதபதம் என்று பெயர்
இதற்கு ஸூரிய விசாலம் என்று மற்றொரு பெயராம்

ஸசதுராசீதி சதுஸ்ஸதம் ஸம்ப்ரதிகாந்தகம் ।
நவவிம்ஶத் பஞ்சஶதம் விஶாலம் பதமீரிதம் || ௧௬ ||

ஷட்ஸப்ததி: பஞ்சஶதம் விப்ரகர்பமிதி ஸ்ம்ருதம் ।
விஶ்வேஶம் ஷட்ஶதம் ஸ்யாத் பஞ்சத்ரிம்ஶத்பதம் ஸ்ம்ருதம் ||

ஷட்ஸப்ததி: ஷட்ஶதகம் விபுலபோகமிதி ஸ்ம்ருதம் ।
நவவிம்ஶதிகம் ஸப்தஶதம் விப்ரதிகாந்தகம் || ௧௭ ||

விஶாலாக்ஷபதம் சதுராஶீதி: ஸப்தஶதாதிகம் ।
ஸைகசத்வாரிம்ஶகம் அஷ்டஶதம் விப்ரபக்திகம் ||௧௮||

விஶ்வேஶஸாரமித்யுக்தமேவம் நவஶதம் பதம் ।
ஸைகஷஷ்ட்யா நவஶதம் பதமீஶ்வரகாந்தகம் ||

சதுர்விம்ஶதி ஸம்யுக்தம் ஸஹஸ்ரபதஸங்க்யகம் ।
இந்த்ரகாந்தமிதி ப்ரோக்தம் தந்த்ரவித்பி: புராதனை: ||

441-பதமுள்ளதற்கு ஸம்ஸம்ஹிதபதம் என்று பெயர்
484-பதமுள்ளதற்கு ஸம்ப்ரதிகாந்தம் என்று பெயர்
529-பதமுள்ளதற்கு விசாலபதம் என்று பெயர்
576-பதமுள்ளதற்கு விப்ரகர்பம் என்று பெயர்
635-பதமுள்ளதற்கு விச்வேசம் என்று பெயர்
676-பதமுள்ளதற்கு விபுல போகம் என்று பெயர்
729-பதமுள்ளதற்கு விப்ரதிகாந்தம் என்று பெயர்
784-பதமுள்ளதற்கு விசாலாக்ஷம் என்று பெயர்
841-பதமுள்ளதற்கு விப்ரபக்திகம் என்று பெயர்
900-பதமுள்ளதற்கு விச்வேச ஸாரம் என்று பெயர்
961-பதமுள்ளதற்கு ஈசுவர காந்தம் என்று பெயர்
1024-பதமுள்ளதற்கு இந்திரகாந்தபதம் என்று பெயர்
இவ்விதம் தந்திரங்களறிந்த முன்னோர்கள் கூறுகிறார்கள்.
(கண்டம் என்பதற்கு கூறுகள் என்று பொருள்)

𑌪𑍍𑌰𑌥𑌮𑌂 𑌪𑌦𑌂 𑌸𑌕𑌲𑌮𑍇𑌕𑌪𑌦𑌂 𑌯𑌤𑍀𑌨𑌾𑌂
𑌇𑌷𑍍𑌟𑌂 𑌹𑌿 𑌵𑌿𑌷𑍍𑌟𑌰𑌮𑌹𑌾𑌸𑌨𑌵𑌹𑍍𑌨𑌿𑌕𑌾𑌰𑍍𑌯𑌮𑍍 ।
𑌪𑌿𑌤𑍃𑌶𑍍𑌰𑌾𑌦𑍍𑌧𑌿𑌯𑌜𑌨𑌂 𑌦𑍇𑌵𑌯𑌜𑌨𑌂 𑌚
*𑌸𑌾𑌙𑍍𑌗𑌿𑌕𑌤𑍋𑌯𑌸𑌸𑌿𑌤𑌾𑌕𑌸𑌤𑍍𑌕𑍃𑌤𑍍𑌯𑌯𑍋𑌗𑍍𑌯𑍇 ॥ ௨௨ ॥

𑌪𑍈𑌶𑌾𑌚𑌭𑍂𑌤𑌵𑌿𑌷𑌪𑌾𑌤𑌕𑌰𑌕𑍍𑌷𑌕𑌾𑌣𑌿
𑌪𑍂𑌜𑍍𑌯𑌾 𑌹𑌿 𑌪𑍈𑌶𑌕𑌪𑌦𑍇 𑌚𑌤𑍁𑌰𑌂𑌶𑌯𑍁𑌕𑍍𑌤𑍇 ।
𑌤𑌸𑍍𑌮𑌿𑌨𑍍 𑌵𑌿𑌧𑍇𑌯𑌮𑌧𑍁𑌨𑌾 𑌵𑌿𑌧𑌿𑌵𑌿𑌜𑍍𑌞𑍈𑌃
𑌶𑍈𑌵𑌂 𑌤𑍁 𑌨𑌿𑌷𑍍𑌕𑌲𑌮𑌿𑌦𑌂 𑌸𑌕𑌲𑌂 𑌚 𑌕𑍢𑌪𑍍𑌤𑍍𑌯𑌾 ॥ ௨௩ ॥

𑌅𑌥 𑌪𑍀𑌠𑌕𑍇 𑌨𑌵𑌭𑌾𑌗𑌯𑍁𑌤𑍇
𑌈𑌶𑌾𑌦𑌿𑌦𑌿𑌶𑍍𑌯𑌪𑍇𑌦𑌾𑌤𑍍𑌤𑌭𑌾𑌗𑌕𑍇 ।
𑌵𑌿𑌧𑌾𑌨𑌪𑍂𑌰𑍍𑌵𑌕𑌂 𑌜𑌲𑌂 𑌹𑍁𑌤𑌾𑌶𑌨𑌂
𑌨𑌭𑌸𑍍𑌤𑌲𑌂 𑌪𑌵𑌨𑌂 𑌪𑍃𑌥𑌿𑌵𑍀 𑌹𑍃𑌦𑍍𑌵𑌯𑍋𑌃 ॥ ௨௪ ॥

முதலாவது ஏகபதமானது, யதிகளுக்குரிய ஸகலபதமாகும். 12, 3, 2, 1 என்ற ஸூத்திரங்களுடன் கூடிய (இந்த ஏகபதத்தில்) விஷ்டரம் (விஷ்டரம் என்ற பெயர் உடைய ஆஸநம்) மஹாஸநம் அல்லது விஷ்டரமஹாஸநம், அக்நிகார்யம், பித்ருயஜனம் (ச்ராத்தம் முதலியவை) தேவயஜநம் (யாகம் முதலிய தேவ ப்ரீதகரமான காரியம்) குருபூஜை இவைகள் விரும்பத்தக்கவைகளாகும். 22

நான்கு (4) அம்சங்களுடன் கூடிய பேசகபதத்தில் பைசாசகிரஹங்கள்-பூதகிரஹங்கள்-விஷபாதாகரகிரஹங்கள் இவைகளிடத்திலிருந்து ரக்ஷிக்கக்கூடிய தேவதைகளைப் பூஜிக்கவேண்டும். விதியை அறிந்தவர்கள், இப்பொழுது, சைவமான நிஷ்கலமூர்த்தியையும், ஸகல மூர்த்தியையும் அதில் கல்பிக்கவேண்டும். (ஸகலம் - கை கால் முதலிய அங்கங்களுடையது. நிஷ்கலம். லிங்காகாரம்.) 23

ஒன்பது (9) பாகமுள்ள பீடத்தில், ஈசானியம் முதலிய திக்குதோறும், ஜலம் 1, அக்நி 2, ஆகாசம் 3, வாயு 4

---

*𑌸𑌾𑌨𑍍𑌤𑌿𑌕𑌤𑍋𑌯 𑌇𑌤𑌿 𑌵𑌾𑌰𑌾𑌣𑌸𑍀 ।

ஷோடசாம்சம் மஹாபீடம் பஞ்சவிம்சாதிதைவதம் |
ஈசஸ்ச ஜயந்தாதித்யௌ ப்ருசஸ்சாக்னிர்விததோ யம: ||௨௫||

ப்ருங்கஸ்ச பித்ருஸுக்ரீவ வருண: சோஷமாருதௌ |
முக்யஸ்ஸோமோதிதிஸ்சைதே பாஹ்யதைவா: ப்ரகீர்த்திதா: ||

ஆபவத்ஸஸ்ததார்யஸ்ச ஸாவித்ரோ விவஸ்வாநிந்த்ர மித்ரகௌ |
ருத்ரஜோ பூதரஸ்சைதே மத்யே ப்ரஹ்மா ஸ்தித: ப்ரபு: ||

தத்பார்ஸ்வயோர்த்வயோரேகைகமேகைகம் பதயோஜநாத் |
உபபீடம் பவேத்தத்ர தேவதாநாம்(நாம்ச) பதே ஸ்திதா: ||

இவைகளைக் கல்பிக்கவேண்டுமென்பதை அறிந்துகொள்ள வேண்டும். பூமியானது இவைகளின் எல்லையாகும். 24

பதினாறு அம்சங்களுடன் கூடியது மஹா பீடமாகும். இது 25 தேவதைகளுடையதாகும். ஈசன் 1, ஜயந்தன் 2, ஆதித்தியன் 3, பிருசன் 4, அக்நி 5, வித்தன் 6, யமன் 7, பிருங்கன் 8, பிதிருக்கள் 9, ஸுக்ரீவன் 10, வருணன் 11, சோஷன் 12, மாருதன் 13, முக்கியன் 14, ஸோமன் 15 அதிதி 16 இவர்கள் பாஹ்ய தேவதைகளாவார்கள். (பாஹ்யம்-வெளிப்பக்கம்) 26

ஆபவத்ஸர் 17, ஆர்யன் 18, ஸாவித்ரன் 19, விவஸ்வான் 20, இந்திரன் 21, மித்ரகன் (மித்ரன்) 22, ருத்ரஜன் 23, பூதரன் 24 இவர்கள் உள்பக்கத்தின் தேவதைகளாவார்கள். மத்தியில் பிரபுவான பிரம்மதேவன் 25 தேவதையாவார். 27

கீழே கூறப்பட்ட ஷோடசாம்சபதத்தின் இரு பக்கங்களிலும் ஒரு பாகத்திற்கு ஒன்றுவீதம் பதங்களைச் சேர்த்தால் அது உப பீடமாகும். (5×5=25 பதமாகும் என்பது பொருள்).

தத்வாஸ்து பார்ஶ்வயோர்த்வயோரேகைகம் ஸவிபஜ்ய து ।
ஐந்த்ரகாந்தபதம் யாவத் தாவத் யோஜ்ய பதாநி ச ॥ ௨௯ ॥

ஸமாநி பாதி ஸமாநி சதுஷ்ஷஷ்டிபதாதிவத் ।
அஸமாநி ஸமஸ்தாநி சைகாஶீதி பதாதிவத் ॥ ௩௰ ॥

பதாநாமபி ஸர்வேஷாம் மண்டூகம் சாபி தத்வரம் ।
சண்டிதம் ஸர்வவாஸ்தூநாமுத்தமம் ச யதஸ்ததஃ ॥ ௩௧ ॥

தஸ்மாத் ஸம்க்ஷிப்ய தந்த்ரேப்யஃ ஸம்க்ரஹமபி தத்ப்ருவே ।

புத்திமானாக இருப்பவன், கீழே கூறியவிதமாக, இரு பக்கங்களிலும், ஒவ்வொரு பாகத்துடனும் மற்றொரு பாகத்தைச் சேர்த்துக்கொண்டு, இந்திர காந்தபதம்வரையில், பதங்களை பாகுபாடு செய்துகொள்ளவேண்டும். 29

ஸமபாகங்களை (இரட்டையான பாகங்களை) 64 பதத்தை விபாகம் செய்வதைப்போல, விபாகம் செய்ய வேண்டும். அஸமமான எல்லாவற்றையும் (ஒத்தப்படையானவைகளை) 81 பதங்களை விபாகம் செய்வதைப்போல, விபாகம் செய்யவேண்டும். *(கிழக்கு மேற்காக 8 பதங்களும், தெற்கு வடக்காக 8 பதங்களும் கல்பித்தால், அந்த ஸ்தலமானது 8×8=64 பதமாகும். கிழக்கு மேற்கில் 9 பதங்களும், தெற்கு வடக்காக 9 பதங்களும் கல்பித்துக் கொண்டால், அது 9×9=81 பதமாகும் என்பது கருத்து). 30

பதங்கள் எல்லாவற்றிலும், மண்டுகபதம் சிறந்ததாகும். இவ்விதமாகவே, சண்டிதபதமும், எல்லாவித வாஸ்துக்களுக்கும் சிறந்ததாகும். ஆகையால், இவ்விரண்டையும், தந்திரங்களிலிருந்து கிரஹித்து ஸங்கிரஹமாகக் கூறுகிறேன். (64 பதத்திற்கு மண்டுக பதம் என்றும், 81 பதத்திற்கு சண்டிதபதம் என்றும் பெயர்) 31½

𑌚𑌤𑍁𑌷𑍍𑌷𑌷𑍍𑌟𑌿𑌪𑌦𑍇 𑌚𑍈𑌕𑌾𑌶𑍀𑌤𑍌 𑌸𑌕𑌲𑌨𑌿𑌷𑍍𑌕𑌲𑍇 || ௩௨ ||

𑌸𑍂𑌤𑍍𑌰𑍇 𑌚 𑌪𑌦𑌮𑌧𑍍𑌯𑍇 𑌚 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾𑌦𑍍𑌯𑌾𑌃 𑌸𑍍𑌥𑌾𑌪𑌿𑌤𑌾𑌃 𑌸𑍁𑌰𑌾𑌃 |
𑌪𑍍𑌰𑌾𑌗𑌾𑌦𑌿𑌕𑍍𑌰𑌮𑌶(𑌕𑍍𑌰)𑌈𑌶𑌾𑌨𑌾𑌦𑍍𑌯𑌾𑌸𑍍𑌤𑍁 𑌦𑍇𑌵𑌤𑌾𑌃 𑌪𑍃𑌥𑌕𑍍 || ௩௩ ||

𑌈𑌶𑌾𑌨𑌶𑍍𑌚𑍈𑌵 𑌪𑌰𑍍𑌜𑌨𑍍𑌯𑍋 𑌜𑌯𑌨𑍍𑌤𑌸𑍍𑌤𑍁 𑌮𑌹𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌕𑌃 |
𑌆𑌦𑌿𑌤𑍍𑌯𑌃 𑌸𑌤𑍍𑌯𑌕𑌶𑍍𑌚𑍈𑌵 𑌭𑍃𑌶𑌶𑍍𑌚𑍈𑌵𑌾𑌨𑍍𑌤𑌰𑌿𑌕𑍍𑌷𑌕𑌃 || ௩௪ ||

𑌅𑌗𑍍𑌨𑌿𑌃 𑌪𑍂𑌷𑌾 𑌚 𑌵𑌿𑌤𑌥𑍋 𑌰𑌾𑌕𑍍𑌷𑌸𑌸𑍍𑌤𑍁 𑌯𑌮𑌸𑍍𑌤𑌥𑌾 |
𑌗𑌨𑍍𑌧𑌰𑍍𑌵𑍋 𑌭𑍃𑌙𑍍𑌗𑌰𑌾𑌜𑌸𑍍𑌤𑍁 𑌮𑍃𑌷𑌸𑍍𑌤𑍁 𑌪𑌿𑌤𑍃𑌦𑍇𑌵𑌤𑌾𑌃 || ௩௫ ||

𑌦𑍌𑌵𑌾𑌰𑌿𑌕𑌸𑍍𑌤𑍁 𑌸𑍁𑌗𑍍𑌰𑍀𑌵𑌃 𑌪𑍁𑌷𑍍𑌪𑌦𑌨𑍍𑌤𑍋 𑌜𑌲𑌾𑌧𑌿𑌪𑌃 |
𑌅𑌸𑍁𑌰𑌃 𑌶𑍋𑌷𑌰𑍋𑌗𑍌 𑌚 𑌵𑌾𑌯𑍁𑌰𑍍𑌨𑌾𑌗𑌸𑍍𑌤𑌥𑍈𑌵 𑌚 ||

𑌮𑍁𑌖𑍍𑌯𑍋 𑌭𑌲𑍍𑌲𑌾𑌟𑌕𑌶𑍍𑌚𑍈𑌵 𑌸𑍋𑌮𑌶𑍍𑌚𑍈𑌵 𑌮𑍃𑌗𑌸𑍍𑌤𑌥𑌾 |

ஸகல நிஷ்கலரூபமான சதுஷ்ஷஷ்டி (64) பதத்திலும், ஏகாசீதி (81) பதத்திலும், ஸூத்திரத்திலும், பதமத்தியிலும், பிரம்ஹா முதலான தேவதைகள் ஸ்தாபிக்கப் பட்டிருக்கிறார்கள்.

இந்த தேவதைகள், வடகிழக்கு திக்கிலிருந்து முறையே, தனித்தனியே கூறப்பட்டிருக்கிறார்கள். 33

ஈசானன் 1, பர்ஜந்யன் 2, ஜயந்தன் 3, மஹேந்திரகன் 4, ஆதித்யன் 5, ஸத்தியகன் 6, பிருசன் 7, அந்தரிக்ஷகன் 8, அக்நி 9, பூஷா 10, விததன் 11, ராக்ஷஸன் 12, யமன் 13, கந்தர்வன் 14, பிருங்கராஜன் 15, மிருஷன் 16, பிதிரு தேவதைகள் 17, தௌவாரிகன் 18, ஸுக்ரீவன் 19, புஷ்பதந்தன் 20, ஜலாதிபன் 21, அஸுரன் 22, சோஷன் 23, ரோகன் 24, வாயு 25, நாகன் 26, முக்கியன் 27,

𑌅𑌦𑌿𑌤𑌿𑌶𑍍𑌚𑌾𑌦𑌿𑌤𑌿𑌶𑍍𑌚𑍈𑌵 𑌦𑍍𑌵𑌾𑌤𑍍𑌰𑌿𑌂𑌶𑌤𑍍 𑌬𑌾𑌹𑍍𑌯𑌦𑍇𑌵𑌤𑌾𑌃 ॥௩௭॥

𑌆𑌪𑌵𑌶𑍍𑌚𑌾𑌪𑌵𑌤𑍍𑌸𑌶𑍍𑌚𑍈𑌵𑌾𑌨𑍍𑌤𑌃 𑌪𑍍𑌰𑌾𑌗𑍁𑌤𑍍𑌤𑌰𑍇 𑌸𑍍𑌥𑌿𑌤𑍌 ।
𑌸𑌵𑌿𑌨𑍍𑌦𑍍𑌰𑌶𑍍𑌚𑍈𑌵 𑌸𑌾𑌵𑌿𑌨𑍍𑌦𑍍𑌰𑌶𑍍𑌚𑌾𑌨𑍍𑌤𑌃 𑌪𑍍𑌰𑌾𑌗𑍍𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑍇 𑌸𑍍𑌥𑌿𑌤𑍌 ॥

𑌇𑌨𑍍𑌦𑍍𑌰𑌶𑍍𑌚𑍈𑌵𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌰𑌾𑌜𑌶𑍍𑌚 𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑌾𑌪𑌰𑌤𑌃 𑌸𑍍𑌥𑌿𑌤𑍌 ।
𑌰𑍁𑌦𑍍𑌰𑍋 𑌰𑍁𑌦𑍍𑌰𑌜𑌯𑌶𑍍𑌚𑍈𑌵 𑌪𑌶𑍍𑌚𑌿𑌮𑍋𑌤𑍍𑌤𑌰𑌤𑌃 𑌦𑌿𑌶𑌿 ॥ ௩௯ ॥

𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾 𑌮𑌧𑍍𑌯𑍇 𑌸𑍍𑌥𑌿𑌤𑌃 [illegible] ।
𑌆𑌰𑍍𑌯𑍋 𑌵𑌿𑌵𑌸𑍍𑌵𑌾𑌨𑍍 𑌮𑌿𑌤𑍍𑌰𑌶𑍍𑌚 [illegible] 𑌕𑍀𑌰𑍍𑌤𑌿𑌤𑌾𑌃 ॥

பல்லாடகன் 28, ஸோமன் 29, மிருகன் 30, அதிதி 31, ஆதிதி 32, இந்த முப்பத்திரண்டு (32) பேர்களும் பாஹ்ய தேவதைகள் (வெளிப்பக்கத்திலுள்ள தேவதைகள்) ஆவார்கள். 37

ஆபவன், அபவத்ஸன் இவ்விருவர்களும், உள்பக்கத்தில், வடகிழக்கில் கூறப்பட்டிருக்கிறார்கள்.

ஸவிந்திரன், ஸாவிந்திரன், இவ்விருவரும், உள்பக்கத்தில், தென்கிழக்கில் கூறப்பட்டிருக்கிறார்கள்.

இந்திரன், இந்திரராஜன், இவ்விருவர்களும் தென்மேற்கில் கூறப்பட்டிருக்கிறார்கள்.

ருத்திரன், ருத்திரஜயன் இவ்விருவர்களும் வடமேற்கு திக்கில் கூறப்பட்டிருக்கிறார்கள். 39

மங்களங்களை செய்யக்கூடியவரான பிரம்ஹாவானவர், மத்தியிலிருப்பவராவார்.

ஆரியன் 1, விவஸ்வான் 2, மித்திரன் 3, பூதரன் 4. இவர்கள், பிரம்ஹாவுக்கு எதிரிலிருப்பவர்களாவார்கள். (நான்கு பக்கங்களிலும் என்று பொருள்,) 40

சரகீ ச விதாரீ ச பூதநா பாபராக்ஷஸீ ।
ஸம்ஸ்தாப்யாதிபஹி: ஸூத்ரவஸ்த்யா: அந்யக்ஷேத்ரே ஸ்திய:
ஸ்ருதா: ।
நவதா பலிபோக்தார: சேஷாணாம் பதகல்ப்யதே ||

விம்சத் ஸப்தைஸ் சதுர்பிஸ்ஸுஷட்பிஷ்
ஷட்பிஷ்ஷட்பிஸ் சதுர்பிர்த்வாதசைஸ் ஷட்கை: ।
யுக்தை(ரேகேந)ஸூத்ரைஸ்ச ஸந்திஸம்வ்யாபிநாதி:
ஸம்யுக்தம் ஸ்யாத் ஏகாசீதிபதம் || ௪௨ ||

சதுஷ்ஷஷ்டிபதே மத்யே ப்ரஹ்மணஸ்து சதுஷ்பதம் ||

ஆர்யகாதி சதுர்தேவா: ப்ராகாதி த்ரித்ரிதாமின: ।
ஆபாத்யஷ்டௌ ஸுரா: கோணேஷ்வர்த்தார்த்தபததாமின: || ௪௩ ||

சரகீ 1, விதாரீ 2, பூதனை 3, பாபராக்ஷஸீ 4, இவர்களை, வாஸ்துவுக்கு வெளிப்பக்கத்தில், ஈசானியம் முதலிய திக்குகளில் ஸ்தாபிக்கவேண்டும். இவர்களுக்கு ஸ்தானம் கிடையாது. இவர்கள் பலியை புஜிப்பவர்கள். இவர்கள் நீங்கிய, மற்ற தேவதைகளுக்கு ஸ்தானங்கள் கூறப்பட்டு இருக்கின்றன. 41

20, 7, 4, 6, 6, 4, 6, 12, 3, 4, 8, 1, ஆக 81 பதங்களும், ஸூத்திரங்களும் ஸந்திகளுமுள்ளது ஏகாசீதி 81 பதமாகும். இதற்கு சண்டிதம் என்றும் பெயர். 42½

சதுஷ்ஷஷ்டி 64 பதத்தில், நடுவில் 4 பதங்கள் பிரம்ஹ ஸ்தானமாகும். ஆர்யகன் முதலான 4 தேவர்கள் கிழக்கு முதல் 3, 3, பதங்களுடையவர்களாவார்கள். ஆபன் முதலான 8 தேவதைகளும், கோணங்களில், அர்தபதமுடையவர்களாவார்கள்,

மஹேந்த்ரராக்ஷஸாத்யாஸ்ச புஷ்பபல்லாடகாதய: ।
சதுஸ்சதுஷ்க அமரா தேவா(ச)சதுஷ்பதாஸ்ரிதா: ॥ ௪௫ ॥

*ஜயந்தஸ்சாந்தரிக்ஷஸ்ச விததஸ்ச ம்ருகஸ்ததா ।
ஸுக்ரீவோ ரோகமுக்யஸ்ச திதிரேகைகபதாஸ்ரிதா: ॥௪௬॥

ஸம்ஸாத்யஷ்டஸுராஸ்ஸ்லிஷ்டா: கோணேஷ்வீயதேஸ்வரா: ।
ஏவம் க்ரமேண ஸம்பூஜ்ய மண்டூகே வாஸ்துதேவதா: ॥

ஸர்வே ஸர்வே ப்ரதக்ஷிணவஸாத் பதஸம்ஸ்திதம் விது: ।
ப்ரஹ்மாணம் ச நிரீக்ஷ்யைதே ஸ்திதா: ஸ்வஸ்வபதேஷ்வமீ ॥

மஹேந்திரன் – ராக்ஷஸன் முதலியவர்களும், புஷ்பன்-பல்லாடகன் முதலியவர்களும், நான்கு நான்கு தேவதைகள் நான்கு நான்கு ஸ்தானங்களுடையவர்களாவார்கள்.

* ஜயந்தன் – அந்தரிக்ஷன் – விததன் – ம்ருகன் – ஸுக்ரீவன் – ரோகன் – முக்கியன். திதி – இவர்கள் ஒவ்வொரு பதமுடையவர்களாவார்கள்.

இவ்விதமாக, வாஸ்து தேவதைகள், மண்டூகபதத்தில் முறையே, ஸ்தானங்களை புஜிக்கிறார்கள். 47

---

* ஸம்ப்ரதாயே-ஸ்யம் ஸ்லோக: ஏவம் படநீய: —

பர்ஜந்யாத்யாஸ்ச பூஷாத்யா: தௌவாரிகாதய: ।
நாகாத்யாஸ்ச சதுர்விம்ஸத்தேவாஸ்சைகபதேஸ்வரா: ॥ ௪௭

* இந்த விஷயம் பொருத்தமாக இல்லை. ஆகவே இதை இவ்விதம் திருத்திக்கொள்ளவேண்டும்.

பர்ஜன்யன் முதலியவர்கள், பூஷா முதலியவர்கள், தௌவாரிகன் முதலியவர்கள், நாகன் முதலியவர்கள், இவர்கள், இந்திராதிகளைச் சேர்த்து 24 தேவதைகள், ஏகபதாதிபதிகள் ஆவார்கள்.

ஷட்வம்ஶமேகஹ்ருதயம் சதுர்மர்ம சதுஸ்ஸிரம் |
தேஹிநம் வாஸ்துபுருஷம் நிகுப்ஜம் ப்ராக்ஶிரஸம் விது: ||

தஸ்யோத்தமாங்கம் விஜ்ஞேயமார்யகோ நாம தேவதா |
ஸவிந்த்ரோ தக்ஷிணஹஸ்த: ஸாவிந்த்ர: கக்ஷஸம்ஸ்திதே ||௫0||

ஆபஶ்சைவாபவத்ஸஶ்ச ஸகக்ஷௌ வாமதோ புஜௌ |
விவஸ்வாந் தக்ஷிணம் பார்ஶ்வம் வாமபார்ஶ்வம் மஹீதர: || ௫௧ ||

மத்யே ப்ரஹ்மமய: காய: மித்ர: பும்ஸ்த்வம் விதீயதே |
இந்த்ரஶ்சைவேந்த்ரராஜஶ்ச தக்ஷிண: பாத ஸம்ஸ்தித: ||

அந்த அந்த தேவதைக்கு வலமாக பதபுக்தி கிரமம் கூறப்பட்டிருக்கிறது.

தேவதைகள், தங்கள் பதங்களிலிருந்து பிரம்ஹாவை பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். 48

வாஸ்து புருஷனானவன், பூமியில் ஆறு முதுகெலும்புகளுடையவனும், ஒரே ஹிருதயமுடையவனும், நான்கு, மர்மங்களுடையவனும், நான்கு ஸிரைகள் (நரம்புகள்) உடையவனும், மிக க் கூ ன லா ன சரீரமுடையவனும், கிழக்குதிக்கில் தலையையுடையவனும் ஆகிறான் என்று கூறுகிறார்கள். 49

அந்த வாஸ்து புருஷனுடைய சிரமானது, ஆரியகன் என்னும் தேவதையாம். ஸவிந்திரன் வலது புஜமாம். ஸாவிந்திரன் கக்ஷமாகும். ஆபன் - அபவத்ஸன், இவ்விருவரும் முறையே இடது கக்ஷமும் இடது புஜமுமாம். விவஸ்வான் என்பவர் சரீரத்தின் வலது பக்கமாம். மஹீதரன் இடது பக்கமாம். மத்தியில் பிரஹ்மமயமான சரீரமாகும். மித்திரன் பும்ஸ்துவமாம் என்று விதிக்கப்பட்டிருக்கின்றது. இந்திரன் – இந்திரராஜன் இருவரும் வலது பாதமென்று

रुद्रो रुद्रजयो वामपादस्थे शयोर्भवः ।
वास्तुर्ब्रह्मामयेऽप्येवं संस्पृष्टोऽप्यधोमुखो
भवाः ॥

वास्तुमध्ये तु भागेषु ब्रह्मा हृदयमुच्यते ।
निष्कूटांशाः सिरा ज्ञेयाः उक्तैष पुरुषः स्मृतः ॥

गृहे गृहे मनुष्याणां शुभाशुभकरः स्मृतः ।
तस्यांगानि गृहाङ्गैस्तु विद्वान्नैव पीडयेत् ॥

पीड्यन्ते यथासंख्यं गृहिणाङ्गे तु संश्रिताः ।
तस्मात्परिहरेद्विद्वान् पुरुषाङ्गं तु सर्वशः ।
अस्पृश्यं सम्पदे देवतानां सहस्रयः ॥ ௫௪ ॥

கூறப்படுகிறது. ருத்திரன் – ருத்திரஜயன் இருவரும் இடது பாதமாம். இத்தகைய வாஸ்து புருஷன் அதோமுகமாக (பூமியை நோக்கி முகத்துடன்) படுத்திருப்பவனுவான்.

வஸ்துவின் (குறிப்பிட்ட பூமியின்) மூன்றில் ஒரு பாக மான மத்திய பாகத்தில், ஆறு அம்சங்கள் (முதுகெலும்புகள் கிழக்கு வடக்காக இருப்பவைகளாம்.) வஸ்துவின் (பூமியின்) மர்மாக்கள் இருப்பவைகளாம். பிரஹ்மாவானவர் ஹிருதமாகக் கூறப்படுகிருர். நிஷ்கூடாம்சங்கள் நிறர்புகளெனத் தெரிந்துகொள்ளவேண்டும். இவ்விதமாக வாஸ்து புருஷனுடைய வடிவம் கூறப்பட்டிருக்கிறது.

இந்த வாஸ்துபுருஷன், மனிதர்களுடைய வீடுகள் தோறும், சுபாசுபங்களைச் செய்கின்றவராகிருர் என்று கூறப்பட்டிருக்கிறது. 54½

அறிவாளியானவன், இந்த வாஸ்துபுருஷனுடைய அங்கங்களை, கிரஹங்களின் அங்கங்களினுலே பீடிக்கலாகாது அப்படி பீடிக்கப்பட்டால், பீடிக்கப்பட்ட அங்கங்களின் எண்ணிக்கைக்கேற்றபடி, யஜமானனுடைய அங்கங்களில் வியாதிகள் உண்டாகும். ஆகையால், நிச்சயமாக,

அஷ்டாஷ்டாம்ʼஶே சதுஷ்கம்ʼ பத்³மஜந்மநாம்
இஷ்டம்ʼ த்ர்யம்ʼஶம்ʼ வ்யஞ்ஜநம்ʼ ஷோட³ஶாநாம் |
அஷ்டாநாம்ʼ ச: ஷோட³ஶாநாம்ʼ பதா³ர்த⁴ம்
ஜ்ஞாதவ்யம்ʼ ஸ்யாத் தை³வதேஷு (தத்³வதே)ஷு ||

பரமஶாயிபதே³ ப்³ரஹ்மா நவாம்ʼஶக:
ஷட்பதா³ ஆர்யகாத்³யாஸ்ஸுரா: |
த்³வி(த்ர்யம்ʼ)பதா³ஸ்த்வபதா³ ஹி விதி³க்ஷு ஸ்தி²தா:
ப³ஹிரந்யைகபதா³ஸ்ஸுரகணா: ||

இதி மயமதே வாஸ்துஶாஸ்த்ரே பத³தே³வதாவிந்யாஸோ நாம
ஸப்தமோऽத்⁴யாய: |

வாஸ்துபுருஷனுடைய அங்கங்களை பீடிக்காமல் ஒதுக்கிவிட வேண்டும்.

இந்த 45 தேவதைகளும் ஒரு தொகுதியாகும். 56½

64 கண்டங்களுடன் கூடிய மண்டூகபதத்தில், பூமியில், மத்தியில் 4 பதங்கள், பிரம்மாவுக்கு உரியதாகும். அவருக்கு முன்னிலையில் இருப்பவர்களுக்கு (ஆர்யகன் – விவஸ்வான் – மித்திரன் – பூதரன் இவர்களுக்குத்) தனித் தனியே 3 அம்சங்களாகும். 24 பேர்களுக்கு ஒவ்வொரு பதமாகும் 16 தேவர்களுக்கு 8 பாகங்களாகும் ஆபன் – அபவத்ஸன், முதலியவர்களைச் சேர்த்து 16 தேவதைகளாம் என்பதை ஊஹித்துக்கொள்ளவேண்டும். 57½

பரமசாயிபதமென்னும் 81 பதத்தில் மத்தியில் 9 பதம், பிரஹ்மாரிசமாகும். பிரஹ்மாவின் முன்னிருக்கும் ஆர்யகாதி 4 தேவதைகளும் 6 (4) பதங்களுடையவர்களாவார்கள். விதிக்குகளிருக்கின்ற ஆபன் முதலியவர்கள் 2 பதங்கள் உடையவர்களாவார்கள். வெளியில் கூறப்பட்டு இருக்கின்ற 32 தேவதைகளும் ஒரு பதமுள்ளவர்களாவார்கள். 58½

பததேவதாவின்யாஸமென்னும் ஏழாவது அத்யாயம் முற்றும்

𑌅𑌥 𑌅𑌷𑍍𑌟𑌮𑍋𑌽𑌧𑍍𑌯𑌾𑌯𑌃 ॥

𑌦𑍇𑌵𑌾𑌨𑌾𑌂 𑌸𑍍𑌵𑌸𑍍𑌵𑌸𑍍𑌥𑌾𑌨𑌾𑌂 𑌬𑌲𑌿𑌕𑌰𑍍𑌮 𑌵𑌿𑌧𑍀𑌯𑌤𑍇 ।
𑌸𑌾𑌮𑌾𑌨𑍍𑌯𑌾𑌹𑌤𑍍𑌯 𑌕𑍍𑌰𑌮𑍇𑌣 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾𑌦𑍀𑌨𑌾𑌂 𑌯𑌥𑌾𑌕𑍍𑌰𑌮𑌮𑍍 ॥ ௧ ॥

𑌗𑌨𑍍𑌧𑌮𑌾𑌲𑍍𑌯𑍈𑌶𑍍𑌚 𑌧𑍂𑌪𑍈𑌶𑍍𑌚 𑌪𑌯𑌸𑌾 𑌮𑌧𑍁𑌸𑌰𑍍𑌪𑌿𑌷𑌾 ।
𑌪𑌾𑌯𑌸𑍈𑌰𑍍𑌦𑍁𑌗𑍍𑌧𑌾𑌨𑍍𑌨𑌲𑌾𑌜𑍈𑌶𑍍𑌚 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌸𑍍𑌥𑌾𑌨𑌂 𑌸𑌮𑌰𑍍𑌚𑌯𑍇𑌤𑍍 ॥ ௨ ॥

𑌸𑍂𑌰𑍍𑌯𑍇 𑌫𑌲𑌭𑌕𑍍𑌷𑍍𑌯𑌂 𑌸𑍍𑌯𑌾𑌤𑍍 𑌮𑌾𑌷𑌾𑌨𑍍𑌨𑌂 𑌚 𑌤𑌿𑌲𑌾𑌨𑌿 𑌚 ।
𑌵𑌿𑌵𑌸𑍍𑌵𑌤𑌿 𑌵𑌿𑌨𑌿𑌕𑍍𑌷𑌿𑌪𑍍𑌤𑌂 𑌦𑌧𑌿 𑌦𑍂𑌰𑍍𑌵𑌾 𑌚 𑌮𑌿𑌤𑍍𑌰𑌕𑍇 ॥ ௩ ॥

𑌮𑌹𑍀𑌧𑌰𑍇 𑌹𑌵𑌿𑌰𑍍𑌦𑍁𑌗𑍍𑌧𑌮𑍇𑌵𑌮𑌨𑍍𑌤𑌰𑍍𑌬𑌲𑌿𑌃 𑌸𑍍𑌮𑍃𑌤𑌃 ।
𑌪𑌰𑍍𑌜𑌨𑍍𑌯𑌸𑍍𑌯𑌾𑌜𑍍𑌯𑌮𑍈𑌨𑍍𑌦𑍍𑌰𑌸𑍍𑌯 𑌨𑌵𑌨𑍀𑌤𑌂 𑌸𑌮𑌰𑍍𑌪𑌯𑍇𑌤𑍍 ॥ ௪ ॥

எட்டாவது அத்தியாயம்

அந்தந்த ஸ்தானங்களிலிருக்கும் பிரம்ஹாதி தேவதைகளுக்கு பலி கர்மாவானது, ஸாமானியமாகவும் சேர்த்தும் முறையே கூறப்படுகிறது. (1)

கந்தம், புஷ்பமாலை, தூபம், பால், தேன், நெய், பாயஸம், அன்னம் அல்லது பாலும் சாதமும், பொரி இவைகளினாலே பிரம்ஹஸ்தானத்தைப் பூஜிக்கவேண்டும்.

சூரியனுக்கு பழமும் பக்ஷியமுமாகும். விவஸ்வானுக்கு மாஷான்ன (உளுந்து அன்ன)மும் எள்ளுமாகும். மித்திரனுக்கு தயிரும் தூர்வையுமாகும். (தூர்வை - அருகம்புல்) மஹீதரனுக்கு பாலாகும். (இவைகளினால் பலி கொடுக்க வேண்டும் என்பது பொருள்.) இவ்விதமாக உள்ளே இருக்கும் தேவதைகளுக்கு பலி கர்மாவானது கூறப்பட்டிருக்கிறது. 3½

1. பர்ஜன்யனுக்கு நெய்யினாலே பலி கொடுக்க

இந்த்ரகோஶே ச புஷ்பம் ச மதுகந்தாஸ்து பாஸ்கரே |
ஸத்யகே மதுகம் தத்யாத் ப்ருஶாய நவநீதகம் ॥ ௫ ॥

மாஷம் ரஜநிசூர்ணம் ச ககநஸ்ய பலிம் ததேத் |
க்ஷீராஜ்யம் தஹநம் (ச ததேத்) வஹ்நே: ஶிம்பாந்நம்
பூஷ்ணே பாயஸம் ॥ ௬ ॥

கங்குணம் விததே ஶீது ராக்ஷஸே பலிரிஷ்யதே |
ஶிம்பாந்நம் க்ருஸரம் யாம்யே கந்தர்வே ஸர்வகந்தகம் ॥ ௭ ॥

ப்ருங்கராஜே ஸாமுத்ரமத்ஸ்யம் ம்ருஷே மத்ஸ்யௌதநம்
விது: |
நிர்ருதௌ தைலபிண்யாகம் பீஜம் தௌவாரிகே பலி: ॥

ஸுக்ரீவே மோதகம் புஷ்பதந்தகே புஷ்பதோயகம் |
வருணே பாயஸம் யாத்யம் ஶோணிதேநாஸுரே பலி: ॥

வேண்டும், 2. ஜயந்தனுக்கு வெண்ணெயினலேயும், புஷ்பத்தினலேயும், 3. இந்திரனுக்கு புஷ்பத்தினலேயும், 4. பாஸ்கரனுக்கு, தேன்கிழங்குகளாலேயும், 5. ஸத்திய கனுக்கு தேன் அல்லது இலுப்பப்பூவினலும், 6. பிருசனுக்கு வெண்ணெயினலேயும், 7. ககனுக்கு உளுந்து மஞ்சள் பொடியினலும், 8. அக்நிக்கு நெய்யுடன் பாலாலும், 9. பூஷாவுக்கு சிம்பி அன்னமும் பாயஸமும், 10. வித்தனுக்கு கங்குதானியமும், 11. ராக்ஷஸனுக்கு சீது (பழச்சாறு மத்தியம்) என்னும் பானமும், 12. யமனுக்கு சிம்பி அன்னமும் கிருஸரமும், 13. கந்தர்வனுக்கு ஸகலவிதமான கந்தங்களும், 14. பிருங்கராஜனுக்கு கடல்மீனும், 15. மிருஷனுக்கு மத்ஸ்யான்னமும், 16. நிருருதிக்கு (பிதிருக்களுக்கு) எள்ளுப் பிண்ணாக்கும், 17. தௌவாரி கனுக்கு பீஜமும் (பருத்திக்கொட்டையும்) 18. சுக்ரீ வனுக்கு மோதகமும், 19. புஷ்பதந்தனுக்கு புஷ்ப

[illegible] ||௰||

[illegible] ||

[illegible] || கஉ ||

[illegible] || கங ||

[illegible] || கச ||

ஜலமும், 20. வருணனுக்கு பாயஸமும், 21. அஸுரனுக்கு ரத்தத்துடன் தானியமும், 22. சோஷனுக்கு எள்ளுடன் அரிசியும், 23. ரோகனுக்கு உலர்ந்த மத்ஸ்யமும், 24. வாயுவுக்கு நனைந்த மஞ்சளும், 25. நாகனுக்கு மத்யமும் பொரியும், 26. முக்கியனுக்கு தானியங்கள் நிறைந்த தயிரும் நெய்யும், 27. பல்லாடனுக்கு குளான்னமும், 28. ஸோமனுக்கு பால்சோறும், 29. மிருகனுக்கு உலர்ந்த மாமிசமும், 30. அதிதிக்கு மோதகமும், 31. ஆதிதிக்கு எள்ளு பக்ஷணத்துடன் க்ஷீரான்னமும், 32. ஈசானனுக்கு நெய்யும், விசேஷ பலியாகக் கொடுக்க வேண்டும். 12

ஸவிந்திரனுக்குப் பொரியும் தானியமும், ஸாவிந்திரனுக்குக் கந்தோதகமும், இந்திரனுக்கு ஆட்டின் மேதஸ்ஸும், இந்திரராஜனுக்குப் பயத்தம்பொடியும், ருத்திரனுக்கு மாமிச

க்ஷௌத்³ராஜ்யம் சரக்யாஸ்த்வத² விதா³ர்யா லவணோ ப³லி: ।
பூதநாயாஸ்திலம் விஶேஷத்³ரவ்யாண்யந்யாஸ்து ஸாரகம் ॥ ௧௫ ॥

ஸாதா⁴ரணப³லிஶ்ஶுத்³தௌ³த³நம் ஸஸர்பிர் த³தி⁴ ।
ஸர்வேஷாமபி தே³வாநாம் க³ந்தா⁴தீ³நி த³த்³யாத் க்ரமாத் ॥௧௬॥

கந்யகா வாத² வேஶ்யா வா ப³லிதா⁴ரணயோக்³யகா: ।
அங்க³ந்யாஸகரந்யாஸை: ஶுத்³த⁴சேதா யதா²க்ரமம் ॥ ௧௭ ॥

ஓங்காராதி³நமோந்தைஶ்ச மந்த்ரைர்நாமாபி⁴தா⁴ய ச ।
த³த்வா பூர்வம் ஜலம் பஶ்சாத் ஸாதா⁴ரணப³லிம் த³தே³த் ॥

மும், ருத்திரஜயனுக்கு நனைந்த மாமிசமும், ஆபனுக்கு ஆம்பலும் மத்ஸ்ய மாமிசமும், அபவத்ஸனுக்கு சங்கு, முதலைகளின் மாமிசமும், சரகிக்கு மத்யமும் நெய்யும், விதாரிக்கு லவணமும், பூதனைக்கு எள்ளுப்பொடியும், மற்றவளுக்கு (பாபராக்ஷஸிக்கு) பயரின் ஸாரமும், விசேஷ பலி திரவியங்களாகும்.

ஸகல தேவதைகளுக்கும் நெய், தயிர் கலந்த சுத்த அன்னமானது ஸாதாரண பலி திரவியமாகும். ஸகல தேவதைகளுக்கும் கந்தம், புஷ்பம் முதலியவைகளையும் கொடுக்கவேண்டும். 16

கன்னிகையாவது அல்லது வேசியாவது பலியைத் தரிப்பதற்கு யோக்யமாவாள்.

பலிஹரணம் செய்கிறவன் அங்கநியாஸம், கரநியாஸங்களைச் செய்துகொண்டு, சுத்தமான மனதுடன் முறையே, ஓம்காராதியாயும் நமோந்தமாகவும் இருக்கின்ற (ஓம் பர்ஜன்யாய நம: என்பதுபோன்ற) மந்திரங்களினாலே அந்தந்த தேவதைகளின் பெயர்களைச் சொல்லி, முதலில்

*ததஸ்ஸாமான்யபலிம் தத்வா தத்யாத்தேப்யோ யதா பலிம்।
க்ராமாதீனாம் து மண்டூகபதே பரமசாயிகே ॥ ௧௮ ॥

ஸந்தர்ப்ய தேவதாஸ்ஸர்வா: பூர்வோக்தவிதினா தத: ।
விஸர்ஜயேத்ததோ தேவாந் விந்யாஸார்த்தம் து க்ருஹவத் ॥

ப்ரஹ்மாணம் பாஹ்யதேவாம்ச்ச தத்தத்ஸ்தானபதே ந்யஸேத் ।
தேவாலயவிதானார்த்தம் *மார்கார்த்தம் தே ப்ரகீர்த்திதா: ॥

ஜலத்தை விட்டுப் பிறகு ஸாதாரண பலியைக் கொடுக்க வேண்டும்.* 18

புத்திமானாக இருப்பவன் பிறகு அந்த தேவதைகளுக்கு விசேஷமாகக் கூறியிருக்கிற பலியைக் கொடுத்துவிட்டுப் பிறகு அதன்மேல் ஜலத்தையும் விடவேண்டும்.

கிராமாதிகளில் மண்டூகபதம், பரமசாயிபதம் இவைகளில் முன்பு கூறியுள்ள விதியின்படி தேவதைகளைத் திருப்தி செய்து விஸர்ஜனம் செய்யவேண்டும்.

பிறகு (கிருஹாதி) விந்யாஸார்த்தமாக பிரம்ஹாவை யும், பாஹ்யதேவதைகளையும் (ஆர்யகன் முதலான தேவதைகளையும்) அவரவர்களுக்குக் கூறப்பட்டிருக்கின்ற இடங்களில், மந்திரங்களுடன் நியாஸம் (பிரதிஷ்டை அல்லது ஆவாஹனம்) செய்யவேண்டும்.

இவர்கள் தேவாலய நிர்மாணத்திற்காகவும், * நடப்புப் பாதைக்காகவும் கூறப்பட்டிருக்கிறார்கள். மற்றவர்களுக்கு

*தத உத்த்ருத பாம்ஸும், ஹ்ருதயாய நமஸ்தேன ஸாதாரணபலிம் க்ஷிபேத் । இதி க்வசித் பாட: ।

*ராஜார்த்தம் இதி பாடபேத: ।

* ஹ்ருதயாய நம: என்று சொல்லி ஸாதாரண பலியைக் கொடுக்கவேண்டும் என்பது அதிகபாடம்.

* அரசனுக்காகவும் என்பது பாடபேதம்.

𑌶𑍇𑌷𑌾𑌸𑍍𑌤𑍍𑌵𑌨𑌿𑌷𑍍𑌟𑌦𑌾𑌨𑌸𑍍𑌯 𑌰𑌕𑍍𑌷𑌾𑌰𑍍𑌥𑌂 𑌤𑍁 𑌨𑌿𑌵𑍇𑌶𑌿𑌤𑌾𑌃 ।
𑌏𑌵𑌂 𑌗𑍍𑌰𑌾𑌮𑌾𑌦𑌿𑌷𑍁 𑌪𑍍𑌰𑍋𑌕𑍍𑌤𑌂 𑌰𑌹𑌸𑍍𑌯𑌮𑌿𑌤𑌿 𑌕𑍀𑌰𑍍𑌤𑌿𑌤𑌮𑍍 ॥ ௨௨ ॥

𑌸𑍍𑌥𑌪𑌤𑌿𑌰𑍁𑌪𑌵𑌾𑌸𑍀 𑌪𑍍𑌰𑌭𑌾𑌤𑍇
𑌵𑌿𑌶𑍁𑌦𑍍𑌧𑌦𑍇𑌹𑍋 𑌬𑌲𑌿𑌕𑌞𑍍𑌚 𑌗𑍃𑌹𑍀𑌤𑍍𑌵𑌾 ।
𑌵𑌿𑌶𑍇𑌷𑌸𑌾𑌮𑌾𑌨𑍍𑌯𑌬𑌲𑌿𑌂 𑌸𑍁𑌰𑌾𑌣𑌾𑌮𑍍
𑌯𑌥𑍋𑌕𑍍𑌤𑌨𑍀𑌤𑍍𑌯𑌾 𑌵𑌿𑌦𑌧𑍀𑌤 𑌸𑌮𑍍𑌯𑌕𑍍 ॥ ௨௩ ॥

𑌇𑌤𑌿 𑌮𑌯𑌮𑌤𑍇 𑌵𑌾𑌸𑍍𑌤𑍁𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑍇 𑌬𑌲𑌿𑌕𑌰𑍍𑌮𑌵𑌿𑌧𑌾𑌨𑌂 𑌨𑌾𑌮
𑌅𑌷𑍍𑌟𑌮𑍋𑌽𑌧𑍍𑌯𑌾𑌯𑌃 ।

ஸ்தானம் கூறப்படவில்லை. அவர்கள் ரக்ஷைக்காகக் கூறப்பட்டவர்களாவார்கள்.

கிராமாதிகளுக்காக ரஹஸ்யமாகக் கூறப்பட்டிருக்கின்ற விஷயமானது, இங்கு இவ்விதமாகக் கூறப்பட்டிருக்கின்றது.

ஸ்தபதியானவன், முதல்நாள் உபவாசமிருந்து காலையிலெழுந்து, ஸ்நானாதிகள் செய்து சுத்தனாக இருந்துகொண்டு பலிஹரணத்திற்குக் கூறியவைகளில் ஒன்றும் குறைவில்லாமல் எடுத்துக்கொண்டு, கூறியிருக்கின்ற முறையின்படி, தேவர்களுக்கு ஸாமானிய பலியையும் விசேஷ பலியையும் நன்கு செய்யவேண்டும். 23

பலிகர்மவிதானமென்ற எட்டாவது அத்யாயம் முற்றும்.

அத நவமோத்⁴யாய꞉ ॥

க்³ராமாதீ³நாம் மாநம் விந்யாஸம் சாபி வக்ஷ்யதே விதி⁴நா ।
த³ண்டா³நாம் பஞ்சஶதம் க்ரோஶம் தத்³த்³விகு³ணமர்த⁴க³வ்யூதம் ॥

க³வ்யூதம் தத்³த்³விகு³ணம் ஹ்யஷ்டஸஹஸ்ரம் தத்³யோஜநம் விந்த்³யாத் ।
அஷ்டத⁴நுஶ்சதுரஶ்ரா காகணிகா தச்சதுர்கு³ணம் மாஷம் ॥

மாஷசதுர்வர்த⁴நகம் தத்பஞ்சகு³ணம் ஹி வாடிகா கதி²தா ।

ஒன்பதாவது அத்தியாயம்.

இனி கிராமாதிகளின் மானத்தையும் (மானம்-அளவு) அவைகளின் விந்யாஸத்தையும், (விந்யாஸம் - அமைக்கும் முறை) முறைப்படி கூறுகிறேன்.

ஐநூறு (500) கோல் நீளத்திற்கு குரோசம் என்று பெயர்.

அதைப்போல இரண்டு மடங்குக்கு, 1000 கோல் நீளத்திற்கு, அர்த (பாதி) கவ்யூதி என்று பெயர்.

அர்த கவ்யூதியின் இருமடங்கு 2000 கோல் நீளத்திற்கு கவ்யூதி என்று பெயர்.

எண்ணாயிரம் கவ்யூதி கொண்டது ஒரு யோஜனமாகும். (16000000 கோல்)

எட்டு (8) தநுஸ் சச்சதுரமான இடத்திற்கு காணிகை என்று பெயர்.

காணியைப்போல் நான்கு மடங்கு சச்சதுரமான இடத்திற்கு மாஷம் என்று பெயர்.

மாஷத்தைப்போல் நான்கு மடங்கு சச்சதுரமான இடத்திற்கு வர்தனகம் என்று பெயர்.

வாடிகயா ஸார்த்தகுணிதா க்ராமகுடும்பாவநி: ஶ்ரேஷ்டா ||

ஏவம் ஹஸ்தமாநம் தண்டேநோக்தேஷாம் து வக்ஷ்யதே மாநம்।
க்ராமஸ்ய ப்ரதலஸஹஸ்ரை: தண்டை: பர்யந்தமாந-
மிதமுக்தம் || ௪ ||

விம்ஶதி ஸஹஸ்ரதண்டாத் தத்ஸஹஸ்ரவ்ருத்த்யா து பஞ்சமாநம் ஸ்யாத் ।
க்ராமே விம்ஶதி பாகே குடும்பபூமிர்விஶேஷமாத்ரம் ||

தண்டை: பஞ்சஶதைர்யுக்தம் க்ராமஸ்ய மாநமிதம் (உக்தம்) ।
தஸ்மாத் பஞ்சஶதைர்யாவத் விம்ஶத்ஸஹஸ்ரதண்டாந்தம் ||

வர்தனகத்தைப்போல ஐந்து மடங்கு விஸ்தாரமான இடத்திற்கு வாடிகை என்று பெயர்.

வாடிகையைப்போல, நான்குமடங்கு விஸ்தாரமான இடத்திற்கு சிறந்ததான கிராம குடும்பாவனி என்று பெயர்.

இவ்விதமாகப் பூமியின் மானமானது கூறப்பட்டிருக்கிறது.

இனி அவைகளின் அளவைத் தண்டமானத்திஞல் (கோலின் அளவிஞல்) கூறுகிறேன். 3½

கிராமத்திற்கு லக்ஷம் கோல்களிஞல் பர்யந்தமானம் கூறப்பட்டிருக்கிறது. (கிராமத்தின் எல்லைக்கோடிகள் வரையில் லக்ஷம் கோலளவு கூறப்பட்டிருக்கிறது. இது அகலம் நீளம் இவ்விரண்டுகளின் அளவுகளுமாகும்.)

இருபதிஞயிரம் (20000) தண்டம் முதல் முறையே, 20000 தண்டம் வீதமாகக கூட்டிவர, கிராமங்களின் மானமானது ஐந்துவிதமாகும்.

கிராம மானத்தில் 20ல் 1 பாகம் குடும்ப பூமியாகும். (ஜனங்கள் வஸிக்குமிடம் 20ல் 1 பங்காகும் என்பது கருத்து.)

ப்ரோக்தம் சத்வாரிம்ஶத்பேதம் க்ராமஸ்ய மானமிஷ்யதே ।
த்விஸஹஸ்ரதண்டமானம் ஸார்த்தஸஹஸ்ரம் ஸஹஸ்ரதண்டம் ச ॥

நவசதம் ஸப்தசதம் பஞ்சசதம் த்ரிசதமிதி ச
விஸ்தாராஃ ।
நகரஸ்ய ஸஹஸ்ராதி த்விஸஹஸ்ராந்தம் ச தண்டமானம்
ஸ்யாத் ॥ ௮ ॥

நகரஸ்யாஷ்டஸஹஸ்ரைர் தண்டை: பர்யந்தமிஷ்டம்
(மானம் ஸ்யாத்) ।
த்விஸஹஸ்ரக்ஷயத: த்விஸஹஸ்ராந்தம் சதுர்விதம்
மானம் ॥ ௯ ॥

குடும்ப பூமியானது ஐநூறு (500) தண்டபிரமாணம் கூறப்பட்டிருந்தால், அது கிராமத்தின் (சிறிய கிராமத்தின்) அளவாகும்.

அந்த அளவிலிருந்து ஐநூறு (500) கோல் வீதமாக இருபதினாயிரம் (20000) கோல் வரையில் பெருக்கிவர கிராம மானமானது நாற்பது (40) விதமாகும். 6½

நகரத்தின் விஸ்தாரமானது, இரண்டாயிரம் 2000 கோல், ஆயிரத்தைந்நூறு 1500 கோல், ஆயிரம் 1000 கோல், தொள்ளாயிரம் 900 கோல், எழுநூறு 700 கோல், ஐநூறு 500 கோல், முந்நூறு 300 என்று ஏழு விதமாகும்.

நகர விஸ்தாரமானது ஆயிரம் 1000 தண்டம் முதல், இரண்டாயிரம் தண்டம் வரையில் இருப்பதுமாகும். 8

நகரத்தின் பர்யந்த (எல்லைக்கோடியின்) அளவானது எண்ணாயிரம் 8000 கோலாகும். 8000-த்திலிருந்து இரண்டாயிரம் கோல்வீதமாகக் குறைத்து, இரண்டாயிரம் கோல் வரையில் அளக்க, நகர எல்லையின் அளவானது, நான்கு விதமாகும்.

ग्रामः खेटः खर्वटो दुर्गं नगरमिति च पञ्चविधम् ।
त्रेधैकैकं तेषां मानं वक्ष्येऽत्र दण्डतः ॥

अधमाधमे चतुःषष्टिर्दण्डाः ग्रामस्याष्टाविंशतिशती कथिताः ।
ग्रामस्य मध्यमस्य द्विभागं त्रिभागं तथोत्तमं
प्रोक्तम् ॥ ११ ॥

षट्पञ्चाशद् द्विशतं हीनं खेटं सविंशति
त्रिशतम् ।
मध्यमोत्तममेवं सचतुरशीति त्रिशतदण्डम् ॥ १२ ॥

खर्वटमष्टचत्वारिंशच्चतुश्शतं अधमं च वक्ष्यते ।

(ஜனங்கள் வஸிக்குமிடமானது) கிராமம் 1, கேடம் 2, கர்படம் 3, துர்கம் 4, நகரம் 5 என்று ஐந்துவிதமாகும்.

மூன்று மூன்று பேதமுள்ள அவைகளின் அளவுகளை தண்டமானத்தினால் கூறுகிறேன். 10

அறுபத்திநான்கு 64 தண்ட விஸ்தாரமுள்ளது அதமாதமமான கிராமமாகும்.

அதைப்போல் இரண்டு பங்கு 128 தண்ட விஸ்தாரமுள்ளது மத்தியம கிராமமாகும்.

மூன்று பங்கு விஸ்தாரமுள்ளது உத்தம கிரமமாகும். 11

இருநூத்தி ஐம்பத்தாறு 256 தண்டவிஸ்தாரமுள்ளது அதமகேடமாகும்.

முந்நூத்தி இருபது 320 தண்டவிஸ்தாரமுள்ளது மத்தியமகேடமாகும்.

முந்நூத்தி எண்பத்தி நான்கு 384 தண்டவிஸ்தாரமுள்ளது உத்தமகேடமாகும்.

நானூத்தி நாற்பத்தெட்டு 448 தண்டவிஸ்தாரமுள்ளது அதம கர்படமாகும்.

ஷட்பஞ்சாஶத்த்ரிஷஷ்டிஶதம் ஹீநம் மத்யோத்தமம் ச கர்வ-
டகம் || ௧௩ ||

சத்வாரிம்ஶச்ச ஷட்ஶதத்வயம் து சதுரோத்தரம் ஸப்தஶத-
துர்கம் |
மத்யமம் சாஷ்டஷஷ்ட்யுத்தரம் ஸப்தஶதம் ஶ்ரேஷ்டம் ஹி || ௧௪ ||

த்வாத்ரிம்ஶதஷ்டஶதகம் நகரம் ஷண்ணவத்யஷ்டஶதகம் |
ஷஷ்டிநவஶதத்வயம் மத்யோத்தரம் ஸ்யாத் யதாக்ரமம் ||

ஷோடஶதண்டவிவ்ருத்த்யா வைசித்ர்யம் நவவிதம் பவதி |

ஐநூத்திருபது 520 தண்டமானமுள்ளது மத்திம கர்படமாகும்.

ஐநூத்தி எழுபத்தாறு 576 தண்டமானமுள்ளது உத்தமகர்படமாகும். 13

அறுநூத்தி நாற்பது 640 தண்டமானமுள்ளது அதம துர்கமாகும்.

எழுநூத்திநான்கு 704 தண்டமானமுள்ளது மத்தியம துர்கமாகும்.

எழுநூத்தி அறுபத்தெட்டு 768 தண்டமானமுள்ளது உத்தம துர்கமாகும். 14

எண்ணூத்தி முப்பத்திரண்டு 832 தண்டமானமுள்ளது அதம நகரமாகும்.

எண்ணூத்தறுபது 860 தண்டமானமுள்ளது மத்தியம நகரமாகும்.

தொள்ளாயிரத்து அறுபது 960 தண்டமானமுள்ளது உத்தம நகரமாகும். என்று முறையே கூறப்பட்டிருக்கிறது.

நகரமானமானது 832 தண்டம் முதல் முறையே 960 தண்டம் வரையில் 16 தண்டம் வீதம் கூட்டிவர, நகரமானம் ஒன்பது 9 விதமாகும்.

[illegible] || கசு ||

[illegible] |
[illegible] ||

[illegible] |
[illegible] ||

[illegible] |

நகரத்தின் முக பாகத்தின் நீளமானது, அதன் அகலத்தைப்போல் இரண்டுபங்கு, அகலத்தில் முக்கால் பங்கு. அரைப்பங்கு, கால்பங்கு என (4) விதமாகும். 16

அது அகலத்தில் ஆறில் (6ல்) ஒரு பங்கு, அல்லது எட்டில் (8ல்) ஒரு ப்ங்கு சச்சதுரமாகவோ, அல்லது தான் விரும்புகிற விதமாகவாவது இருக்கவேண்டும்.

அதனுடைய அகல நீளத்தில் தண்டமானத்தினுலே ஒத்தைப் படையான அளவைக் கொள்ளவேண்டும். மீத மிருப்பது வாடபூமியாகும். இது கிராமாதிகளான ஸகல வித வாஸ்துக்களுக்குமாகும்.

இதில் சிரேயஸ்கரமான ஆயாதிகளை உத்தேசித்து, கோலால் அளவைக் கூட்டியாவது, குறைத்தாவது அளவைக் கொள்ளவேண்டும். 18

ஆயம் 1, வியயம் 2, நக்ஷத்திரம் 3, யோநி 4, ஆயுள் (அம்சம்) 5, திதி 6, வாரம் 7, இவைகளை வாஸ்துமானத்தி

---

*[illegible] |

யஜமாநஸ்ய நாமர்க்ஷஜந்மர்க்ஷேணாவிரோதிகம் யத் || க௯ ||

தந்மாநேந ஸமேதம் ஸ்யாத் ஸ்ரீயாஸ் *ஸர்வஸம்பத்ப்ரதம் ।
வ்யாஸாயாமஸமூஹே வஸுநிக்நே அர்கஹ்ருதேऽவஶே-
ஷேऽஹ்ருதே (ஹ்ருதஶேஷம்) || உ0 ||

ஆயவ்யயமவஶிஷ்டம் ஸாமயோக்ஷாஹ்ருதேஷு ச ।
த்வஜதூம்ரஸிம்ஹஶ்வாவ்ருஷகரகஜகாகாஸ்து யோநிகணா: ||உக||

ஸுஷ்டு யோநய உக்தா த்வஜஸிம்ஹவ்ருஷகஜாஸ் ஶுபதா: ।

ஞுலே கணித்துக்கொள்ளவேண்டும். அவைகள் எஜமானனுடைய நாம நக்ஷத்திரத்திற்கும், வாஸ்துவின் ஜன்ம நக்ஷத்திரத்திற்கும் விரோதமில்லாமல் இருக்கவேண்டும். தோஷமில்லாமல் பொருத்தமாக இருக்கும் மானமானது, ஸகலவிதமான ஸம்பத்துக்களையுமளிக்கும்.

வாஸ்துவின் அகலம் நீளம் இவைகளின் கூடுதல் எண்ணை, 8 ஆல் பெருக்கி வரும் தொகையை 12 ஆல் வகுக்க மீதம் வரும் எண்ணானது ஆதாயம் ஆகும். 20

வாஸ்துவின் வியாஸாயாமத்தை (அகலம் நீளம் இவைகளின் கூடுதல் எண்ணை) 9 ஆலே பெருக்கிவரும் தொகையை, 12 ஆல் வகுக்க மீதம் வரும் எண்ணானது வியயமாகும்.

அந்த எண்ணை 3 ஆல் பெருக்கி வரும் தொகையை 8 ஆலே வகுக்க மீதமானது ஜாதியோநிகளாம்.

துவஜம் 1, தூமம் 2, ஸிம்ஹம் 3, நாய் 4, விருஷபம் 5, கழுதை 6, யானை 7, காக்கை 8, இவைகள் எட்டும் யோநிகளாம்.

இந்த யோநிகளில், துவஜம், ஸிம்ஹம், விருஷபம், கஜம், இவைகள் சுபகரமான யோநிகளாகும்.

* ஸர்வஸம்பத்ப்ரதம் இதி பாடாந்தரம் ।

வ்யாஸேऽபி வஸுபி⁴ர்கு³ணிதே த்ரிநவாப்தாவஶேஷம்
ஆய: (தத்ர யத்) ஶிஷ்டம் || ௨௨ ||

நக்ஷத்ரம் பரிணாஹே *த்ரிம்ஶத்³கு³ணிதே திதி²ஸ்ஸப்தஹ்ருதே |
வாரம் ஸூர்யாதி³கமேவம் ஸ்யாத் பக்ஷேவம் ஸர்வவஸ்தூநாம்
கரணீயம் || ௨௩ ||

ஸூர்யாதி³கமேவ †ஸாவநம் வ்யயாதி⁴கம் ஸர்வநாஶம் ஸ்யாத் |

மறுபடியும் வாஸ்துமானத்தை எட்டால் 8 ஆல் பெருக்கி இருபத்தேழால் 27 ஆல் வகுத்து வரும் மீதமானது நக்ஷத்திரமாகும்.

வாஸ்துமானத்தை* முப்பதால் 30 ஆல் பெருக்கி ஏழால் வகுத்து வரும் மீதமானது திதியாகும்.

ஞாயிறு முதலாக வாரத்தைக் கணக்கிட்டுக்கொள்ள வேண்டும். (திதியை பிரதமை முதலாகவும், நக்ஷத்திரத்தை அசுவதி முதலாகவும் கொள்ளவேண்டுமென்பது பொருள்.)

---

*அத்ரைவம் பாடோ² யோஜ்ய: —

த்ரிம்ஶத்³கு³ணே திதி²ஸ்திதி²ஹ்ருதே ஸ்யாத் |

வாஸ்வம்ஶே நவகு³ணிதே ஸப்தஹ்ருதே வாரகோऽவஶிஷ்டம் |

தஸ்மிந் யுக³கு³ணிதே ஸ்யாந் நவஹ்ருதிஶேஷேऽவஶிஷ்டமம்ஶகம் ||

‡ஸாஹஸம் இதி பாட²: |

*இங்கு இவ்விதம் பாடத்தை சோதித்துக்கொள்ள வேண்டும்:—

வாஸ்துமானத்தை முப்பதால் 30 ஆல் பெருக்கி பதினைந்தால் 15 ஆல் வகுத்து வரும் மீதமானது திதியாகும்.

ஒன்பதால் 9 ஆல் பெருக்கி ஏழால் 7 ஆல் வகுத்துவரும் மீதம் வாரமாகும்.

நான்கால் 4 ஆல் பெருக்கி ஒன்பதால் 9 ஆல் வகுத்து வரும் மீதம் அம்சமாகும்.

விபரீதே து விபத்திஸ்ஸ்யாத் தஸ்மாத் ஸம்யக்பரீக்ஷ்ய
கர்தவ்யம் ॥ ௨௪ ॥

த்வாதசஸாஹஸ்ரைர்விப்ரை†ரதிவஸிதமுத்தமோத்தமம் ஸ்ம்ருதம்।
தசஸாஹஸ்ரைர் மத்யமமத்யமம் ஸ்யாதஷ்டஸாஹஸ்ரை: ॥

ஸப்தஸாஹஸ்ரைர் விப்ரைர் மத்யமோத்தமமிதீஷ்டம் ஸ்யாத்।
ஷட்ஸாஹஸ்ரைர் மத்யமமத்யமம் து பஞ்சஸாஹஸ்ரை: ॥

அதமோத்தமம் து சதுஸ்ஸாஹஸ்ரைஸ்
த்ரிஸாஹஸ்ரை: ।

ஆதாயம் அதிகமானல் அது சௌக்கியத்தையளிக்கும். வியயம் அதிகமானல் அது ஸர்வ நாசத்தையளிக்கும். ஆயாதிகள் விபரீதமாக இருந்தால், அது ஆபத்தையளிக்கும். ஆகையால் ஆயாதிகளை நன்கு கவனித்துக் கொள்ளவேண்டும். 24

பன்னீராயிரம் 12000 பிராம்ஹணர்கள் வஸிக்கின்ற கிராமமானது உத்தமோத்தம கிராமமாகும்.

பதினுயிரம் 10000 பிராம்ஹணர்கள் வஸிக்கின்ற கிராமமானது உத்தம மத்தியம கிராமமாகும்.

எண்ணுயிரம் 8000 பிராம்ஹணர்கள் வஸிக்கின்ற கிராமமானது, உத்தமாதம கிராமமாகும்.

ஏழாயிரம் 7000 பிராம்ஹணர்கள் வஸிக்குமிடம் மத்தியமோத்தம கிராமமாகும்.

ஆருயிரம் 6000 பிராம்ஹணர்கள் வஸிக்குமிடம் மத்தியம மத்தியம கிராமமாகும்.

ஐயாயிரம் 5000 பிராம்ஹணர்கள் வஸிக்கும் கிராமமானது மத்திம அதம கிராமமாகும்.

---

†ரதிஷ்டிதம் இதி பாட: ।

𑌅𑌯𑌤𑌵𑌾𑌸𑌂 𑌵𑌿𑌪𑍍𑌰𑌸𑌹𑌸𑍍𑌰𑌾𑌯𑌾𑌮𑍇𑌵 𑌨𑌿𑌷𑍍𑌯𑌤𑍇 ॥

𑌸𑌾𑌹𑌸𑍍𑌰𑌂 𑌵𑌿𑌪𑍍𑌰𑌸𑌂𑌵𑍇𑌶𑍍𑌯𑌂 𑌨𑍀𑌚𑍋𑌤𑍍𑌤𑌮𑌮𑌿𑌤𑌿 𑌸𑍍𑌮𑍃𑌤𑌮𑍍 ।
𑌸𑌪𑍍𑌤𑌶𑌤𑍈𑌰𑍍𑌯𑌤𑍍 𑌨𑍀𑌚𑌮𑌧𑍍𑌯𑌮𑌂 𑌪𑌞𑍍𑌚𑌶𑌤𑍈𑌸𑍍𑌤𑍁 𑌨𑍀𑌚𑌾𑌧𑌮𑌮𑍍 ॥

𑌸𑌾𑌷𑍍𑌟𑌶𑌤𑌂 𑌤𑍁 𑌦𑍍𑌵𑌿𑌗𑍁𑌣𑌂 𑌤𑍍𑌰𑌿𑌗𑍁𑌣𑌂 𑌚𑌤𑍁𑌰𑍍𑌗𑍁𑌣𑌂 𑌤𑌥𑌾𑌶𑍀𑌤𑌿𑌃 ।
§𑌅𑌷𑍍𑌟𑌾𑌷𑍍𑌟𑌕(𑌯𑍁𑌕)𑌵𑌿𑌪𑍍𑌰𑌾𑌣𑌾𑌂 𑌗𑍍𑌰𑌾𑌮𑌂 𑌵𑌾 𑌪𑍍𑌰𑌵𑍇𑌶𑌨𑌮𑍍 ॥

𑌆𑌦𑌿𑌶𑍈𑌵𑌾𑌦𑌿𑌵𑌿𑌪𑍍𑌰𑍈𑌃 𑌦𑌶𑌮𑍇𑌦𑌂 𑌸𑍍𑌵𑌰𑍂𑌪𑌕𑌂 𑌸𑍍𑌮𑍃𑌤𑌮𑍍 ।
𑌅𑌨𑍍𑌯𑌦𑍇𑌶𑌸𑍍𑌥𑌾𑌨𑌾𑌂 𑌚𑍈𑌵 𑌦𑌾𑌨𑌂 𑌦𑌶𑌮𑌹𑌸𑍍𑌰𑌾𑌣𑌿 𑌚𑍈𑌵𑌹𑌿 ॥

நாலாயிரம் 4000 பிராம்ஹணர்கள் வஸிக்கும் கிராமமானது அதமோத்தம கிராமமாகும்.

மூவாயிரம் (3000) பிராம்ஹணர்கள் வஸிக்கின்ற இடமானது அதம மத்தியம கிராமமாகும்.

இரண்டாயிரம் (2000) பிராம்ஹணர்ாள் வஸிக்கின்ற கிராமமானது அதமாதம கிராமமாகும்.

ஆயிரம் (1000) பிராம்ஹணர்கள் வஸிக்கின்ற கிராமமானது நீசோத்தம கிராமமாகும் என்று சில்பாசார்யர்கள் கூறியிருக்கிறார்கள்.

எழுநூறு (700) பிராம்ஹணர்கள் வஸிக்கின்ற கிராமமானது நீசமத்தியம கிராமமாகும்.

ஐநூறு (500) பிராம்ஹணர்கள் வஸிக்கின்ற கிராமமானது நீசாதம கிராமமாகும்.

முறையே, நூத்தெட்டு 108 (1) பிராம்ஹணர்கள் அதைப்போல் இருமடங்கு 216 (2) பிராம்ஹணர்கள் மும்மடங்கு 324 (3) பிராம்ஹணர்கள், நான்கு மடங்கு 432 (4) பிராம்ஹணர்கள், எண்பது 80 (5) பிராம்ஹணர்

§𑌦𑌶𑌮𑍇𑌦𑌸𑌮𑌯𑍁𑌕𑍍𑌤𑌾𑌯𑌾𑌂 ‘𑌅𑌷𑍍𑌟𑌾𑌯𑍁𑌕𑌵𑌿𑌪𑍍𑌰𑌾𑌣𑌾𑌂’ 𑌇𑌤𑌿 𑌪𑌾𑌠𑌭𑍇𑌦𑌂 𑌯𑍁𑌕𑍍𑌤𑌮𑌿𑌤𑌿 𑌭𑌾𑌤𑌿 ।

ஷட்கைகாஷ்டாம்ஶவிப்ரேதம் க்ஷுத்ரகம் ஸ்யாத்தஶைகஶோம
பேதி கதிதம் ।
தஸ்ய ஸ்வல்பாயஸித்தம் ஶேஷாணாம் த்வாதஶாதி ॥ ௩௧ ॥

யுக்மா†யுக்மவிபாகை: த்விவிதம் ஸ்யாத் ஸகலவஸ்து
விந்யாஸம் ।
யுக்மே ஸூத்ரத்வயம் ஸ்யாத் அயுக்மே பதமத்யே ச
வீதீ ஸ்யாத் ॥ ௩௨ ॥

ஸம்மிஶ்ராமிஶ்ரஸங்கரஶ்லேஷஸம்ஹாரம் ஸ்யாத் ஸர்வஜந்தூநாம் ।
த்வயோகவேஶம் ஸ்வஸ்திகமித ஸர்வம் ப்ரத்வம்ஸம் சைவ ॥

கள் * ஆறுபத்திநான்கு 64 (6) பிராம்ஹணர்கள், ஐம்பது 50 (7) பிராப்ஹணர்கள், முப்பத்திரண்டு 32 (8) பிராம்ஹணர்கள், இருபத்திநான்கு 24 (9) பிராம்ஹணர்கள், பன்னிரண்டு 12 (10) பிராம்ஹணர்கள், பதினறு 16 (11) பிராம்ஹணர்கள், வஸிக்குமிடமானது க்ஷுத்ர (சிறிய) கிராமமாகும். எனவே சிறிய கிராமங்கள் பத்து (10) விதமாகும். 31

ஸகலவிதமான வஸ்து விந்யாஸமும், யுக்மம் என்றும், அயுக்மம் என்றும் இரண்டுவிதமாகும். (யுக்மம் - இரட்டை வரிசை. அயுக்மம் - ஒற்றை வரிசை.) யுக்மத்தில் ஸூத்திர பதம் இருக்கவேண்டும். அயுக்மத்தில் பதத்தின் மத்தியில் வீதி இருக்கவேண்டும். 32

இவ்விரண்டும் ஒன்றோடொன்று சேர்ந்தால், அது ஸகல ஜீவராசிகளுக்கும் கெடுதியை விளைவிக்கும். 32½

---

†யுக்மே விந்யாஸே இதி பாடாந்தரம் ।

* 64, 50 இரண்டு எண்களுக்குப் பதிலாக 48 என்று இருக்க வேண்டுமென்று தோன்றுகிறது. அப்பொழுது அல்பகிராமம் 10 விதமாகும்.

𑌪𑍍𑌰𑌸𑍍𑌤𑌾𑌰𑌂 𑌪𑍍𑌰𑌕𑍀𑌰𑍍𑌣𑌕𑌂 𑌤𑌥𑌾 𑌨𑌨𑍍𑌦𑍍𑌯𑌾𑌵𑌰𑍍𑌤𑌕𑌂 𑌪𑌰𑌾𑌗𑌮𑍇𑌵
𑌪𑌦𑍍𑌮𑌂 ।
𑌤𑌥𑌾 𑌶𑍍𑌰𑍀𑌪𑍍𑌰𑌤𑌿𑌷𑍍𑌠𑌿𑌤𑍇 𑌦𑍈𑌵𑌾𑌦𑌷𑍍𑌟𑌵𑌿𑌧𑌂 𑌗𑍍𑌰𑌾𑌮𑌲𑌕𑍍𑌷𑌣𑌮𑍍 ॥

𑌸𑌰𑍍𑌵𑍇𑌷𑌾𑌂 𑌗𑍍𑌰𑌾𑌮𑌾𑌣𑌾𑌂 𑌮𑌙𑍍𑌗𑌲𑌵𑍀𑌥𑍍𑌯𑌾𑌵𑍃𑌤𑌾 𑌬𑌹𑌿𑌰𑍍𑌨
𑌬𑌹𑌿𑌃 ।
𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌸𑍍𑌥𑌾𑌨𑌂 𑌸𑌮𑍁𑌦𑍍𑌦𑍃𑌤𑌂 (𑌸𑌮𑍁𑌦𑌿𑌤𑌂) 𑌤𑌤𑍍𑌰 𑌦𑍇𑌵𑌾𑌲𑌯𑌂
𑌤𑌥𑌾 𑌵𑌾 𑌪𑍀𑌠𑌂 ॥ ௩௫ ॥

𑌏𑌕𑌦𑍍𑌵𑌿𑌤𑍍𑌰𑌿𑌚𑌤𑍁𑌰𑍍𑌭𑌿𑌃 𑌪𑌞𑍍𑌚𑌭𑌿𑌰𑌪𑌿 𑌕𑌾𑌰𑍍𑌮𑍁𑌕𑍈𑌃
𑌸𑌮𑌾𑌰𑍍𑌗𑌤𑌃 ।
𑌪𑍍𑌰𑌾𑌕𑍍𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌗𑍍𑌗𑌤𑌮𑌾𑌰𑍍𑌗𑌃 𑌋𑌜𑍁𑌦𑌣𑍍𑌡𑌮𑌹𑌾𑌪𑌥𑌾𑌵𑍍𑌯𑌯𑌾𑌃 ॥

கிராமமானது தண்டம் 1, ஸ்வஸ்திகம் 2, பிரஸ்தரம் 3, பிரகீர்ணகம் 4, நந்தியாவர்த்தம் 5, ப்ராகம் 6, பத்மம், 7 ஸ்ரீ பிரதிஷ்டிதம் 8 என்று எட்டு (8) விதமாகக் கூறப் பட்டிருக்கிறது. 34

ஸகலவிதமான கிராமங்களுக்கும் வெளிப்பக்கமானது மங்கள வீதியினால் சூழப்பட்டிருக்கவேண்டும் அதற்கு வெளியில் வீதி இருக்கக்கூடாது. (மங்கள வீதி — தேவதைகள் விவாஹமான தம்பதிகள் முதலியவர்கள் ஊர்வலம் வருவதற்கான வீதி.)

பிரம்ஹஸ்தானமானது முன்னமே கூறப்பட்டிருக்கிறது. அதில் தேவாலயம் அல்லது பீடம் இருக்கவேண்டும். 35

கிராமத்தின் பாதையானது ஒரு (1) வில், இரண்டு (2) வில், மூன்று (3) வில், நான்கு (4) வில் அல்லது ஐந்து (5) வில் அகலம் உள்ளதும், கிழக்கு மேற்காகச் செல்கின்ற வழியாகவும் இருந்தால், அதற்கு ருஜுமார்க்கம் என்றும், தண்டமார்க்கம் (தம்பமார்க்கம்) என்றும், மஹாபதம் என்றும் பெயர். 36

---

§ 𑌸𑌮𑍁𑌦𑌿𑌤𑌂 𑌇𑌤𑌿 𑌪𑌾𑌠𑌾𑌨𑍍𑌤𑌰𑌮𑍍 ।

[illegible]

[illegible] ‖

[illegible] *[illegible]

[illegible]

[illegible] ‡[illegible] ‖

[illegible]

[illegible] ‖ கூ ‖

நடுத்தரமான (மூன்று வில்) அகலமுள்ள வீதியானது பிரம்ஹ வீதி என்று கூறப்படும். அதுவே (அந்த கிராமத்திற்கு) நாபியாகும். (நாபி -- தொப்பிள்)

மத்தியில் துவாரங்கள் (சந்துகள்) இருக்கின்ற வீதியானது ராஜ வீதியாகும். இதன் இரண்டு பக்கங்களிலும் சிறிய சந்துகளிருப்பதாகும். 37

சிறிய வீதிகள் எல்லாவற்றிற்கும் குட்டிமகம் என்று பெயர்.

ரதம் செல்லக்கூடிய மார்க்கமானது, மங்கள வீதி என்று கூறப்படுகிறது.

அதற்குக் குறுக்கே வழியுள்ளதானல், அதற்கு நராசபதம் என்று பெயர் வழங்கப்படுகிறது. 38

வடக்கு நோக்கிச் செல்லுகின்ற மார்க்கங்கள் க்ஷேத்ரம் என்றும, அர்களம் என்றும், வாமனம் என்றும் பெயர் உள்ளவைகளாம்.

கிராமத்தைச் சுற்றிலுமிருக்கும் வீதியானது, மங்கள வீதி

---

*[illegible] । இதி பாடாந்தரம் ।

‡[illegible] । இதி பாடாந்தரம் ।

விப்ராணாமிஹ பாஹுல்யம் யத்ர தந்மங்கலம் ஸ்ம்ருதம்
ந்ருபவணிஜாம் பாஹுல்யம் யத்ர தத்புரமுச்யதே ।
ததிதரஜநவாஸம் க்ராமமித்யுச்யதே புதை:
ஶேஷிதம் வஸிதம் யத் தாபஸாநாம் மடாலயம் ॥ ச0 ॥

க்ராமஸ்ய ப்ராங்முகம் மார்கம் ககநீக்ருத தண்டவத் தந்மத்யே ।
சாரசதுஷ்கயுக்தம் தண்டகமிதி கத்யதே முநிபி: ॥ சக॥

தண்டவதேகவீதீ சாபி ஸ்யாத் தண்டகம் ப்ரோக்தம் ।
ஸந்தியுக்தே க்ராமே வஸிதோ மார்கம் வதந்தி ததா
பஹி: ॥ சஉ. ॥

என்று பெயருள்ளதாகும். புரத்தை (பட்டணத்தை)ச் சுற்றிலுமிருக்கும் வீதியானது, ஜன வீதி என்று கூறப்படும். பெரியோர்கள் கிராமம்-புரம் இவ்விரண்டுகளின் வீதிக்கும் ரத்யை என்னும் பெயரைக் கூறுகிறார்கள். 39

பிராம்ஹணர்கள் நிறைந்திருக்கின்ற கிராமத்திற்கு மங்களம் என்று பெயர். அரசர்களும் (க்ஷத்திரியர்களும்) வைசியர்களும் நிறைந்திருக்கின்ற வஸ்துவுக்கு புரம் என்று பெயர். மற்ற ஜனங்கள் வஸிக்கின்ற இடத்திற்கு கிராமம் என்று பெயர் கூறப்பட்டிருக்கின்றது. தபஸ்விகள் வஸிக்கின்ற இடத்திற்கு மடம் என்று பெயராம். 40

கிராமத்தின் மார்க்கமானது, கிழக்கு முகமாகவோ அல்லது வடக்கு முகமாகவோ ககனீகிருதமான (படியப் போடப்பட்ட) தண்டத்தைப்போல இருந்து, அதன் நடுவில் நான்கு (4) சந்துகளிருந்தால், முனிவர்கள் அந்த மாக்க்கத்தை தண்டகம் (தண்டாகாரமான மார்க்கம்) என்று கூறுகின்றார்கள்.

சந்துகளில்லாமல் தண்டம்போல ஒரே வீதியாக இருந்தாலும் அதற்கும் தண்டம் என்று பெயர், 41½

[illegible] ।
[illegible] ॥

[illegible] ।
[illegible] ॥

[illegible] ।
[illegible]
[illegible] ॥ ௪௫ ॥

[illegible]
[illegible] ।
[illegible]
[illegible] ॥ ௪௬ ॥

நவ பதங்களுடன் கூடிய கிராமத்தில், பதத்திற்கு வெளியில் நான்கு திக்குகளிலும் வழிகள் அமைந்திருக்க வேண்டும். அந்த வழியில் வடகிழக்கிலிருந்து தென் திசை நோக்கி கிழக்கு வீதி செல்லவேண்டும். அந்த வழியிலிருந்து தென்கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி வீதியானது செல்லவேண்டும். தென் திக்கிலிருந்து வடக்கு நோக்கி வீதியானது செல்லவேண்டும். அந்த வழியானது வட மேற்கு திசையிலிருந்து கிழக்கு திக்கை நோக்கிச் செல்ல வேண்டும். இவ்விதமாக நான்கு திக்குகளிலும் ஸ்வஸ்திகத்தைப்போல் நான்கு வழிகள் அமைந்திருந்தால் அதற்கு ஸ்வஸ்திகம் என்று பெயர் கூறப்படுகின்றது. 44½

(கிராமத்தின்) கிழக்கு மேற்கு பாகங்களில், வடக்கு நோக்கிச் செல்லுகின்ற வழிகள், மூன்று (1) நான்கு (2) ஐந்து (3) ஆறு (4) அல்லது ஏழு (5) இருந்தால் இந்த ஐந்துகளுக்கும் பிரஸ்தாரம் என்று பெயராம். 45½

கிழக்கு நோக்கி நான்கு (4) வழிகளும், வடக்கு நோக்கி

[illegible] ॥ ௪௭ ॥

[illegible] ॥ ௪௮ ॥

[illegible] ॥ ௪௯ ॥

[illegible] ॥ ௫௦ ॥

பன்னிரண்டு (12) பதினொன்று (11) பத்து (10) ஒன்பது (9) அல்லது எட்டு (8) மார்கங்களிருந்தால் இந்த ஐந்து விதங்களுக்கும் பிரகீர்ணகம் என்று பெயர் 46½

கிழக்கு மேற்காக ஐந்து (5) வழிகளும், வடக்கு நோக்கி பதிமூன்று (13) பதினான்கு (14) பதினைந்து (15) பதினாறு (16) அல்லது பதினேழு (17) வழிகளிருந்து, நான்கு திக்குகளிலும் நான்கு (4) வழிகளுமிருந்தால், இதற்கு நந்தியாவர்தம் என்று பெயர். 48

கிராமம் அல்லது நகரத்தின் வெளிப்பக்கத்தில் நந்தியாவர்தத்தைப் (நந்தியாவட்டம்பூ) போல பல சந்துகளும், உள்கையில் பல வழிகளும் அமைந்திருந்தால், இதற்கு நந்தியாவர்தாபம். என்று பெயர். 49

வடக்கு நோக்கிச்செல்லுகின்ற சந்துகள் பதினெட்டு (18) முதல் இருபத்திரண்டு (22) வரையிலும், கிழக்கு

𑌪𑍍𑌰𑌾𑌕𑍍𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌗𑍍𑌗𑌤𑍈𑌰𑍍𑌮𑌾𑌰𑍍𑌗𑍈𑌃 𑌸𑌪𑍍𑌤𑌭𑌿𑌰𑍍𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑍋𑌤𑍍𑌤𑌰-
𑌸𑍍𑌥𑌿𑌤𑍈𑌶𑍍𑌚 𑌸𑌮𑍈𑌃 ।
𑌷𑌡𑍍𑌪𑌞𑍍𑌚𑌭𑌿𑌰𑍍𑌵𑌾 𑌯𑌾𑌤𑍈𑌸𑍍𑌤𑍁 *𑌤𑍍𑌰𑌿𑌚𑌤𑍁𑌰𑍍𑌭𑌿𑌃 𑌪𑌦𑍍𑌮𑌕𑌂 𑌭𑌵𑍇𑌤𑍍 ॥

𑌅𑌷𑍍𑌟𑌭𑌿𑌰𑍍𑌯𑌦𑌿 𑌪𑍍𑌰𑌾𑌗𑍍𑌗𑌤𑍈𑌰𑍍𑌮𑌾𑌰𑍍𑌗𑍈𑌰𑍁𑌦𑌗𑍍𑌗𑌤𑍈𑌸𑍍𑌤𑍍𑌵𑌷𑍍𑌟𑌾-
𑌵𑌿𑌂𑌶𑌤𑌿𑌭𑌿𑌃 ।
𑌷𑍋𑌡𑌶𑍈𑌷𑍍𑌷𑍋𑌡𑌶𑍈𑌰𑍍𑌵𑌾𑌪𑌿 𑌪𑍍𑌰𑌾𑌗𑍁𑌦𑌗𑍍𑌗𑌤𑍈𑌰𑍍𑌯𑌦𑌿 ॥

𑌤𑌚𑍍𑌛𑍍𑌰𑍀𑌪𑍍𑌰𑌤𑌿𑌷𑍍𑌠𑌿𑌤𑌂 𑌪𑍍𑌰𑍋𑌕𑍍𑌤𑌮𑌷𑍍𑌟𑌵𑌿𑌧𑌂 𑌗𑍍𑌰𑌾𑌮𑌲𑌕𑍍𑌷𑌣𑌮𑍍 ।
𑌅𑌥𑌵𑌾 𑌶𑍍𑌰𑍀𑌵𑌤𑍍𑌸𑌾𑌦𑌿𑌕𑌲𑍍𑌪𑌯𑌿𑌤𑌵𑍍𑌯𑌂 𑌤𑌦𑍍𑌵𑌿𑌨𑍍𑌯𑌾𑌸𑌤𑌃 ॥௫௩॥

முகமாகச் செல்லுகின்றவழிகள் ஆறும் (6) அமைந்திருந்தால் அதற்கு பராகம் என்று பெயர் கூறப்பட்டிருக்கிறது. 50

கிழக்கு மேற்காகச் செல்லுகின்ற வழிகள் ஏழும், வடக்கில் செல்லுகின்ற வழிகள், மூன்று (3) நான்கு (4) ஐந்து (5) ஆறு (6) அல்லது ஏழும் (7) அமைந்திருந்தால், அந்த கிராமத்திற்கு பத்மம் என்று பெயர். இது மூன்று முதல் ஏழு வரையிலுள்ள வழிகளினாலே ஐந்து விதமாகும். 51

கிழக்கு முகமாக எட்டு (8) வழிகளும், வடக்கு முகமாக இருபத்தெட்டு (28) வழிகளும் இருந்தாலும், அல்லது கிழக்கு முகமாக பதினாறு (16) வழிகளும், வடக்கு முகமாக பதினாறு (16) வழிகளும் இருந்தாலும், அந்த கிராமமானது ஸ்ரீ பிரதிஷ்டிதம் என்று கூறப்படும்.

இவ்விதமாக தண்டகம் 1. ஸ்வஸ்திகம் 2. பிரஸ்தரம் 3. பிரகீர்ணகம் 4. நந்தியாவர்தம் 5. பராகம் 6. பத்மம் 7. ஸ்ரீ பிரதிஷ்டிதம் 8. என்று, கிராமங்கள் எட்டு (8) விதமாக கூறப்பட்டிருக்கின்றன. 52½

அல்லது * ஸ்ரீவத்ஸாதி விந்யாஸங்களைக் கல்பித்துக் கொள்ளவேண்டும். 53

---

*[illegible] ।

* பத்மவிந்யாஸத்தில் ஸ்ரீவத்ஸம் என்பது கூறப்படவில்லை.

ஸர்வேஷாம் க்ராமாணாம் நாபிம் ந வேதயேத் ஸுதீ: |
க்ராமே வாத க்ருஹே வா தண்டச்சேதாதி நைவ
கர்தவ்ய: || ௫௪ ||

ஸகலாத்யாஸநாந்தகம் விந்யாஸார்தம் பதம்
பவேத் க்ருஹாதிஷு |
க்ஷுத்ரே க்ராமே மார்கா: சத்வாரஸ்த்வஷ்டௌ மத்யமே க்ராமே ||

த்வாதச ஷோடச மார்கா க்ராமேஷூத்தமகேஷு து ஸ்யு: |
பல்லாடவி மஹேந்த்ரே ராக்ஷஸவா புஷ்ப
தந்தேஷு த்வாரவதே || ௫௫ ||

புத்திமாகை இருப்பவன், ஸகலவிதமான கிராமங்களிலும், நாபியை (கிராம மத்திய பாகத்தை) பிணைக்காமல் இருக்கவேண்டும். (வாஸ்துவுடன் சேர்க்காமலிருக்க வேண்டும்.)

கிராமத்திலாவது கிருஹத்திலாவது தண்டச்சேதம் செய்யவும் கூடாது. (கோலளவைப் பிரித்து கணக்கிடக் கூடாது.) 54

புத்திமான்கள், ஸகலபதம் முதல் ஆஸநகாந்தபதம் வரையில், கிருஹாதிவிந்யாஸார்த்தம், பதங்களை கல்பித்துக் கொள்ளவேண்டும்.

க்ஷுத்ர (அதம) கிராமங்களில் நான்கு (4) வழிகள் இருக்கவேண்டும்.

மத்தியம கிராமங்களில் எட்டு வழிகள் இருப்பதாகும்.

உத்தம கிராமங்களில் பன்னிரண்டு (12) அல்லது பதினறு (16) வழிகளிருப்பதாகும். 55½

பல்லாடபதம், மஹேந்திரபதம், ராக்ஷஸபதம், புஷ்பதந்தபதம், இவைகள், துவாரயதந ஸ்தானமாகும். (இவைகள் போக்குவரவுக்கு வாயில்படி அல்லது வழி அமைப்பதற்குரிய இடங்களாகும்.)

ஆராயதநஸ்தாநம் ஜலமார்காஸ்தவி சத்வார: |
விததபதேஶ ஜயந்தே ஸுக்ரீவாம்ஶே ச
முக்யபதேபதே || ௫௭ ||

ப்ருஶவ்ருஷப்ருங்கராஜதௌவாரிகஶோஷநாகதிதி ஜலதா: |
ஸ்தாநாந்யுபத்வாராணாமஷ்டௌ (த்வாதஶ) த்வாரோபயோகிதா: ||

த்ரிகரம் பஞ்சகரம் தச்ச ஸப்தகரம் த்வாரவிஸ்தாரம் |
தாரவிமாநேணோச்சயம் அத்யர்த்தம் வாங்க்ரிவிஹீநம்
தத் || ௫௮ ||

ஸர்வேஷாம் க்ராமாணாம் பஹித: பரிவாஹ்ஸ்த்வ
ஸப்ராஸ்த |

இந்த நான்கு இடங்களும் ஜலமார்கங்களுமாம். (ஜலதாரை முதலியவைகளை கல்பிப்பதற்குறிய இடங்களும் ஆகும்.) 56½

விததபதம் (1) ஜயந்தபதம் (2) ஸுக்ரீவபதம் (3) முக்கியபதம் (4) பிருசபதம் (5) விருஷபதம் (6) பிருங்கராஜ பதம் (7) தௌவாரிகபதம் (8) சோஷபதம் (9) நாகபதம் (10) திதிபதம் (11) ஜலதபதம் (12) (ஜலாதிபதிபதம்,) இந்த எட்டு 8 (பன்னிரண்டு 12) ஸ்தானங்களும், உப துவாரங்களுக்கு உரிய இடங்களாகும். (வீட்டுக்குள் நிலைகள் வைத்துக்கொள்ளுவதற்கு உரிய இடங்களாகும். 58

துவாரத்தின் (வாயிற்படியின்) அகலமானது, மூன்று (3) முழம், ஐந்து (5) முழம், அல்லது ஏழு (7) முழமிருக்க வேண்டும். அகலத்தைப் போல் இரண்டு பங்கு உயரம் அல்லது ஒன்றரைப் பங்கு உயர மிருக்க வேண்டும். இந்த அளவில் அதன் காலின் அளவைச் சேர்க்கக்கூடாது. 59

ஸகலவிதமான கிராமங்களுக்கும் வெளியில், நான்கு

𑌗𑍍𑌰𑌾𑌮𑌾𑌦𑌯𑍋 𑌯𑌦𑌿 𑌨𑌦𑍍𑌯𑌾 𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑌤𑍀𑌰𑍇 𑌤𑌦𑌨𑍁𑌤𑍀𑌰𑌾𑌯𑌤𑌾𑌃 ॥ ௧௰ ॥

𑌨𑌵𑌪𑌦𑌂 𑌵𑌾𑌷𑍍𑌟𑌪𑌦𑌂 𑌸𑌪𑍍𑌤𑌪𑌦𑌮𑌥 𑌮𑌧𑍍𑌯𑍇 𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌂
𑌤𑌤𑌃 𑌪𑌰𑌂 𑌦𑍈𑌵𑌮𑍍 ।

𑌮𑌾𑌨𑍁𑌷𑌮𑌥 𑌪𑍈𑌶𑌾𑌚𑌂 𑌕𑍍𑌰𑌮𑌶𑍋𑌂𑌽𑌶𑌂 𑌕𑌲𑍍𑌪𑌯𑍇𑌤𑍍𑌤𑌤𑍍𑌰 ॥

𑌦𑍈𑌵𑌿𑌕𑌮𑌾𑌨𑍁𑌷𑌯𑍋𑌰𑌥 𑌵𑌿𑌪𑍍𑌰𑌾𑌣𑌾𑌂 𑌸𑍍𑌯𑌾𑌤𑍍 𑌗𑍃𑌹𑌶𑍍𑌰𑍇𑌣𑍀 ।
𑌕𑌰𑍍𑌮𑍋𑌪𑌜𑍀𑌵𑌿𑌨𑌾𑌂 𑌸𑍍𑌯𑌾𑌤𑍍 𑌪𑍈𑌶𑌾𑌚𑍇 𑌤𑌤𑍍𑌰 𑌵𑌾
𑌵𑌿𑌪𑍍𑌰𑌾𑌵𑌾𑌸𑌃 ॥ ௧௨ ॥

𑌤𑌸𑍍𑌮𑌿𑌨𑍍 𑌸𑍁𑌰𑌗𑌣𑌭𑌵𑌨𑌂 𑌕𑍍𑌰𑌮𑌶𑌃 𑌪𑍍𑌰𑌾𑌗𑌾𑌦𑌿𑌷𑍁 𑌸𑍍𑌥𑌾𑌪𑍍𑌯𑌮𑍍 ।

பக்கங்களிலும், பெரிய கோட்டைச் சுவர்களும், அகற்கு வெளியில் அகழியும் இருக்கவேண்டும்.

கிராமாதிகளும், நதியின் தென்கரையில் இருந்தால், அது, அந்த நதியை அனுஸரித்து நீண்டிருக்கவேண்டும். 60

கிராமத்தை நவபதம், (அஷ்டபதம்,) அல்லது ஸப்தபதமாகக் கணக்கிட்டால், அதன் மத்தியமானது பிரம்ஹபதமாகும், அதற்கடுத்தது தைவபதமாகும், அதற்கு அடுத்தது மானுஷபதமாகும். அதற்கடுத்தது பைசாசபதமாகும். இவ்விதமாக முறையே ஸ்தானங்களைக் கல்பித்துக் கொள்ளவேண்டும். இந்த இடங்களில், நடுவிலுள்ள பிரம்ஹாம்சத்தை விலக்கி விட்டு, அதையடுத்துள்ள தைவாம்சம், மானுஷாம்சங்களில் பிராம்ஹணர்கள் வஸிப்பதற்கான வீட்டு வரிசையை கல்பிக்கவேண்டும். பைசாச பதத்தில் கர்மோபஜீவிகள் வஸிப்பதற்கு, (தொழில் செய்பவர்கள் வஸிப்பதற்கு) உரியஸ்தானங்களைக் கல்பிக்க வேண்டும், அல்லது அந்த விடத்தில் பிராமணர்களின் வாஸஸ்தானத்தைக் கல்பிப்பதுமாகும்.

அந்தவிடத்தில் தேவகணங்களுக்குரிய தேவாலயங்களை, முறையே கிழக்கு முதல் கல்பிக்க வேண்டும். . 62½

ணதஸ்யாஸ்யமெ விப்ரதேவதாஸ்ரவநம் பவேத் ||௬௩||

சிவஸ்தாநம் (உத்யம்) அமராணாம் ஸம் (ஸவ-)
பாஹ்யே து வா பவேத் |

ப்ருங்கராஜாம்சகே வாபி பாவகே து விநாயகம் || ௬௪ ||

ஈசாம்சே சிவஸ்தாநம் ஸோமாம்சே வா தா
(ந)த்ஸரெஷு வா |

பாஹ்யேஷ்வேஷு ஸாலப்ரேணீம் மாநேந விதிநா கூ— ||

சிவாலயே பரிவாராணாம் ஸ்தாநாநி (க்ரமஸ்தாந)
உச்யதே |

ஸூர்யபதே ஸூர்யம் ஸ்தாபயேத் கார்யம் வேத் ||

இதன் மத்தியில் (இந்த பைசாசபத மத்தியில்) பிராம்ஹணர்கள் வஸிக்குமிடங்களையும், தேவாலயங்களையும் கல்பிப்பதாகும். (63)

கிராமத்திற்கு முற்றிலும் வெளிப்பக்கத்தில், சிவாலய மிருப்பதுமாகும்.

பிருங்கராஜாம்சம் அல்லது பாவகாம்சத்தில் விநாயக ஆலயத்தை நிர்மாணம் செய்யவேண்டும். (64)

ஈசாநும்சத்தில் சிவாலயத்தை நிர்மாணம் செய்ய வேண்டும். ஸோமாம்சம் அல்லது அதற்கடுத்த அம்சங் களில் கல்பிப்பதுமாகும்.

இந்த சிவாலயத்திற்கு வெளிப்பக்கத்தில் வீட்டு வரிசையை, அளவுடனும் விதியுடனும் கல்பிக்கவேண்டும்,

சிவாலயத்தில், சிவபரிவாரங்களுக்குக் கூறப்பட்டிருக் கிற ஸ்தானங்களை இங்கு கூறுகிறேன் —

ஸூர்யபதத்தில் (ஆதித்யபதத்தில்) ஸூரியனை ஸ்தாபிக்கவேண்டும்,

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

அக்னி பதத்தில் காளிகோவிலை நிர்மாணம் செய்ய வேண்டும். (66)

பிருச பாகத்தில் விஷ்ணு ஆலயத்தைக் கல்பிக்க வேண்டும்.

யமபதத்தில் ஷண்முகாலயத்தைக் கல்பிக்கவேண்டும்.

பிருசாம்சத்திலாவது, நிருருதி அம்சத்திலாவது (பிதிரு அம்சத்திலாவது) கேசவாலயத்தை நிர்மாணிப்பதுமாகும்.

ஸுக்ரீவாம்சத்தில் கணபதியின் ஆலயத்தை கல்பிக்க வேண்டும். புஷ்பதந்த பதத்தில் கல்பிப்பதுமாகும்.

ஐயனர் கோவிலை நிருருதி அம்சத்தில் கல்பிக்க வேண்டும்.

வருணும்சத்தில் (ஜலாதிபாம்சத்தில்) விஷ்ணுவின் ஆலயமிருக்கவேண்டும். (68)

இந்த விஷ்ணுவின் ஆலயத்தில், மேல்தலத்திலிருந்து முறையே, ஸ்தானக பிம்பம், ஆஸந பிம்பம், சயநபிம்பம் இம்மூன்றையும் கல்பிப்பதுமாகும்.

அல்லது மூலதலத்தை கடினமாகக் கல்பித்து, அதன்

ஸ்ஹ மதாமுயஷ்யே ஸ்ஹ மஜெ ஹ்ரும்மநுவெ லெவ
ஈநுவயாஃ |
ஃதிராமயஷ்ய வாயள ஃஹவெஷு காதஹாயநீ வாஸ: || ௭0 ||

ஸொமெ யநத(தநயந)ம்ருஹம் வா ஃதஹாணாமாமுயம் தத்ர |
ஈஸம்ஶெஶம்கர ஹவநம் வஜந்யாம்ஶெ ஜயணெ வா || ௭௧ ||

ஸொமெ †யநதம்ருஹம் வா ஶொஷவதெ வா விமாதவஜ்ஜ |

மேல்தலத்தில் ஸ்தானக பிம்பத்தை பிரதிஷ்டை செய்வது மாகும். (69)

ஜிநாலயத்தை ஸுகதாம்சத்தில் (ஸுக்ரீவாம்சத்தில்) கல்பிக்கவேண்டும்.

பிருங்கராஜாம்சத்நில் ராஜகிருஹத்தை நிர்மாணம் செய்யவேண்டும். (ஜிநாலயத்தை என்பது பாடபேதம்.)

வாயுபதத்தில் மதிராலயத்தை (கள்ளுக்கடையை) கல்பிக்கவேண்டும்.

முக்கியாம்சத்தில் காத்தியாயநீ கிருஹத்தைக் கல்பிக்க வேண்டும். (70)

ஸோமாம்சத்தில் தநத கிருஹத்தை (தநகிருஹத்தை) யாவது; ஸப்தமாதாக்களின் ஆலயத்தையாவது கல்பிக்க வேண்டும்.

ஈசாம்சத்தில் சிவாலயத்தை நிர்மாணம் செய்ய வேண்டும். பர்ஜந்யாம்சம் அல்லது ஜயந்தாம்சத்தில் நிர்மாணிப்பதுமாகும். (71)

ஸோமபதம் அல்லது சோஷபதத்தில் தநத(தந) கிருஹத்தைக் கல்பிக்கவேண்டும்.

---

*ஜிநயாஃ இதி வாமாரை |

†ஸொஃம்ருஹம் இதி வாமாரை |

𑌤𑌤𑍍𑌰 𑌗𑌜𑌾𑌨𑌨𑌸𑌦𑌨𑌂 𑌅𑌦𑌿𑌤𑍌 𑌵𑌾 𑌮𑌾𑌤𑍃𑌕𑍋𑌷𑍍𑌠𑌂 𑌸𑌪𑍍𑌤𑌕𑌮𑍍 ॥

𑌮𑌧𑍍𑌯𑍇 𑌵𑌿𑌷𑍍𑌣𑍋𑌰𑍍𑌵𑌿𑌷𑍍𑌣𑍍𑌵𑌾 𑌤𑌤𑍍𑌰 𑌸𑌭𑌾𑌮𑌣𑍍𑌡𑌪𑌂 𑌸𑍍𑌮𑍃𑌤𑌮𑍍 ।
𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌸𑍍𑌥𑌾𑌨𑌾𑌦𑍈𑌶𑌾𑌨𑍇 𑌵𑌾𑌗𑍍𑌨𑍇𑌯𑌾𑌂 𑌵𑌾 𑌸𑌭𑌾𑌙𑍍𑌗𑌣𑌮𑍍 ॥௭௩॥

𑌤𑌦𑍍𑌵𑌾𑌯𑌵𑍍𑌯𑍇 𑌸𑌭𑌾𑌮𑌧𑍍𑌯𑍇 †𑌹𑌰𑌿𑌸𑌦𑌨𑌂 𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑍇 𑌤𑌤𑌃 ।
𑌕𑍍𑌰𑍂𑌰𑌸𑌂𑌸𑍍𑌥𑌂 𑌕𑌲𑍍𑌪𑍇 𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌯𑌦𑌂 𑌪𑌞𑍍𑌚𑌕𑌂 𑌤𑌤𑌃 ॥௭௪॥

𑌯𑍁𑌗𑍍𑌮𑌾𑌯𑍁𑌗𑍍𑌮𑌪𑌦𑍇 𑌚 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌸𑍍𑌥𑌾𑌨𑍇 𑌨𑌵𑌭𑌾𑌗𑍇 ।
𑌵𑍍𑌯𑌵𑌹𑌾𑌰𑍍𑌯𑌂 𑌪𑍍𑌰𑌮𑌾𑌣𑌂 𑌚 𑌅𑌷𑍍𑌟𑌮𑌾𑌂𑌶𑍇 𑌚 𑌕𑍍𑌰𑌮𑌶𑌃 ॥

அவ்விடத்தில் (சோஷாம்சத்தில்) கணேசாலயத்தைக் கல்பிக்கவேண்டும்.

அதிதிபதத்தில் மாதிருகோஷ்டத்தை ஸப்தமாதாக்களின் ஆலயத்தைக் கல்பிக்கவேண்டும். (72)

விஷ்ணுவின் ஆலயமத்தியில் ஸபாமண்டபத்தை நிர்மாணம் செய்யவேண்டுமென்று கூறப்பட்டிருக்கிறது. அந்த ஸபாமண்டபமானது, பிரம்ஹ ஸ்தானத்திற்கு ஈசானிய பாகம் அல்லது ஆக்னேய பாகத்திலிருக்க வேண்டும். (73)

அந்த ஸபாமண்டபமானது விஷ்ணுவாலயத்திற்கு வடமேற்கு பாகத்திலிருக்கவேண்டும். அதை அடுத்து தென்பாகத்தில் விஷ்ணுவின் ஆலயமிருக்கவேண்டும். (73½)

அதன் மத்தியில், பயங்கரமானதும், நம்பிக்கையை உண்டு பண்ணக்கூடியதுமான ஐந்து விஷயங்களிருக்க வேண்டும். (74)

அஷ்டபாகம் அல்லது நவபாகத்தில், இரட்டைப்படை அல்லது ஒற்றைப்படையில், (64 பதம் 81 பதம்போன்ற

---

†𑌹𑌰𑌿𑌸𑌦𑍍𑌮 𑌇𑌤𑌿 𑌪𑌾𑌠𑌾𑌨𑍍𑌤𑌰𑌮𑍍 ।

நலிநகபவநம் ஸ்வஸ்திகநந்த்யாவர்தம் ப்ரலீநகம் சைவ ।
யுக் ஶ்ரீப்ரதிஷ்டிதாக்யம் சதுர்முகஹர்ம்யம் து பத்மஸமம் ॥ ௭௬ ॥

விஷ்ணுச்சந்தவிமாநம் த்ரிதலாதித்வாதஶதலாந்தம் ।
பஹிரேவைதம் ஸர்வம் ப்ராகாராத்தஸ்து விஜ்ஞேயம் ॥

ஸ்திதாஸீநஶயநம் யத்ர யதிஷ்டம் து தத்ர தத்
ஸ்தாப்யம் ।
உத்தமமத்யமாதமநீசாதிகம் க்ரமேணைவம் ॥ ௭௭ ॥

பவநம் க்ராமேஷ்வபி தபிதி நீசம் தொத்தமே ந ஸத்யாஜ ।

வஸ்துக்களில்) பிரம்ஹ ஸ்தானத்தை விலக்கி, கிழக்கு முதலான திக்குகளில், முறையே, 1 நளின கபவனம். 2 ஸ்வஸ்திகம் 3 நந்தியாவர்தம் 4 ப்ர(ந)லீனகம் 5 ஸ்ரீபிரதிஷ்டிதம் 6 சதுர்முகஹர்மியம் 7 பத்மஸமம் 8 விஷ்ணுச்சந்தவிமானம் இவைகளை, திரிதலாதி துவாதசதலாந்தமாக (மூன்று அடுக்கு கோபுரம் முதல் பன்னிரண்டு அடுக்கு கோபுரம் வரையிலுடையதாக) நிர்மாணம் செய்ய வேண்டும். இவ்விதமான கோபுரமானது தேவாலயத்தின் வெளிப்பக்கத்திலும் கல்பிக்கப்படவேண்டும். இவ் விஷயத்தை கிராமாதிகளிலும் கல்பிக்கவேண்டும். (77)

(இவ்விதம் கல்பிக்கப்பட்ட தேவாலயங்களில்) ஸ்தித மூர்த்தி, ஆஸீன மூர்த்தி, சயான மூர்த்தி, இவைகளில் எந்த மூர்த்தி இஷ்டமோ, அந்த மூர்த்தியை பிரதிஷ்டை செய்யவேண்டும்.

விமானமானது முறையே, உத்தமம், மத்யமம், அதமம், நீசம், என்று நான்குவிதமாகக் கூறப்பட்டிருக்கிறது.

கிராமாதிகளில், நீசபவனமானது (மிகச்சிறிய வீடானது)

க்ஷுத்ரே க்ஷுத்ரம் விமானம் யத்யத்ரைவோசிதம்
விதாதவ்யம் ॥ ௭௯ ॥

த்ரிசதுஷ்பஞ்சதலம் தத் ஹீனே ஹீனம்(னம்) ச
ஸாமான்யகம் ।
க்ராமே வா நகரே வோத்க்ருஷ்டே தேவாலயம் து
நீசம் சேத் ॥ ௮௦ ॥

நீசா பவந்தி புருஷா꞉ ஸ்த்ரியோ(அ)பி து³ஶ்ஶீலதாம் யாந்தி ।

கூறப்பட்டிருக்கிறது. ஆயினும் உத்தமமான தேவாலயத்தில் நீச விமானத்தை (அதமாதமமான மிகச் சிறிய விமானத்தை) கல்பிக்கக்கூடாது.

கிராமமானது க்ஷுத்திர கிராமமாக இருந்தால், தேவாலயத்தின் விமானம் க்ஷுத்திரமாக (சிறியதாக) இருப்பதாகும். எங்கு எவ்விதமான விமானம் உசிதமோ, அந்த விமானத்தை அங்கு (அந்த கிராமத்தில்) கல்பித்துக் கொள்ளுவதாகும். 79

அந்த விமானமானது, த்ரிதலம், சதுஸ்தலம், பஞ்சதலம், முதலியவைகளாம். (3, 4, அல்லது 5 தலங்களுடையது.)

ஹீனமான கிராமத்தில், தேவாலயத்தின் விமானமானது, ஹீனமாகவோ அல்லது ஸாமானியமாகவோ இருப்பதாகும்.

உத்க்ருஷ்டமான (பெரிய) கிராமம் அல்லது நகரத்தில் தேவாலயமானது நீசமாக (சிறியதாக) இருந்தால், அந்த கிராமம் அல்லது நகரத்திலிருக்கும் புருஷர்கள், நீசர்கள் (அல்பத்தனம் உடையவர்கள்) ஆவார்கள். ஸ்திரீகள் துச்சீலைகள் (கெட்ட நடத்தையுடையவர்கள்) ஆவார்கள்.

ஆகையால் தேவாலய விமானங்களை, கிராமாதிகளுக்கு ஏற்றபடி ஸமமாகவோ பெரியதாகவோ கல்பிக்கவேண்டும்.

தத்ராஸ் ஸாலயிகம் வா தத்ஸம்வேத்ய (யா)
ப்ரயோக்தவ்யா || அக ||

ஹரிஹரஸ்தானம் வாஸ்துகர்ண்யஸமந்தம் யதேஷ்டம் ஸ்யாத்।
ஸம்வ்ருதா: சண்டேசோ தநத: காளீ ச பூதநா சைவ||

காளீஸுதஸ்ச கல்கீ சைதே த்வாரபாலிகா: ப்ரோக்தா: ।
ப்ராகார்வா த்வாரே ஸர்வம் க்ராமாபிமுகம் தத்
பராங்முகம் வா ஸுபதம் || அஉ ||

விஷ்ணுக்ருஹம் ஸர்வதிக்வக்த்ரம் க்ராமாபிமுகம் வா
ஸுபதம் ।

இவ்விஷயமானது விஷ்ணுவின் ஆலயம், சிவாலயம் இவைகளுக்குக் கூறப்பட்டதாகும்.

[சிவாலயம்-விஷ்ணு ஆலயங்கள், மற்ற வீடுகளைக் காட்டிலும் பெரிதாகவும் உயரமாகவும் இருக்கவேண்டும் என்பது பொருள்]

மற்றபடி வீடுகள் யாவும் மனம்போல் இருப்பதாகும். 81½

சண்டிகேசுவரர் 1, குமாரன் 2, தனதன் 3, காளீ 4, பூதனை 5, காளீஸுதன் 6, கட்கீ 7, இவர்கள் கிராமத்தின் வாயில் காப்பாளர்களாவார்கள்.

கிராமங்களில் சிவாலயமானது, கிழக்கு முகம், அல்லது மேற்கு முகமாக இருக்கவேண்டும். அந்த சிவாலயமானது கிராமாபிமுகமாக இல்லாமலிருப்பது சுபத்தையளிப்பதாகும்.

விஷ்ணுவின் ஆலயமானது எந்த திக்கையும் நோக்கி இருப்பதாகும். கிராமத்தை நோக்கி இருப்பது சுபபலனை அளிப்பதாகும்.

[illegible] ||

[illegible] |
[illegible] ||

[illegible] |
[illegible] ||

[illegible]† [illegible] |

மற்ற தேவதைகளின் ஆலயங்கள் கிழக்கு முகமாக இருக்கவேண்டும்.

ஸப்த மாதாக்களின் ஆலயமானது வடக்கு முகமாக இருக்கவேண்டும். 84

ஸூரியனின் ஆலயமானது மேற்கு முகமாக இருக்க வேண்டும்.

வீடுகளைக் கட்டத் துவங்குவதற்கு முன்னமே தேவாலயங்களைக் கட்டிவிடவேண்டும்.

கிராமாதிகளின் ஹ்ருதயஸ்தானம் (1) முதுகெலும்பு ஸ்தானம் (2) சூலஸ்தானம் (3) ஸூத்திர ஸ்தானம் (4) ஸந்தி ஸ்தானம் (5) கர்ணநாடீ ஸ்தானம் (6) இந்த ஆறு (6) இடங்களில் தேவாலயம் முதலியவைகளை நிர்மாணம் செய்யக்கூடாது. 85½

கோசாலையானது, தேவாலயத்திற்குத் தென்பக்கத்தில் இருக்கவேண்டும். வட பக்கத்தில் பூந்தோட்டம் இருக்க வேண்டும். கிழக்குக் கோபுர வாயிலின் பக்கம் அல்லது மேற்குப் பக்கத்தில் தபஸ்விகள் வஸிக்குமிடம் இருக்க வேண்டும்.

---

† [illegible] |

ஸர்வத்ரைவ ஜலாஶயமிஷ்டம் வாபீ ச கூபகம் ச ||௮௭||

வைஶ்யாநாம் தக்ஷிணத: வஸதிஸ்தாநம் து ஶூத்ராணாம் |
ப்ராச்யாம் வாப்யுத்தரதோ கேஹம் கும்பகார-
குலாலாநாம் || ௮௮ ||

தத்ரைவ நாபிதாநாஞ்ச கர்மோபயுக்தாநாம் |
மத்ஸ்யோபஜீவிநாம் ஸ்தாநம் வாஸம் வாயவ்யதிஶி து ||

பஶ்சிமதிஶி மாம்ஸவ்யவஹர்த்ரூணாம் நிவாஸ: ஸ்யாத் |
தைலோபஜீவிநாம் சோத்தரதிஶி க்ருஹஶ்ரேணி: ||௯௰||

ஜலாசயம் (குளம் முதலியவைகள்) குட்டை, கிணறு இவை எந்தத் திக்கிலும் இருப்பதாகும். 87

(தேவாலயத்திற்கு) தென் பக்கத்தில் வைசியர்களின் வாஸஸ்தலம் இருக்கவேண்டும்.

தேவாலயத்திற்கு நான்கு பக்கங்களிலும் சூத்திரர்களின் வீடுகள் இருக்கவேண்டும்.

கிழக்கு அல்லது வடக்குப் பக்கத்தில் குயவர்களின் வீடுகள் இருக்கவேண்டும். 88

அந்தவிடத்திலேயே நாபிதர்களின் வீடுகளும் மற்ற தொழிலாளர்களின் வீடுகளும் இருக்கவேண்டும்.

வாயு திக்கில் மத்ஸ்யோபஜீவர்களின் (மீன் வியாபாரத்தினாலே ஜீவிப்பவர்களின்) வாஸஸ்தானம் இருக்க வேண்டும். 89

மேற்கு திக்கில் மாமிஸ வியாபாரிகளின் வாஸஸ்தலம் இருக்கவேண்டும்.

வடக்கு திக்கில் எண்ணெ வியாபாரம் செய்யும் வாணியர்களின் வீட்டு வரிசை இருக்கவேண்டும். 90

धनुर्भिस्त्रिपञ्चसप्तभिर्वा नवभिः गृहावधिः
वेश्मकः ।
[illegible] तदूर्ध्वं [illegible] वर्धयेत् क्रमशः ॥ ௯௧ ॥

व्यासाद्द्विगुणावधिकं यावदिष्टं [illegible] ।
तत्रैव हस्तमानेन गेहं कुर्याद्यथाविधि ॥

रुचकः स्वस्तिको वा नन्द्यावर्तं च सर्वतो
भद्रम् ।
[illegible] वेश्मनाम् ॥

दण्डकशालालाङ्गलमथवा शूर्पं यदिष्टं [illegible] ।

வீட்டின் எல்லையானது, மூன்று (3) ஐந்து (5) ஏழு (7) அல்லது ஒன்பது (9) தநுஸ் அகலமுள்ளதாக இருப்பதாகும் என்று கூறப்பட்டிருக்கிறது அந்த அளவுக்குமேல் முறையே இரண்டு இரண்டு கோல் வீதமாக அகலத்தை விருத்திசெய்துகொள்ளுவதாகும். 91

அகலத்தைப்போல இரண்டு பங்கு அளவு வரையில் விருப்பப்படி நீளத்தை வைத்துக்கொள்ளுவதாகும்.

அதே இடத்தில் ஹஸ்தமானத்தினல், விதிப்படி வீட்டைக் கல்பித்துக்கொள்ளுவதுமாகும். 92

ருசகம் 1. ஸ்வஸ்திகம் அல்லது நந்தியாவர்த்தம் 2. ஸர்வதோபத்திரம் 3. வர்தமானம் 4. என்று அவைகளின் உருவபேதத்தினலே நான்குவிதமான வீடுகள் கூறப் பட்டிருக்கின்றன. 93

அந்த வீடுகள் தண்டகம்–1, சாலே–2, லாங்கலம்–3 அல்லது சூர்பம் என்ற பேதங்களுள் இஷ்டமான பேதத்தில் இருப்பதாகும்.

ம்ராமாத் கிஞ்சிதூரதெ வாவகெதியெரவா வாயவ ||௯௪||

வாஸ: ஸ்யாத் ஸ்தபதீநாம் ஶேஷாணாம் தத்ரகுதேவஸ்ய |
தஸ்மாத் கிஞ்சித்தூரதெ ரஜகாதீநாம் நிவாஸ: ஸ்யாத் ||௯௫||

அக்ஞாருகாஷ்டிமாணி வஸேஶாயாம் கொராஸாதெ தூ |
அக்ஞாருயொஷிதஸ்தா: தாம்ராயஸ்ஸீஸமுக்ஷணாஸ்வஹா: ||

வஸேஶாலெ முறுகொக்ஷத்ரியொவிதா *ம ராமாவேஶ்ய |
வ்யாமஸ்தரதிரி உஹெ்ணஃ வஹாஸதெ: ஸ்யாத்
ஶவாவாஸ: || ௯௬ ||

ஶேஷாணாமபி தத்தூரதெ ஷெஶெ ஶ்மஶாநம் ஸ்யாத் |

கிராமத்திற்கு அப்பால் ஸ்வல்ப தூரத்தில் அக்னி மூலை அல்லது வாயுமூலையில் ஸ்தபதிகளின் வாஸஸ்தானம் இருக்க வேண்டும்.

அவ்விடத்தில் மற்றவர்களுக்கும் வீடுகளிருப்பதாகும்.

அதற்கு அப்பால் ஸ்வல்ப தூரத்தில் வண்ணான் முதலியவர்களின் வாஸஸ்தானம் இருக்கவேண்டும். 95

கிராமத்திற்குக் கிழக்கு திக்கில் ஒரு குரோச தூரத்தில் சண்டாளர்கள் வஸிக்கும் குடிசைகள் கல்பிக்கப்பட வேண்டும். அந்த சண்டாளர்களின் ஸ்திரீகள் செம்பு, இரும்பு, ஈயம் இவைகளினாலே செய்யப்பட்ட நகைகளை அணிந்திருப்பவர்களாவார்கள். 96

முன்பகலில் மலமூத்திர மோசனத்திற்குத் தகுதியான பூமியானது, கிராமத்திற்குத் தென்மேற்கு திசையில் இருக்க வேண்டும்.

கிராமத்திற்கு வடகிழக்கு திக்கில், ஐநூறு (500) கோலுக்கப்பால் சுடுகாடு இருக்கவேண்டும். 97

* ம்ராமஸெஹெஸ்ரதஸ்யாம் உதி வாமெ யாத்ர உதி ஸாதி |

அஷ்டாஹுஸ்ஸங்காஸ் ஸ்த்ராநதோயாஸ்யாவயாநம் ச ||௯௮||

தேவமார்க்ஷவிஷ்வகோஷ்ட க்ராமாவ்ருதஜே ஸமாகவஸிவ்ருத்தி: |
வ்யஸநம் க்ராமவிநாஸ: ந்ருபஸம்மோ ஸவதி மரணம் ச ||

தேவாலயாந்தராவண ஸந்ந்யத்வம் ஸோயஸ்லஷ்யம் சாபி |
மார்க்கே ஸங்கரக்ஷேபணமீத்ருக் க்ராமஸ்ய ஸந்ந்யதா
யாபி || ௱ ||

க்ராமாதீநாம் ச ஸர்வேஷாம் கர்ப்பவிந்யாஸ உச்யதே |

மற்றவர்களுக்கும் அவரவர்கள் இருக்குமிடத்திலிருந்து 500 கோல் தூரத்திற்கப்பால் சவம் அடக்கம் செய்யும் பூமி இருக்கவேண்டும். 97½

சண்டாளர்கள், சர்மகாரர்கள் (தோல் பதனிடுபவர்கள்) இவர்களின் வாஸஸ்தலம், ச்மசானம், ஜலாசயத்திற்குப் போகும் வழி இவைகள் தேவாலயம் விசுவகோஷ்டம் (பொதுச் சாவடி) கிராமத்தைச் சுற்றிலுமுள்ள இடம், வழி இவைகளைச் சுற்றிப் போகவேண்டியதாக (இருக்கக் கூடாது, அவ்விதம்) இருந்தால், வியஸனம் (துன்பம்) கிராமத்திற்கு அழிவு, அரசனுக்கு அவமதிப்பு, மரணம் இவைகளையளிக்கும். 99

தேவாலயத்திற்குள் கடைகளில்லாதிருப்பது (அல்லது கடைகளிருப்பது, தேவதாமூர்த்திகளில்லாமல் சூன்யமாக இருப்பது) குப்பைகளிருப்பது, வழியில் அசுத்தமானவைகளைப் போடுவது இதுபோன்றவைகள் கிராமத்திற்கு சூனியத்தன்மையை உண்டுபண்ணும். (கிராமத்தை உருவமில்லாமல் செய்துவிடும்). 100

கிராமம் முதலிய எல்லாவற்றிற்கும் கர்பவிநியாஸத்தை கூறுகிறேன்.

𑌸𑌗𑌰𑍍𑌭𑌂 𑌸𑌰𑍍𑌵𑌸𑌮𑍍𑌪𑌤𑍍𑌤𑍍𑌯𑍈 𑌵𑌿𑌗𑌰𑍍𑌭𑌂 𑌸𑌰𑍍𑌵𑌨𑌾𑌶𑌨𑌮𑍍 ॥

𑌤𑌸𑍍𑌮𑌾𑌤𑍍 𑌸𑌰𑍍𑌵𑌪𑍍𑌰𑌯𑌤𑍍𑌨𑍇𑌨 𑌗𑌰𑍍𑌭𑌂 𑌸𑌮𑍍𑌯𑌗𑍍𑌵𑌿𑌨𑌿𑌕𑍍𑌷𑌿𑌪𑍇𑌤𑍍 ।
𑌮𑍃𑌤𑍍𑌕𑌨𑍍𑌦𑌧𑌾𑌨𑍍𑌯𑌶𑍁𑌦𑍍𑌧𑌲𑍋𑌹𑌧𑌾𑌤𑍁𑌰𑌤𑍍𑌨𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌨𑍀𑌲𑌕𑍈𑌃 ॥௱௩॥

𑌪𑌣𑍇𑌨 𑌗𑌰𑍍𑌭𑌦𑍍𑌰𑌵𑍍𑌯𑌾𑌣𑌿 𑌨𑌿𑌰𑍍𑌦𑍋𑌷𑌾𑌣𑍍𑌯𑍇𑌵
𑌸𑌂𑌗𑍍𑌰𑌹𑍇𑌤𑍍 ।
𑌸𑌲𑌿𑌲𑌾𑌪𑍂𑌰𑌿𑌤𑍇 𑌶𑍍𑌵𑌭𑍍𑌰𑍇 𑌪𑍂𑌰𑍍𑌵𑍋𑌕𑍍𑌤𑌾𑌨𑌿 𑌨𑍍𑌯𑌸𑍇𑌦𑍍𑌬𑍁𑌧𑌃 ॥

𑌧𑌾𑌨𑍍𑌯𑍋𑌪𑌰𑌿 𑌨𑌿𑌧𑌾𑌤𑌵𑍍𑌯𑌂 𑌤𑌾𑌮𑍍𑌰𑌭𑌾𑌜𑌨𑌮𑌭𑍍𑌰𑌮𑍍 ।
𑌤𑌾𑌮𑍍𑌰𑌭𑌾𑌜𑌨𑌵𑌿𑌸𑍍𑌤𑌾𑌰𑌂 𑌪𑌞𑍍𑌚𑌧𑌾 𑌪𑌰𑌿𑌕𑍀𑌰𑍍𑌤𑌿𑌤𑌮𑍍 ॥௱௪॥

𑌅𑌰𑌤𑍍𑌨𑌿 𑌦𑍍𑌵𑌾𑌦𑌶 𑌪𑌙𑍍𑌕𑍍𑌤𑍍𑌯𑌷𑍍𑌟𑌧𑌾𑌰𑌂 𑌮𑌾𑌤𑍍𑌰𑌾𑌙𑍍𑌗𑍁𑌲𑌾𑌨𑍍𑌤𑌤𑌃 ।
𑌉𑌨𑍍𑌨𑌤𑌂 𑌤𑌾𑌵𑌦𑍇𑌵𑌂 𑌸𑍍𑌯𑌾𑌤𑍍 𑌵𑍃𑌤𑍍𑌤𑌂 𑌸𑍍𑌯𑌾𑌤𑍍𑌤𑌾𑌰𑌪𑍍𑌰𑌕𑌮𑍍 ॥௱௫॥

ஸகர்பமான (கர்பநியாஸத்துடன் கூடிய) கிராமாதிகள் ஸகல ஸம்பத்துகளையும் அளிக்கும். கர்பநியாஸமில்லாத கிராமாதிகள், எல்லாவற்றையும் அழித்துவிடும். ஆகையால் ஸகலவிதமான முயற்சிகளையும் செய்து, நன்கு கர்ப விநியாஸத்தைச் செய்யவேண்டும்.

மண் (தசமிருத்திகை), கிழங்கு (தாமரை), தானியங்கள், சுத்தமான உலோகங்கள், தாதுக்கள், ரத்னம், இந்திர நீலம், பணம் (நாணயம்) ஆகிய திரவியங்களைக் குற்றமற்றவைகளாக ஸங்கிரஹிக்கவேண்டும். அந்த மண் முதலியவைகளை ஜலத்தினாலே நிரப்பப்பட்ட குழியினுள் வைக்கவேண்டும். 103

தானியத்தின்மேல் செப்புப் பாத்திரத்தை அசையாமல் வைக்கவேண்டும். தாமிரப் பாத்திரத்தின் அகலமானது அரத்னி (ஒரு முழம்) 12 அங்குலம், 10 அங்குலம், 8 அங்குலம், 4 அங்குலம் என்று 5 விதமாகக் கூறப்பட்டிருக்கிறது. அதன் உயரமானது அகலத்துக்கு ஸமமாகவே

ஸபஞ்சபஞ்சகோஷ்ட²ம் வா நவகோஷ்ட²கமேவ வா ।
உபபீட²பதே³ தே³வா: ஸ்தா²ப்யா தி³க்ஷு து ஸம்ஶ்(ஸ்தி²)தா: ॥

ரஜதேன வ்ருஷ: ஸ்தா²ப்யோ வஜ்ரீ ஹாடகநிர்மித: ।
யமே து யமராஜஶ்ச ஶுல்பே³னாயஸவாரண: ॥ ௱௭ ॥

ஹேமஸிம்ஹஸ்து ரௌப்யேண வருணே ஸ ஜலாதி⁴ப: ।
வாஜீ ஶ்வேதரூப: ஸோமே ராஜதோ த்³விஜராஜக: ॥ ௱௮ ॥

ஈஶே வைக்ராந்தமக்³னௌ து த்ரபுஸீஸம் து நைர்ருதே ।
*ஸ்வர்ணம் ஸமீரணே ஜாதிஹிங்கு³ல்யம் து ஜயந்தகே ॥

இருக்கவேண்டும், அந்தப் பாத்திரமானது வட்டவடிவமாக, சச்சதுரமாக, 10 பட்டைகளுள்ளதாக அல்லது ஒன்பது பட்டைகளுள்ளதாக இருக்கவேண்டும். அந்தப் பாத்திரத்தில் உபபீடஸ்தானத்தில் தேவதைகள் வஸிக்கிருர்கள்.

ஸூரியஸ்தானத்தில் வெள்ளியினுல் விருஷபம் 1, தங்கத்தினுல் இந்திரன் 2, யமஸ்தானத்தில் சுல்பத்தினுல் (   )யமராஜன் 3, இரும்பினுல் யானை 4, தங்கத்தினுலே சிங்கம் 5, வருணதிக்கில் வெள்ளியினுலே வருணன் 6, வெண்மையானகுதிரை. 7, ஸோமதிக்கில் வெள்ளியினுலே சந்திரன் (ஸோமன்) 8, இவைகளைக் கல்பிக்கவேண்டும். 108

ஈசானதிக்கில் வைக்கிராந்தம், அக்னிதிக்கில் பித்தளை, நைருருதிதிக்கில் ஈயம், வாயுதிக்கில் ஸுவர்ணம். (பணம் என்று மற்ருெரு பாடம்.) ஜயந்தஸ்தானத்தில் ஜாதிஹிங்குலியம், பிருசஸ்தானத்தில் அரிதாரம், விததஸ்தானத்தில் மனேசிலே, பிருங்கராஜஸ்தானத்தில் ஸுவர்ணமாக்ஷிகம், ஸுக்ரீவஸ்தானத்தில் ராஜாவர்தம், சோஷபாகத்தில்

*பணம் இதி பாடா²ந்தரம் ।

ஹரிதாலம் ஹ்ருதயே ஸ்தாநே விந்யஸேத்து மநஶ்ஶிலா ।
மாக்ஷிகம் ஹ்ருந்மத்யமே ஸ்தாநே ராஜாவர்த்தம் ஸமுத்கலே ॥

கைரிகம் கோஷ்டஸ்தாநே து முக்யேஞ்ஜநம் பவேத் ।
அதிதலே தாரதம் விதத்யாத் ஸர்வமேவ ந்யஸேத் க்ரமாத் ॥௧௧௧॥

அஷ்டதிக்ஷு ச லோகேஶா: ஸ்வபாத்ராப்யந்தராநநா: ।
ஷட்பஞ்ச சதுஸ்த்ரித்வ்யங்குலை: பிம்போதயம் பவேத் ॥

ததர்த்தம் வாஹநோத்ஸேதம் ஸ்தாநகாஸநமேவ வா ।
[illegible] ॥௧௧௨॥

வஜ்ரம் ச வைடூர்யம் விவஸ்வதி விநிக்ஷிபேத் ।

கைரிகம், கணமுக்கிய (முக்கிய) ஸ்தானத்தில் அஞ்ஜனம். (அஞ்சனக்கல்) அதிதிஸ்தானத்தில் தரதம் (இவைகளை இவ்விதமாக, முறையே, வைக்கவேண்டும். 111

லோகபாலர்களை நாச்சந்தில் உள்பககத்தைப் பார்த்துக்கொண்டிருக்கும்படி (பாஜனத்திற்குள் முறையுடன் வைத்து) ஸ்தாபிக்கவேண்டும். லோகபாலர்களின் பிம்பத்தின் உயரமானது, 6, 5, 4, 3, அல்லது 2. அங்குலமிருக்கவேண்டும். 112

அவர்களின் வாஹனங்களின் உயரமானது, அவர்களின் உயரத்தில் ஸரிபாதி உயரமிருக்கவேண்டும். அவர்கள், ஸ்தானகமூர்த்தியாகவோ அல்லது ஆஸனமூர்த்தியாகவோ இருப்பதாகும். 112½

அந்தந்த தேவதைகளின் பாவங்களை அறிந்தவர்கள் கொண்டுவந்து கொடுத்த ரத்னங்களில், ஆபவத்ஸ ஸ்தானத்தில் முத்து, மரீசி ஸ்தானத்தில் பவழம்,

வஜ்ரமிந்த்ரஜயே வித்யாதிந்த்ரநீலம் து மித்ரகே ॥ ௧௧௪ ॥

ருத்ரராஜே மஹாநீலம் மரகதம் து மஹீதரே ।
மத்யே பத்மராகம் து விந்யஸேத் கர்ப்பபாஜநே ॥௧௧௫॥

ஸ்வர்ணாதி தாதவஶ்சைவ ஸ்வஸ்திகாகாரபாஜநே ।
தஸ்யைவ பார்ஶ்வபாகேஷு ஶ்ரீதாதி ந்யாஸயேத் ॥௧௧௬॥

ஹேமாயஸ்தாம்ரரௌப்யைஸ்து ஸ்வஸ்திகாநி சதுஷ்டயம் ।
ப்ரஹ்மஸ்தாநாத் பஹிர்த்தாநி பூர்வாதிஷு ந்யாஸயேத்
க்ரமாத் ॥ ௧௧௭ ॥

ஸ்வர்ணேந ஶாலிம் ரௌப்யேண வ்ரீஹிம் ஆயஸ
கோத்ரவம் ।
ப்ரவாலகம் கம்ஸீஸாஸம் திலம் வைகந்த(கா)ங்குகம் ॥

ஸவித்ரு ஸ்தானத்தில் வஜ்ரம், விவஸ்வான் ஸ்தானத்தில் வைடூர்யம், இந்திரஜய (ராஜ) ஸ்தானத்தில் வைரம், மித்ரஸ்தானத்தில் இந்திரநீலம், ருத்திரராஜஸ் தானத்தில் மஹாநீலம், மஹீதரஸ்தானத்தில் மரகதம், மத்தியில் பத்மராகம், என்று இவ்விதமாக, கர்பபாஜனத்தில், வைக்கவேண்டும். 116

தங்கம்- இரும்பு- தாமிரம்- வெள்ளி, இந்த லோஹங்களினுலே, 4 ஸ்வஸ்திகாகிருதிகளைச் செய்து கர்பபாஜனத்தின் நான்குபக்கங்களிலும் வைக்கவேண்டும். இவைகளை பிரம்ஹஸ்தானத்திற்கு வெளியில் கிழக்கு முதலிய திக்குகளில் முறையே வைக்கவேண்டும். 117

மேலும், ஸுவர்ணத்தினுலே சாலி (சம்பாநெல்) தானியம் வெள்ளியினுலே வ்ரீஹி(சிறுநெல் தான்யவிசேஷம்) தானியம், இரும்பினுலே கோத்ரவம், (வரகுதானியம்)

ஶாலிம் தான்யமயம் தாம்ரே குலுத்தம் முத்கம் ரௌஹஜாம் |
ஸாஜநாய பலிம் தத்வா பஶ்சாத் ஸம்வர்த்தம் ந்யாஸயேத் ||

கர்பந்யாஸவிதிஜ்ஞைஸ்து காலாயஸம் பாத்ரோபரி |
வஜ்ராங்குலோத்த வ்யஸ்லேஷாதாதிக்ய ஸஹஸ்ர பாணத: ||

விஸ்தாரம் ஏகாங்குலம் ஹஸ்தாந்த்யம் த்விதீயகம் |
ஸாஜநோபரி தக்ஷோபஸ்யம் மஹாந்த்யாஸ்வி அக்ஷணே: ||

ஸ்தானீயே (அ)த்ரோணமுகே வாவர்ணாடே ப்ரதிமண்டலே |

பித்தளையினாலே கந்ததானியம், ஈயத்தினாலே உளுந்து, வைக்கிராந்தத்தினாலே (லோஹ விசேஷம்) எள்ளு, இரும்பினாலே பயறு, தாமிரத்தினாலே கொள்ளு இவைகளைச் செய்து, அந்த கர்பபாஜனத்திற்குள் வைத்து, கர்ப பாஜனத்திற்கு பலிகொடுத்து, பிறகு அந்த கர்ப பாஜனத்தை பூமிக்குள் புதைக்கவேண்டும். 119

கற்ப நியாஸ விதியை அறிந்தவர்கள், அந்த கர்பபா ஜனத்திற்குமேலே, கருங்காலியினாலே இந்திரகீலம் (மூடி) போடவேண்டும். அது பாஜனத்தின் விஸ்தாரத்தைக் காட்டிலும் ஒரு அங்குலம் அதிக விஸ்தாரமுள்ளதாகவும், 12. அங்குலம் நீளமுள்ளதாகவும் இருக்கவேண்டும். (கர்பபாஜனத்தின் அளவு இருக்கவேண்டும் என்பது பொருள்.)

(கர்பபாஜனமானது அதிக விஸ்தாரமுள்ளதாக இருந்தால்,) 5 அங்குலம் அதிக விஸ்தாரமுள்ளதாக இருப்பதாகும். இவ்விதமாக 32 அங்குலம் வரையில் விஸ்தாரமாக இருப்பதுமாகும். (மானஸாரத்தில் கர்பபாஜன விஸ்தார மானது 32 அங்குலம் வரையில் கூறப்பட்டிருக்கிறது.) 121

ஸ்தானீயம் 1, துரோணமுகம் 2, கார்வாடம் 3, பிரதி

[illegible] ||

[illegible] |
[illegible] ||

[illegible] |
[illegible] ||

[illegible] |
[illegible] ||

[illegible] |

நாகரம் 4, கிராமம் 5, நிகமம் 6, கேடம் 7, பத்தனம் 8, கோத்ம கோலகம் 9, ஆகிய 9 விதமான கிராமாதி பேதங்களில், பிரம்ஹாம்சம் 1, ஆரியாமசம் 2, அர்காம்சம் 3 விவஸ்வான் அம்சம் 4, யமாம்சம் 5, மித்திராம்சம் 6, வருணம்சம் 7, ஸோமாம்சம் 8, பூதராம்சம் 9, இவைகளில், துவாரத்தின் வலது பக்கமானது, இவர்களின் கர்பஸ்தானமாகும். (கர்பபாஜனத்தை வைக்கவேண்டிய ஸ்தானமாகும் என்பது பொருள்.)

வீட்டில், கீழே கூறப்பட்ட 9 அம்சங்களுடன், புஷ்பதந்தாம்சம், பல்லாடாம்சம், மஹேந்திராம்சம் இவைகளும் கர்பஸ்தானமாகும். 124

கிராமத்தின் ரக்ஷைக்காகவும் ஸகலவிதமான விருப்பங்களின் அபிவிருத்திக்காகவும், விஷ்ணுவின் ஸ்தானம், லக்ஷ்மீஸ்தானம் அல்லது ஸுப்ரம்ஹணியஸ்தானம் இவைகளில் கர்பஸ்தாபனம் செய்யவேண்டும். 125

---

* [illegible] |

𑌶𑌿𑌲𑍇𑌷𑍍𑌟𑌕𑌾𑌚𑌿𑌤𑍇 𑌵𑌾𑌪𑌿 𑌵𑌾 𑌪𑍂𑌰𑍁𑌷𑌾𑌞𑍍𑌜𑌲𑌿𑌮𑌾𑌤𑍍𑌰𑌕𑍇 ||௧௨௬||

𑌅𑌨𑍁𑌕𑍍𑌤𑌾𑌨𑌾𑌂 𑌚 𑌸𑌰𑍍𑌵𑍇𑌷𑌾𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾𑌂𑌶𑌾𑌦𑌿𑌷𑍁 𑌗𑌰𑍍𑌭𑌕𑌮𑍍 ।
𑌸𑍍𑌥𑌾𑌪𑌕𑌸𑍍𑌤𑍁 𑌯𑌥𑌾 𑌗𑌰𑍍𑌭𑌂 𑌸𑍁𑌸𑍍𑌥𑌿𑌤𑌿𑌃 𑌸𑍍𑌥𑌾𑌪𑌯𑍇𑌤𑍍 𑌸𑍍𑌥𑌿𑌰𑌮𑍍 ||

𑌅𑌨𑍁𑌕𑍍𑌤𑌾𑌨𑌾𑌂 𑌤𑍁 𑌤𑌤𑍍𑌸𑌰𑍍𑌵𑌂 𑌦𑍍𑌰𑌷𑍍𑌟𑌵𑍍𑌯𑌂 𑌗𑌰𑍍𑌭𑌲𑌕𑍍𑌷𑌣𑍇 ||

𑌏𑌵𑌂 𑌦𑍇𑌵𑌾𑌗𑌾𑌰𑌭𑍂𑌮𑍀𑌨𑌾𑌂
𑌵𑌰𑍍𑌣𑌾𑌨𑌾𑌮𑌾𑌲𑌯𑌾𑌚𑍍𑌚 𑌜𑌾𑌤𑍍𑌯𑍁𑌕𑍍𑌤𑌮𑌾𑌨𑌾𑌤𑍍 ।
𑌗𑍍𑌰𑌾𑌮𑌾𑌦𑍀𑌨𑌾𑌂 𑌚 𑌵𑌿𑌨𑍍𑌯𑌾𑌸𑌮𑌾𑌰𑍍𑌗𑌂
𑌸𑌾𑌰𑍋𑌦𑍍𑌧𑌾𑌰𑌂 𑌸𑌮𑌾𑌸𑌾𑌚𑍍𑌚 𑌸𑌂𑌕𑍍𑌷𑌿𑌪𑍍𑌯 𑌤𑌨𑍍𑌤𑍍𑌰𑌤𑌃 || ௧௨௯ ||

புருஷனுடைய கை எடுப்பு மட்டத்திற்குக்கீழே, சிலை அல்லது செங்கல்லினாலே கட்டப்பட்ட, கர்ப ஸ்தானத்தில் கர்பபாஜனத்தை வைத்துவிட்டு, அதற்குமேலே, விஷ்ணு முதலியவர்களின் பிம்பங்களை வைத்து பிரதிஷ்டை செய்ய வேண்டும். 126

இங்கு கூறப்படாத மற்ற இடங்களில், பிரம்ஹாம்சம் முதலியவிடங்களில் கர்பஸ்தாபனம் செய்யவேண்டும்.

ஸ்தபதியானவன், கர்பமானது பத்திரமாக இருக்கும்படி, கர்பபாஜனத்தை அசையாமலிருக்கும்படி வைக்க வேண்டும். 127

இங்கு கூறப்படாத விஷயங்களை கர்பலக்ஷணத்தில் பார்த்துக்கொள்ளவேண்டும். 128

இவ்விதமாக தேவாலயங்களின் பூமியளவு, பிராம்ஹணாதி ஜாதிகளின் வீடுகளின் அளவு, கிராமாதிகளின் மான வின்யாஸ மார்கம், இவைகள், தந்திரங்களிலிருந்து எடுத்து சுருக்கமாகவும் நன்கும் கூறப்பட்டிருக்கின்றன. 129

दद्यात्स नृपवरः स्थपतिकादि चतुर्विधेभ्यः
सन्मानदिक्षु विभवेन ह्य भूमिं च गां च ।
नित्यं यथा भवति सिद्धिरनेकवस्तु
या चन्द्रताररविवासमहार्णवं शुभाशाः (तः) ॥१३०॥

इति मयमते वास्तुशास्त्रे ग्रामविन्यासो नाम
नवमोऽध्यायः ॥

ஸ்தபதி முதலியவர்களினுலே அளவுகளுடன் அமைக்கப்பட்ட, கிராமாதிகளும், வீடுகளும், தேவாலயங்களும், சந்திரன் நக்ஷத்திரங்களிருக்கும் வரையில் சாசுவதமாக இருப்பதைக் காண்கின்ருேம். ஆகவே அரசன், மானுதி காரியங்களில் ஸமர்த்தர்களான ஸ்தபதி முதலிய நான்குவித பிரிவினர்களுக்கும், தக்க ஸம்மானங்களையும், பூமிகளையும், பசுக்களையும் வெகுமதியாக அளிக்கவேண்டும். 130

கிராமவின்யாஸமென்னும் ஒன்பதாவது
அத்தியாயம் முற்றும்.

அத² த³ஶமோऽத்⁴யாய: ॥

நக³ராதீ³நாம் மாநம் விந்யாஸம் ச க்ரமாத³ஹம் வக்ஷ்யே ।
க்ஷுத்³ரம் யந்நக³ராணாம் த்ரிஶதம் த⁴நூம்ஷி ஶதத³ண்ட³வர்த⁴நாத³வதி⁴ ॥

ஸாஷ்டகஸப்ததிபே⁴தா³ஶ்சாஷ்டஸஹஸ்ராந்தகம் யாவத் ।
நக³ராணாம் விஸ்தாரம் ஹி ப்ரோக்தம் பூர்வோக்தாசார்யைந ॥ ௨ ॥

ஶதத³ண்டா³தி³†த³ஶவ்ருத்³த்⁴யா த்ரி: ஸப்த த்ரிஶதத³ண்டா³ந்தம் ।
க்ஷுத்³ராணாமித³முதி³தம் நக³ராணாமேவ ஸம்பே⁴தா³: ॥ ௩ ॥

உத்க்ருஷ்டவர்த⁴நவிதி⁴: நக³ரவதே³வ பத்தநாதி³ஷ்வபி ஸாதை⁴: ।

பத்தாவது அத்தியாயம்

நகரம் முதலியவைகளின் அளவையும், அதன் விந்யாஸத்தையும் (விந்யாஸம் — அமைப்பின் முறை) முறையே கூறுகின்றேன்.

நகரத்தின் முதலாவது விஸ்தாரம் முன்னூறு (300) தனுஸ் அளவாகும். அந்த அளவுக்குமேல், (100) தனுஸ் வீதமாக, (8000) தனுஸ் வரையில் அளவைக் கூட்டிவர நகரத்தின் விஸ்தாரமானது எழுபத்தெட்டு (78) விதமாகும். இவ்விதமாக முன்னோர்கள் நகரத்தின் அளவுகளைக் கூறியிருக்கிறார்கள். 2

க்ஷுத்திர (சிறிய) நகரங்களின் விஸ்தாரமானது நூறு (100) தண்டம் முதல், பத்து தண்டம் வீதமாக முன்னூறு தண்டம் வரையில் விருத்தி செய்துவர, இருபத்தோரு (21) விதமாகும். 3

---

†க்ரமாத் இதி பாட²: ।

आचतुस्सहस्रकाणां सङ्ख्ययोक्ता नातिसङ्ख्य सङ्ख्यया क्रमात् ॥

त्रिशतादि चतुश्शतकं यावत् वृद्ध्या तु विंशतिभिः ।
षड्विधमुक्तं खेटं श्रेष्ठमध्यावरे विस्तारम् ॥ ५ ॥

चतुश्शतात् चतुर्वृद्ध्या द्रोणमुखे सङ्ख्यया क्रमात् ।
षण्णवति चतुश्शतकं यावत्तावत्तु विस्तारम् ॥ ६ ॥

द्विशतादि चतुश्शतकं यावत् पञ्चाशद्वृद्ध्या ।
कर्वटस्यैवं पञ्चविस्तार उद्दिष्टः ॥ ७ ॥

द्विशतादि पञ्चाशद्वृद्ध्या अष्टाविंशत्त्रिशततं यावत् ।

உத்தமபுரத்தின் பரிதியானது (சுத்தளவானது) ராஜ தண்டத்தினல் பதினாறுயிரம் (16000) கோலளவு இருப்பதாகும். அந்த அளவில் ஐநூறு (500) தண்டம் வீதம், நாலாயிரம் (4000) தண்டம் வரையில் குறைத்து வர, பரிதிமானமானது இருபத்திஐந்து (25) விதமாகும். 4

முன்னூறு கோல் முதல், நானூறு (400) கோல் வரையில், முறையே, இருபது (20) கோல் வீதம் கூட்டிவர ஆறு (6) விதமான கேடங்களின் அளவாகும். இவைகள் முறையே சிரேஷ்ட - மத்திம- அதம கேடங்களின் விஸ்தாரமாகும். 5

நானூறு (400) கோலளவு முதல், இருபத்திநான்கு (24) கோல் வீதமாக நானூற்றித்தொண்ணூற்தாறு (496) கோல் வரையில் விருத்தி செய்து வர துரோண முகத்தின் மானமானது ஐந்து (5) விதமாகும். 6

இருநூறு (200) கோலளவு முதல் நானூறு (400) கோல் வரையில் ஐம்பது (50) கோல் வீதமாக விருத்தி செய்து வர கர்வடத்தின் விஸ்தாரமானது ஐந்து (5) விதமாகும் என்று கூறப்பட்டிருக்கிறது. 7

யாவத்த்ரிம்ஶச்ச விஸ்தாரா: ப்ரோக்தா: த்ரி: பஞ்சஸங்க்2யயா ॥ ௮ ॥

ஶதாதி3 த3ண்டே3 ஶதவ்ருத்3த்4யா பஞ்சஶதம் யாவத்3 த3ண்ட3மிஷ்யதே ।
ஸ்யாத் கோஷ்ட2கோலகாநாம் விஸ்தாரம் பஞ்சைவ பே4த3த: ॥௯॥

தாவத்புரே ப்ரோக்தம் மாநவிஸ்தாரே ஸூரிபி4: ப்ராஜ்ஞை: ।
யாவத் பஞ்சஶதாந்தம் த்3விஶதாதா3ரப்4ய ஸப்தயா சாபத: ॥௰॥

பஞ்சாஶத் த4நுர்வ்ருத்3த்4யா விஸ்தாரம் கதி2தம் விட3ம்ப3கஸ்ய ।
ப்ரமாணமவஶிஷ்டம் சாபம் ஸப்தபே4த3ம் து வை தேஷாம் ॥௧௧॥

த்3விகு3ணம் த்ரிபாதா3தி4கம் பாத3ம் தேஷாம் சாயதம்
விஸ்தாராத் ।
விஸ்தாரே து ஷட3ஷ்டாம்ஶே ஹாநேநைகே நவாயதம் வா புந: ॥

இருநூறு (200) கோலளவு முதல் முன்னூத்தி நாற்பது கோலளவு வரையில், பத்து (10) கோல் வீதம் கூட்டிவர நிகமத்தின் விஸ்தாரமானது பதினைந்து (15) வித்மாகும்.

நூறு (100) தண்டம் முதல் ஐநூறு (500) தண்டம் வரையில் நூறு (100) தண்டம் வீதம் கூட்டி வர, கோத்தும கோலகத்தின் மானமானது ஐந்து (5) விதமாகும். 9

மேதாவிகளான வித்வான்கள் புரத்திற்குக் கூறப் பட்டிருக்கின்ற அளவில், இருநூறு (200) தனுஸ் முதல் ஐநூறு (500) தனுஸ் வரையில், ஐம்பது (50) தனுஸ் வீதம் விருத்திசெய்து வர, விடம்பத்தின் அளவானது, ஏழுவித மாகும். என்று இவ்விதமாக இவைகளின் மானத்தை கூறியிருக்கிறார்கள். 11

நகரம் முதலியவைகளின் முகாயதமானது (முன் பக்கத்தின் நீளமானது) அதன் விஸ்தாரத்தைப்போல் இரண்டு பங்கு, முக்கால் பங்கு, அரைப்பங்கு, அல்லது

சதுரச்ராயதாச்ரம் வ்ருத்தம் வ்ருத்தாயதம் து வா புன: ।
ஸ்யாத் கோஷ்டுவ்ருத்தேஷாம்(வம்) *ஸப்ராகாராக்ருதி: பஞ்சதா ॥

தசாஷ்டஸப்தபஞ்சாம்ஶசதுரம்ஶேஷு †க்ரமே விஸ்தரே ।
ஸப்தஷட்பஞ்சவேதாக்னிபாகைர்வா ப்ராகாரமௌலய: ॥

த்வித்ரிசதுர்ஹஸ்தம் ஸ்யாத் விஸ்தாரம் ஸாலஸ்ய து கரம் து ।
§ஸப்தஹஸ்தாதிகாஸ்ஸதி: ஸமுத்ஸேதம் (து) த்ரிகோணாந்தம் ॥

கால்பங்கு இருக்கவேண்டும். அல்லது அதன் முன் பக்கத்தின் நீளமானது, அதன் அகலத்தில் ஆறில் ஒருபங்கு ($\frac{1}{6}$) அல்லது எட்டில் ஒருபங்கு ($\frac{1}{8}$) இருக்கவேண்டும். 12

நகரம் முதலியவைகளின் கோட்டைச் சுவற்றின் உருவமானது, சச்சதுரம் 1, நீண்டசதுரம் 2, வட்டம் 3, நீண்ட வட்டம் 4, கோளத்தைப்போன்ற வட்டம் 5, என்று ஐந்து விதமாகும். 13

அந்தக் கோட்டைச் சுவற்றின் எல்லையானது, அதன் அகலத்தில் (சுவற்றின் நீளத்தில்) பத்தில் ஒரு பாகம், எட்டில் ஒரு பாகம், ஏழில் ஒரு பாகம், ஐந்தில் ஒரு பாகம், அல்லது நான்கில் ஒரு பாகத்தில், முறையே ஏழுபாகம், ஆறுபாகம், ஐந்துபாகம், நான்குபாகம், மூன்றுபாகம், (10ல் 7 பாகம், 8ல் 6 பாகம், 7ல் 5 பாகம், 5ல் 4 பாகம், 4ல் 1 பாகம்) இருக்கவேண்டுமென்று கூறப்பட்டிருக்கிறது.

கோட்டைச்சுவரின் அகலமானது, இரண்டு முழம், மூன்று முழம், அல்லது நான்கு முழங்கள் இருக்கவேண்டும்.

---

*ஸப்ர: கமிதாக்ஷ இதி பாடாந்தரம் ।

†தஸ்ய ரதம் இதி பாடாந்தரம் ।

§ஸப்தஹஸ்தாதிகாஸ்ஸதி: இதி பாடாந்தரம் ।

பரித: பரிகா பாஹ்யே வப்ராப்யந்தரே தேவாலயாதீநி ।
பேசகஸ்தாநமாரப்யாஸநஸ்தாநாந்தம் சண்டிதம் ப்ரோக்தம் ॥ ௧௬ ॥

ஸூத்ராதீந்யபி விஷமஸ்தாநாநி ச வர்ஜயேத்புத்திமாந் ।
ப்ராகுதங்முகம் மார்கம் சேத்தத்ர யதேஷ்டம் ந்யாஸகம் விதிநா ॥௧௭॥

தண்டாதிஸப்ததண்டாந்தம் யாவத் தண்டார்தவ்ருத்தித: ।
மார்கவிஸ்தாரபேதே த்ரயோதஶ ஹஸ்தாந்தாஷ்டௌ ஸ்ம்ருதா: ॥௧௮॥

அதன் உயரத்தின் உச்சியானது, * பதினேழு (17) முழம், அல்லது பதினொரு (11) முழமிருக்கவேண்டும். அல்லது இந்த அளவுகளில் மூன்றில் ஒரு பாகம் குறைவாக இருப்பதுமாகும். 15

கோட்டையின் வெளிப்பக்கத்தில், சுற்றிலும் அகழி இருக்கவேண்டும். கோட்டையின் உள் பக்கத்தில் தேவாலயாதிகள் இருக்கவேண்டும்.

பேசக பாகம் முதல் ஆஸனபாகம் வரையிலுள்ள ஸ்தானத்திற்கு சண்டிதம் (சண்டித பதம்) என்று பெயர் கூறப்பட்டிருக்கிறது. 16

புத்திமானாக இருப்பவன், ஸூத்திராதிகளையும் விஷம ஸ்தானங்களையும் விலக்கிவிடவேண்டும்.

வழியானது, கிழக்குமுகம் அல்லது வடக்குமுகமாக இருந்தால், அங்கு விதியுடன் இஷ்டப்போல் நியாஸத்தைக் கல்பித்துக்கொள்ளுவதாகும். 17

வீதியின் விஸ்தாரமானது, ஒரு கோல் முதல் ஏழு (7) கோல் வரையில், அரை (½) கோல் வீதமாக விருத்தி செய்யப்பட்டுவந்தால், அதன் விஸ்தாரமானது பதிமூன்று (13) விதமாகும். 18

---

* 17, 9, அல்லது 11 முழம் என்று பாடபேதம்.

𑌰𑌾𑌷𑍍𑌟𑍍𑌰𑌸𑍍𑌯 𑌮𑌧𑍍𑌯𑌮𑌧𑍍𑌯𑍇 𑌸𑌜𑍍𑌜𑌨𑌬𑌹𑍁𑌲𑍇 𑌨𑌦𑍀𑌸𑌮𑍀𑌪𑍇 𑌤𑍁 ।
𑌨𑌗𑌰𑌂 𑌕𑍇𑌵𑌲𑌮𑍇𑌵 𑌵𑌾 𑌰𑌾𑌜𑌗𑍃𑌹𑍇𑌣𑍈𑌵 𑌤𑌦𑍍𑌰𑌾𑌜𑌧𑌾𑌨𑍀 𑌵𑌾 ॥௧௯॥

𑌦𑌿𑌕𑍍𑌷𑍁 𑌚𑌤𑌸𑍃𑌷𑍁 𑌗𑍋𑌪𑍁𑌰𑌯𑍁𑌕𑍍𑌤𑌂 𑌪𑍍𑌰𑌾𑌕𑌾𑌰𑌯𑍁𑌕𑍍𑌤𑌂 𑌤𑍁 𑌸𑌾𑌮𑌗𑍍𑌰𑍍𑌯𑌾𑌢𑍍𑌯𑌂 ।
𑌕𑍍𑌰𑌯𑌵𑌿𑌕𑍍𑌰𑌯𑌕𑍈𑌰𑍍𑌯𑍁𑌕𑍍𑌤𑌂 𑌸𑌰𑍍𑌵𑌜𑌨𑌾𑌵𑌾𑌸𑌸𑌂𑌕𑍀𑌰𑍍𑌣𑌂 ॥௨௦॥

𑌸𑌰𑍍𑌵𑌦𑍇𑌵𑌾𑌲𑌯𑌸𑌹𑌿𑌤𑌂 𑌨𑌗𑌰𑌮𑌿𑌤𑌿 𑌕𑍇𑌵𑌲𑌂 𑌪𑍍𑌰𑍋𑌕𑍍𑌤𑌂 ।
𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌗𑍁𑌦𑌗𑍍𑌦𑌿𑌶𑌿 𑌰𑌹𑌿𑌤𑌾 𑌪𑌰𑌿𑌤𑌶𑍍𑌶𑌾𑌲𑌾 𑌬𑌹𑌿𑌶𑍍𑌶𑌪𑌾𑌂𑌸𑍁𑌚𑌯𑌾 ॥

𑌪𑌰𑌿𑌤𑌃 𑌪𑌰𑌿𑌖𑌾 𑌬𑌾𑌹𑍍𑌯𑍇 𑌶𑌿𑌬𑌿𑌰𑌯𑍁𑌤𑌾𑌨𑍇𑌕𑌰𑌕𑍍𑌷𑌕𑌾 ।
𑌪𑍂𑌰𑍍𑌵𑌾𑌯𑌾𑌂 𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑌤𑌸𑍍𑌸𑌾𑌮𑍍𑌮𑍁𑌖𑍀 𑌵𑌾 𑌰𑌾𑌜𑌭𑌯𑌯𑍁𑌕𑍍𑌤𑌾 ॥ ௨௨ ॥

(தேசமத்தியில்) ஸாதுக்கள் (நல்லோர்) அதிகமாக இருக்குமிடத்தில், நதியின் ஸமீபத்தில், நகரத்தை நிர்மாணம் செய்யவேண்டும். அல்லது ராஜ கிரஹத்துடன் கூடிய ராஜதானியை நிர்மாணம் செய்யவேண்டும். 19

நான்கு திக்குகளிலும் நான்கு கோபுரங்களுடையதும், கோட்டைச் சுவர்களுடன் கூடியதும், பதார்த்தங்களை வாங்கி விற்பனை செய்யும் வியாபாரிகளுடன் கூடியதும், ஸகலவித ஜனங்களும் வஸிக்கத்தக்க வீடுகள் நிறைந்ததும், ஸகல தேவாலயங்களுடன் கூடியதுமான வாஸ்துவானது நகரம் என்று கூறப்பட்டிருக்கிறது.

மேற்கு திக்கு வடக்கு திக்குகளில் பிரவேசிக்க முடியாததும், (வழி இல்லாததும்) சுற்றிலும் கோட்டைச் சுவர்களுடன் கூடியதும், அதன் வெளிப்பக்கத்தில் மணல் குவியல்களுடன் கூடியதும் கோட்டையைச் சுற்றிலும் அகழிகளுடன் கூடியதும், அதற்கு வெளிப்பக்கத்தில், கூடாரங்களுடன் (ஸேனைகள் தங்குமிடங்களுடன்) கூடியதும், அநேகம் விதமான ரக்ஷைகளுடன் கூடியதும், கிழக்கிலும் தெற்கிலும் அபிமுகமாக இருப்பதும், ராஜ

ஸாலப்ராகாரஸம்யுக்தா நாநாவீதிஸமந்விதா ।
ஸர்வதேவாலயைர்யுக்தா நாநாகணிகாந்விதா பஹூத்யாநா ॥

ஹஸ்த்யஶ்வரதபதாதி பஹுத்வாரோபத்வாரா ஸர்வஜநயுக்தா ।
அந்தர்பஹுஜநாகீர்ணா ॥௨௪॥

யா ந்ருபவேஶ்மஸமேதா ஸா கதிதா ராஜதாநீதி ।
காநநவநேஷு வா ஸர்வஜநாவாஸஸங்கீர்ணே ॥ ௨௫ ॥

க்ரயவிக்ரயகைர்யுக்தம் யத் ததேவ புரமிதி ।
ஶ்ரேஷ்டிபிஸ்ஸ்திதம் யத் நத்யாவ்ருதம் தத் வேடம் ॥

பலத்துடன் கூடியதும், உயரமான கோபுரத்துடன் கூடியதும் பற்பல விதமான மாளிகைகளுடன் (ஜனங்கள் வஸிக்கும் வீட்டு வரிசைகளுடன்) கூடியதும், ஸகலவிதமான தேவாலயங்களுடன் கூடியதும், நாநாவிதமான கணிகை (தாஸிகள்) களுடன் கூடியதும், பல உத்தியானங்களுடன் கூடியதும், யானைப்படைகளுடனும், குதிரைப் படைகளுடனும் ரதங்களுடனும், காலாட்படைகளுடனும் கூடியதும், ஸகலவிதமான ஜனங்களுடன் கூடியதும, துவாரங்களுடனும், உப துவாரங்களுடனும், (பெரிய வழிகளுடனும், சந்துகளுடனும்) கூடியதும், கோட்டையினுள் அநேகவிதமான ஜனங்கள் வஸிக்கக் கூடியதும், இருப்பதுடன், ராஜபவனத்துடன் கூடியதுமான நகரமானது, ராஜதாநீ என்று கூறப்பட்டிருக்கிறது. 24½

காடு அல்லது தோட்டத்தில், ஸகலவிதமான ஜனங்களும் வஸிக்கத்தக்க வீடுகளுடன் கூடியதும், கிரயவிக்கிரயங்கள் செய்யும் வியாபாரிகளுடன் கூடியதுமான இடத்திற்கு புரம் என்று பெயர். இந்த புரத்திற்கு நகரம் என்றும் பெயர், 25½

வஸிதः வவ-ஜதயுக்தம் வவ-ஃடகம் ஸவ-ஜநஸஹிதம் ।
வவ-ஃடவெடகஃமெத்ய யஜந* தாஸ்யம் ஜநஸ்தாநகுப்ஜம் || உஎ ||

ஸீவாநர மதவக்தோஹிர ஹியுக்தம் ஸவ-ஜநஸஹிதம் |
க்ரயவிக்ரயகெய-யுக்தம் ரத்நயநக்ஷளஉவஸ்ஹாஸ்யம் || உஅ ||

ஸாமுரவெஹா ஹ்யாஸெ தத்ந.மதாயாஃவக்தம் வெராக்தம் ।
வரநூவஷெஃஸஸீவெ யுஸாரம் ஹக்ரியொவெதம் || உகூ ||

ஸெநாஸெநாவதியுநஃஷஉஷிதம் ஃஸிரஃதி அ வஸெ: ।

நதிகளாலும் மலைகளாலும் சூழப்பட்டு, சூத்திரர்கள் வஸிக்கின்ற இடத்திற்கு கேடம் என்று பெயர். 26

நான்கு பக்கங்களிலும் மலைகளினுலே சூழப்பட்டதும், ஸகலவிதமான ஜனங்களும் வஸிக்கக்கூடியதுமான இடத்திற்கு கர்வடம் என்று பெயர். 26½

கர்வடம், கேடகம், இவைகளின் மத்தியில், ஜனங்கள் வஸித்துவரும் இடத்திற்கு ஜனஸ்தான குப்ஜம் (ருப்ஜம் என்பது பாடபேதம்) என்று பெயர். 27

துவீபாந்தரங்களிலுள்ள பதார்த்தங்களுடன் கூடியதும், ஸகலவிதமான ஜனங்களுடன் கூடியதும், விலைக்கு வாங்கி விற்கும் வியாபாரிகளுடன் கூடியதும், ரத்னங்கள், தனம், வெண்பட்டுக்கள், முதலிய பண்டங்களுடன் கூடியதும், ஸமுத்திரக்கரையின் ஸமீபத்திலிருப்பதும், அந்த பதார்த்தங்களை உத்தேசித்து வருகின்ற ஜனங்களுடன் கூடியதுமான இடத்திற்கு, பத்தனம் என்று பெயர் கூறப்பட்டிருக்கிறது.

சத்ரு ராஜாக்களின் அல்லது இதர ராஜாக்களின் தேசத்திற்கு ஸமீபத்தில், யுத்தத்தைத் துவக்குவதற்கு

---

*வாஸம் தா தக காஸம் உதி வாமோஹநம் ।

[illegible]

[illegible]
[illegible]

[illegible]
[illegible]

[illegible]
[illegible]

வேண்டிய காரியங்களுடன் கூடியதும், ஸேனைகளுடனும், ஸேனாபதிகளுடனும் கூடியதுமான இடத்திற்கு, சிபிரம் என்று பெயர், என்று பெரியோர்கள் கூறுகிறார்கள். 29½

அதே இடமானது, ஸகலவிதமான ஜனங்களினாலும் நிறைந்தும், ராஜ பவனத்துடன் கூடியும், அனேகவிதமான காவல்களுடன் கூடியும் இருந்தால், அதற்கு ஸேநாமுகம் என்று பெயர், என்று அந்த விஷயத்தையறிந்தவர்கள் கூறுகிறார்கள். 30½

பக்கங்களில் மலைகளும் நதிகளுமிருக்குமிடத்தில், ராஜ பவனத்துடனும், பலவித கட்டுக்காவல்களுடனும், அரசனால் அமைக்கப்பட்டிருக்கும் இடத்திற்கு, ஸ்தானீயம், என்று பெயர் கூறப்பட்டிருக்கிறது 31½

சில்பாசாரியர்கள், நதியின் தென்பக்கத்திலும் ஸமுத்திரத்தின் வடபக்கத்திலுள்ளதும், வியாபாரிகள் முதலியவர்களுடன் கூடியதும், ஸகலவித ஜனங்களும் வஸிக்கத் தக்கதுமான இடமானது, துரோணமுகம், என்று கூறப்பட்டிருக்கிறது, என்று கூறியுள்ளார்கள்.

இது கிராமத்திற்கு ஸமீபத்தில் ஜனங்கள் வஸிக்கக் கூடிய இடமாக இருந்தால், அதற்கு விடம்பம் என்று பெயர், என்று கூறியுள்ளார்கள். 33

वनमध्ये जनावासं यत् कोट्टकोलकं प्रोक्तम् ।
आद्यवर्णाद्युपेतं सर्वजनावाससंकीर्णम् ॥ ३४ ॥

बहुकर्मकरायुक्तं यन्निगमं तत् समुद्दिष्टम् ।
नद्यद्रिवनसंयुक्तं बहुजनसमायुक्तं नृपवासम् ॥ ३५ ॥

यत् तत् स्कन्धावारं तत्पार्श्वे चेरिका प्रोक्ता ।
गिरिवनजलपङ्केरिणदैवतमिश्राणि सप्तदुर्गाणि ॥ ३६ ॥

गिरिमध्यं गिरिपार्श्वं गिरिशिखरं पार्वतं दुर्गम् ।
अजलं तरुसंगहनं वनदुर्गं दुष्प्रवेशं तु
स्यात् ॥ ३७ ॥

வனமத்தியில் ஜனங்கள் வஸித்துவந்தால், அந்த இடத்திற்கு கோத்மகோலகம் என்று பெயர் கூறப்பட்டிருக்கிறது.

பிராம்ஹணர்கள் முதலிய நான்குவிதமான ஜாதிகளுடன் கூடியதும், ஸகலவிதமான ஜனங்களும் வஸிக்கின்ற வீடுகளுடன் கூடியதும், பலவிதமான தொழிலாளிகளுடன் கூடியதுமான ஸ்தலத்திற்கு நிகமம் என்று பெயர் கூறப்பட்டிருக்கிறது. 34½

நதீ–மலை–வனம் இவைகளுடன் கூடியதும், பஹுவிதமான ஜனங்களுடன் கூடியதும், ராஜபவனத்துடன் கூடியதுமான ஸ்தானத்திற்கு ஸ்கந்தவாரம் என்று பெயர். இதன் பக்கத்தில் சேரி இருக்கவேண்டுமென்று கூறப்பட்டிருக்கிறது.

கிரிதுர்கம் 1, வனதுர்கம் 2, ஜலதுர்கம் 3, பங்க (சேறு) துர்கம் 4, இரிண (பொட்டல்வெளி) துர்கம் 5, தைவத துர்கம் 6, மிச்ரதுர்கம் 7. என்று, துர்கங்கள் ஏழுவிதங்களாகும்.

கிரிமத்யம், கிரிபார்சுவம், கிரிசிகரம் என்று கிரிதுர்கம் மூன்றுவிதமாகும். (1)

ஜலமில்லாமலும், மரங்கள் அடர்த்தியாக உள்ள காடுகளால் (சூழப்பட்டிருப்பதால்) துஷ்பிரவேசமாகவும் இருப்பது வனதுர்கமாகும். (2)

[illegible]

[illegible]

[illegible]

கிரிதுர்கம், வனதுர்கம் இரண்டும் சேர்ந்திருப்பது மிச்ர துர்கமாகும். (3)

இயற்கையாகவே அமைந்திருக்கும் துர்கமானது தைவதுர்கமாகும். (4)

நகரத்தைச் சுற்றிலும் சேற்றினாலாகியது பங்கதுர்கம் எனப்படுகிறது. (5)

நதியினாலும், ஸமுத்திரத்தினாலும் சூழப்பட்டிருந்தால், அது ஜல துர்கமாகும். (6)

காடுகளோ, ஜலமோ, இல்லாமல் ஒரே பொட்டலாக இருப்பது, இரிண துர்கமாகும். (7) 38

நகரமானது, கீழே கூறப்பட்ட துர்க்கங்களால் சூழப் பட்டதாக இருந்தாலும், கோட்டைச் சுவர்களுடன் கூடியதாகவும், அநேகம் விதமான காவந்துகளுடன் கூடியதாகவும் இருக்கவேண்டும். 39

வனதுர்கமில்லாத நகரமானது, கோட்டைக்கு வெளிப் பக்கத்தில் அகழியுள்ளதாகவும், மறைக்கப்பட்ட வழியுடையதாகவும், பகைவர்கள் நுழைய முடியாததுமாக இருக்கவேண்டும். மேலும்,—

கோபுரங்களுடனும் மண்டபங்களுடனும் கூடின

[illegible]

[illegible]

த்³விகவாட§மர்க³ளபரிக⁴ஹஸ்தோந்நதேந்த்³ரகீலயுதம் ।
ஸஸ்தம்ப⁴மத்⁴யஶாலயுதமிஷ்டகஸஹிதம் ஸகு³ப்தஸோபாநம் ||௪௧||

த்³வாராணி மண்ட³பஸபா⁴ஶாலாகாராணி காரயேத்தாநி ।
ஶாலாஸு ஸா(ஶா)லாகாராம் *சதுரஶ்ரம் வ்ருத்தம் ததா²யதம் ச
வ்ருத்த꞉ ||௪௨||

‡சக்ரம் வ்ருத்தம் கௌ³ட³க்ஷேத்ரமித² கும்ப⁴ம் நாக³வ்ருத்தம் ச ।
மக்³நசதுரஶ்ரம் த்ரிகோணமஷ்டாஶ்ரம் நேமிகண்ட²ம் ச ||௪௩||

வ்ருத்தாகாராஶ்ரேஷ்டகயா ஶாலா ஸம்ஸ்தா²ப்ய ஸ்தி²தா꞉ ।

தாகவும், மறைக்கப்படாததாக இருப்பினும், படிக்கட்டுகளாலே மறைக்கப்பட்டதாகவும், இரண்டு கதவுகள், பரிகமென்னும் ஆயுதங்களாலான தாப்பாள்கள், ஒரு முழம் உயரமுள்ள இந்திரகீலம் (தாப்பாள்) இவைகளுடன் கூடியதும், தூண்களுடன் கூடிய மத்தியமாலயத்துடன் கூடியதும், இட்டகத்துடன் (கல்) கூடியதும், ரஹஸ்யமான படிக்கட்டுகளையுடையதுமாக இருக்கவேண்டும். 41

துவாரங்களை, (கோட்டைவாயில்களை) மண்டபம்—ஸபை—சாலை—இவைகளைப்போன்ற வடிவமுள்ளவைகளாக அமைக்கவேண்டும்.

சாலையின் உருவங்கள், * சதுரம், 1, விருத்தம் 2, ஆயதம் (ஆயதவிருத்தம்) 3, சக்ரம் 4, விருத்தம் 5, கௌக்குடம் 6, கும்பம் 7, நாகவிருத்தம் 8, மக்ன சதுரம் 9, த்ரிகோணம் 10, அஷ்டாச்ரம் 11, நேமிகண்டம் 12, என்று பன்னிரண்டுவிதமாகும். 43

---

§அர்க³ளபரிவஸ்ரமஞ்சம், இதி பாடா²ந்தரம் ।
*சதுரஶ்ரம் வ்ருத்தமாயதம் ச பாட²꞉ । இதி பாடா²ந்தரம் ।
‡சக்ராவர்த்தம் இதி பாடா²ந்தரம் ।
* சதுரச்ரம் 1, விருத்தம் 2, ஆயதம் 3, புரம் 4, நந்தியாவர்தம் 5, கௌக்குடம் 6, என்று மற்றொரு பாடம்.

[illegible] || ௪௪ ||

[illegible]

[illegible] ||௪௫||

[illegible]

[illegible] ||

[illegible]

கோட்டைச் சுவர்கள் யாவும் செங்கற்களால் கட்டப் படவேண்டும். அவைகள் பன்னிரண்டு (12) முழ உயரத் திற்குக் குறைவில்லாமல் இருக்கவேண்டும். அவைகளின் அகலமானது, உயரத்தின் அளவில் சரிபாதி அளவு இருக்க வேண்டும். அதன் அடித்தலத்திலுள்ள சுவரானது மனித ஸஞ்சார யோக்யமாக இருக்கவேண்டும். 44

கோட்டைச் சுவர்களின் உள்பக்கத்தில், மண் குவியல் களுக்கு மேலே அநேக யந்திரங்கள் (பீரங்கிகள்) வைக்கப் பட்டிருக்கவேண்டும். கோட்டைச் சுவர்களைச் சுற்றி அகழிகள் இருக்கவேண்டும். மண்குவியல்களிலமைந்துள்ள சந்துகளையுடையதாக இருக்கவேண்டும். (இந்த சந்தானது அகழிக்கும் கோட்டைச் சுவருக்கும் மத்தியிலுள்ளதாகும். இதற்கு அலங்கம் என்று பெயர். இது படைகள் ரஹஸ்ய மாக ஸஞ்சரிப்பதற்காகக் கூறப்பட்டதாகும்.) கோட்டைச் சுவற்றிலும் சிபிரங்களிருக்கவேண்டும். (சிபிரம் – பதாதி களும் ஸேனாபதிகளும் ஆயுதங்களுடன் தங்குவதற்கான இடம்.) கோட்டைக்குள் பற்பலவிதமான ஜனங்கள் வஸிக்கும் வீடுகளும் ராஜபவனமும் இருக்கவேண்டும். யானைப் படைகள், குதிரைப் படைகள், ரதங்கள், பதாதிகள் இவர்களால் நிறைந்திருக்கவேண்டும்.

தானியங்கள், தைலங்கள், க்ஷாரங்கள் (க்ஷாரம் - உப்பு),

लोहं स्नायुविषाणवेणुतृणेन्धनसंयुतम् ॥ ௪௭ ॥

चर्मकार (अङ्गार) युक्तं सवल्कलं (वल्लूरैः)
सारदारुयुतम् ।

दुर्गं दुर्गमशक्यं दुर्लङ्घ्यं दुरवगाहं च ॥ ௪௮ ॥

रक्षार्थं च जयार्थं शत्रुभिरभेद्यं च दुर्गमिष्टं
स्यात् ।

इन्द्रश्च वासुदेवो गुहो जयन्तश्च वैश्रवणः ॥

अश्विनौ श्रीमदिरे शिवश्च दुर्गा सरस्वती चेति ।
प्राकाराभ्यन्तरस्था दुर्गनिवेशे च विज्ञेयाः ॥ ௫௰ ॥

லவணம் (ஸமுத்திர உப்பு), மருந்துப் பண்டங்கள், கந்தகம், விஷம், லோஹம் (இரும்பு), கெரி, நரம்புகள், விஷாணம் (கொம்புகள்), மூங்கில், விறகு, வைக்கோல்–புல் முதலியவைகள் [1] சர்மகாரன் (தோல் தொழில் செய்பவன்), [2] வல்கலம் (மரவுரி), ஸாரமான (அழுத்தமான) மரங்கள் இவைகள் நிறைந்திருக்கின்ற துர்கமானது, பகைவர்களாலே ஆக்ரமிக்கமுடியாததும், கோட்டைச் சுவரைத் தாண்டிச் செல்ல முடியாததும், அகழியில் நீந்திச்செல்ல முடியாததும் ஆகுமென்று கூறப்பட்டிருக்கிறது. 48

தற்காப்புக்காகவும், பகைவர்களை வெற்றிகொள்ளுவதற்காகவும், சத்துருக்களினாலே பேதிக்கமுடியாத இத்தகைய கோட்டையானது விரும்பத்தக்கதாகும் என்று கூறப்பட்டிருக்கிறது. 48½

பிராகாரத்தின் உள் பக்கத்தில் இந்திரன் 1, வாஸுதேவன் 2, குஹன் 3, ஜயந்தன் 4, வைச்ரவணன் (குபேரன்) 5, அசுவிநீ தேவர்கள் 6, ஸ்ரீதேவீ 7, மதிராதேவீ 8, சிவன் 9, துர்கை 10, ஸரஸ்வதீ 11 இவர்களை ஸ்தாபிக்கவேண்டும். துர்கநிவேசங்களிலும் ஸ்தாபிக்க

---

1. தோல், கரிகாய்கள் என்பது பாடபேதம்.
2. வல்லூரம் என்பது பாடபேதம்.

[illegible] ||௫௧||

[illegible] ||௫௨||

[illegible]

[illegible]

வேண்டும். (படைகள் தங்குமிடங்களிலும்) ஸ்தாபிக்க வேண்டும். 50

பழங்கால முனிவர்கள் இவ்விதமாகத் துர்கவிதானத்தை (துர்கம் அமைக்கவேண்டிய விதத்தை) நன்கு கூறியிருக்கிறார்கள்.

கோட்டைகளின் விந்யாஸங்கள் (அமைப்புகள்) எல்லாவற்றையும் முறையே கூறுகிறேன். 51

நகரங்களில், கிழக்கு மேற்காகச் செல்லுகின்ற வழியானது, பன்னிரண்டு (12) பத்து (10) எட்டு (8) ஆறு (6) நான்கு (4) அல்லது இரண்டு (2) என்று இரட்டைப் படையாக இருந்து, அவ்விதமாகவே, தெற்கு வடக்காகவும் இரட்டைபடையான மார்க்கங்களிலிருந்தாலும், பதினொன்று (11) ஒன்பது (9) ஏழு (7) ஐந்து (5) மூன்று (3) அல்லது ஒன்று (1) என்று ஒத்தைப்படையான மார்க்கங்களிருந்தாலும், யுக்மபதம் அயுக்மபதங்களில், பிரம்ஹாம்சமானது, ஒரு அம்சம், அல்லது இரண்டு அம்சம், அல்லது மூன்று அம்சமுடையதாக இருப்பதாகும். 53

இவ்விதமாக நகரம் முதலிய எல்லாவற்றிற்கும், மார்க்கங்கள் கூறப்பட்டிருக்கின்றன. 53½

தண்டவதேகாவீதீ தத்தண்டகமிதீஷ்டம் ஸ்ம்ருதம் || ௫௪ ||

உத்தரதக்ஷிணவக்ரைகம் தன்மத்யே ஸம்ப்ரயுக்தம் ததா |
கர்த்தரீதண்டகம் ப்ரோக்தம் ப்ராக்ப்ரத்யக் குட்டிமே த்வயம் || ௫௫ ||

தத்பாஹுதண்டகம் ஸ்ம்ருதம் திக்ஷு சதுர்மார்கஸம்யுக்தம் |
பஹுகுட்டிமஸம்யுக்தம் மத்ய(மத்யம்)வீத்யா பார்ச்வயோஸ்ததா ||

சேஷம் பூர்வவதுத்திஷ்டம் குடிகாமுகதண்டகம் ப்ரோக்தம் |
ப்ராக்வீதீத்ரயோபேதை: உதக்வீதிபிரேவ ஸம்யுக்தம் || ௫௭ ||

தத்கலகாபந்ததண்டகமிதி தத்ஜ்ஞை: ஸமுத்திஷ்டம் |
ப்ராகுதக்வீதித்ரயோபேதம் பார்ச்வயோரேவ || ௫௮ ||

நகரமத்தியில் தண்டாகாரமாக ஒரேவழி இருந்தால், அதற்கு தண்டகம் என்று பெயர். 54

அதன் நடுவில் வடக்கு முகமாக மற்றொரு வழி கல்பிக்கப்பட்டிருந்தால், அதற்கு கர்தரி தண்டகம் என்று பெயர்.

அந்த நகரத்தின் மத்தியில் கிழக்கு மேற்கில் இரண்டு குட்டிமமார்கள் (கற்களால் கட்டப்பட்ட வழிகள்) இருந்தால் அதற்கு பாஹுதண்டகம், என்று பெயர். 55½

நான்கு திக்குகளிலும் நான்கு வழிகளிலிருந்து, வீதியின் மத்தியில் இரு பக்கங்களிலும், அநேகம் குட்டிமமார்க்கங்களிலிருந்து மற்றவைகள் முன்பு கூறப்பட்டதைப்போலிருந்தால், அதற்கு குடிகாமுகதண்டகம் என்று பெயர். 56½

கிழக்கு முகமாக மூன்று மார்கங்களும், வடக்கு முகமாக மூன்று மார்கங்களும் இருந்தால், அதற்கு, கலகாபந்த தண்டகம் என்று பெயர். 57½

கிழக்குமேற்கான மார்கங்கள் மூன்றும், தெற்குவடக்

ணாஶ்சைகாந்தரிதாஸ்த்ரை குட்டிமமார்காஶ்சாநேகஶ꞉ ।
வேதீபத்ரகமிதம் நகராதீநாமிதம் ஶஸ்தம் ॥ ௫௯ ॥

ஸ்வஸ்திகமார்கம் க்ராமே யதா ததா ஸ்வஸ்திகம் விதீயதே ।
ப்ராகாயதாஸ்ததோதகாயதா மார்கா꞉ ஷட்ஷட்ஸ்வஸ்திகாஸ்தத்வத்பவேத் ॥

ப்ராகுதக் ஸாமாந்யவேதம் வீதீவத்தம் ஸ்வஸ்திகம் சைவ ।
ப்ராசீநாதீவீதா꞉ அஷ்டாஸ்வேவ மார்கா꞉ ஸ்யு꞉ ॥ ௬௧ ॥

ப்ரஹ்மாவ்ருதவீத்யேகம் குட்டிமமார்கா꞉ த்ரய꞉ ப்ராக்ரா꞉ ।
பத்ரகம் பத்ரகமிதம் நாம நகராதிவிந்யாஸம் ॥ ௬௨ ॥

கான மார்க்கங்கள் மூன்றும் இருந்து, அவைகள் ஒன்றுக் கொன்று குறுக்கேசென்றும், அவைகளில் பலவழிகள் குட்டிம மார்க்கங்களாகவும் (கல்லால் கட்டப்பட்ட மார்க்கங்களாகவும்) அமைந்திருந்தால் இதற்கு வேதிபத்திரம் என்று பெயர். இது நகரம் முதலியவைகளுக்குச் சிறந்ததாகும் என்று கூறப் பட்டிருக்கிறது. 59

கிராமவிந்யாஸத்தில் ஸ்வஸ்திகமார்க லக்ஷணம் கூறப் பட்டிருக்கிறது. அவ்விதமாகவே நகராதிகளிலும் ஸ்வஸ்திக மார்க லக்ஷணத்தைக் கொள்ளவேண்டும். 59½

கிழக்குமுகமாக ஆறு வழிகளும், வடக்குமுகமாக ஆறு வழிகளும் இருந்து, அந்த வழிகள் முன்பு ஸ்வஸ்திக மார்கத் துக்குக் கூறப்பட்டதைப்போலவும் இருக்கவேண்டும். இவ் விதமாக இருந்தாலும், அது ஸ்வஸ்திகமார்கம் ஆகும். 60½

கிழக்குமேற்காக நான்கு (4) வீதிகளும், தெற்குவடக் காக நான்கு வீதிகளும் இருக்கவேண்டும். பிரம்ஹ ஸ்தானத்தைச் சுற்றிலும் ஒரு மார்கம் இருக்கவேண்டும். இவ்விதமாக நகராதிகளின் விந்யாஸம் அமைந்திருந்தால் அதற்குப் பத்திரகம் என்று பெயர். 62

ப்ராகு³த³க்³தீ³ர்க⁴மார்கா³: பஞ்சைவோத்தரமார்கா³: ததை²வ ஹி ।
ப³ஹுகுட்டிமஸம்யுக்தம் முக²ம் ப⁴த்³ரம் நாம தஸ்ய து ॥ ௬௩ ॥

ப்ராக்ப்ரத்யக்ஷட்பதா²ஶ்சைவோத்தரவக்த்ராயதா மார்கா³: ।
யதி³ ப³ஹுகுட்டிமயுக்தம் தத³ஸ்ய ப⁴த்³ரகல்யாணம் ॥ ௬௪ ॥

பூர்வாபரஸப்தமார்கா³: ஸப்தைவோத³க³யதா ததா² ।
ஶேஷம் ப்ராக்³வத் ஸர்வம் விந்யாஸம் தந்மஹாப⁴த்³ரம் ॥ ௬௫ ॥

அஷ்டௌ பூர்வாபரமார்கா³ஸ்ததா²ஷ்டாவுத்தராயதா: ।
த்³வாத³ஶ மார்கா³ஸ்தேஷாம் ஸார்க³ளகுட்டிமயுக்தா: ॥ ௬௬ ॥

யத்³யஸ்ய ஸர்வதோப⁴த்³ரம் நாம விந்யாஸகம் ப⁴வேத் ।

கிழக்குமுகமாக ஐந்து (5) மார்கங்களும், வடக்குமுகமாக ஐந்து (5) மார்கங்களுமிருந்து அவைகளில் பலகுட்டிம மார்கங்களுமிருந்தால், (குட்டிம மார்கம் — கல்லால் கட்டப்பட்ட வழி. இதைக் கயிர்களினால் அமைக்கப்பட்ட வழி என்றும் கூறலாம்.) அதற்கு, பத்திர முகம், என்று பெயர்.

கிழக்குமேற்காக ஆறு (6) வழிகளும், தெற்கு வடக்காக ஆறு (6) வழிகளும் இருந்து, அவைகளில் பலவழிகள் குட்டிமமாகவுமிருந்தால், அதற்கு (நகரத்திற்கு) பத்திர கல்யாணம் என்று பெயர். 64

கிழக்குமேற்காக ஏழு (7) மார்கங்களும், தெற்குவடக்காக ஏழு மார்கங்களும், மற்ற லக்ஷணங்கள் முன்பு கூறியது போலவும் அமைந்திருந்தால் அதற்கு மஹாபத்திரம் என்று பெயர். 65

கிழக்குமேற்காக எட்டு (8) மார்கங்களும், தெற்குவடக்காக எட்டு (8) மார்கங்களும் இருந்து அவைகளுள் பன்னிரண்டு மார்கங்கள் அர்களங்களுடனும், குட்டிமங்களுடனும் கூடியவைகளாகவுமிருந்தால், இந்த நகரவிந்யாஸத்திற்கு

ஸவநவமார்காஶ்சைவ ப்ராகுதீச்யாஶ்வாப்யுதீசிகா: || ௬௭ ||

ஸந்த்யோபஸந்த்யாயுக்தம் குட்டிமமார்கார்களைர்யுக்தகம் ।
ராஜஹர்ம்யோபேதம் யத் நகரம் நாம்நா ஜயாங்கம் வதேத் || ௬௮ ||

ப்ராசீநாதி தஶமார்கா: ஸ்யுர்தஶமார்காஸ்ததைவ ஹ்யுதக் ।
ந்ருபவேஶ்மஸம்யுக்தம் யுக்த்யார்களகமார்கயோபேதம் || ௬௯ ||

பஹுகுட்டிமஸம்யுக்தம் விஜயம் நாமத: ஸ்ம்ருதம் ।
ப்ராசீநாஶ்சைகாதஶமார்கா ருத்ரா உதீசிநா: || ௭௦ ||

ப்ரஹ்மாம்ஶாதிவர்ஜாம்ஶோ(ஶே)யதிஷ்டம் தத்ர ந்ருபாலயம் ।
தத்பூர்வதோऽங்கணம் மஹாப்ரமாணகம் ஸ்யாதிஷ்டஸ்தாநே து || ௭௧ ||

ஸுபத்திரம் என்று பெயர். (அர்களம்–தாப்பாள் குட்டிமம் – கற்களால் கட்டப்பட்டது.) 66½

கிழக்கு நோக்கி ஒன்பது (9) வழிகளும், வடக்கு நோக்கி (9) வழிகளும் இருந்து, சந்துகளுடனும், சந்துக்குள் சந்துகளுடனுமிருந்து, குட்டிம மார்கங்களுடனும், அர்களங்களுடனும் கூடியதாகவுமிருந்து, அந்த நகரத்தில் ராஜபவனமும் இருந்தால், அந்த நகரத்திற்கு ஜயாங்கம் என்று பெயர்.

கிழக்கிமேற்காகப் பத்து (10) வழிகளும், தெற்குவடக்காகப் பத்து (10) வழிகளும், அந்த நகரத்துல் ராஜபவனமுமிருந்து, அதில் யுக்தியுடன் கல்பிக்கப்பட்ட அர்களங்களும், பல குட்டிமங்களுமிருந்தால் அதற்கு விஜயம் என்று பெயர் கூறப்பட்டிருக்கிறது. 69½

கிழக்குமேற்காகப் பதினோறு (11) மார்கங்களும், தெற்குவடக்காகப் பதினோறு (11) மார்கங்களும் இருக்க வேண்டும். பிரம்ஹாம்சத்தை நீக்கி, விருப்பமான அம்சத்தில் ராஜபவனமிருக்கவேண்டும். அதன் முன்பக்கத்தில் இஷ்டமான இடத்தில் அமைக்கப்பட்டுள்ள பெரிய அங்கணம் (கட்டிடம்) இருக்கவேண்டும்.

तत्रान्तःपुरवासं शेषं पूर्वं समुन्नयेत् ।
तत्प्राङ्मार्गं मध्यमार्गं सा कथिता राजवीथिका ॥ ௭௨ ॥

तस्याः पार्श्वयोः स्थाने वेश्मपङ्क्तिर्धनाढ्यानां राजिका
वक्त्रिः ।
तत्पार्श्वयोर्द्वयोर्वासो वणिजां तस्य दक्षिणतः ॥

तन्तुवायवासं तूत्तरे चक्रिणां वासम् ।
तज्जात्यनुक्रमेणैव तत्स्थानेषु कल्पयेत् ॥ ௭௩ ॥

शेषं प्रागिव सर्वं योग्यं (ज्यं) तत् सर्वतो
भद्रम् ।
एवं षोडशभेदा हि मुनिभिः प्रोक्ताः प्रस्तारे पुरातनैः ॥

அதில் அந்தப்புர ஜனங்களின் வாஸஸ்தானம் இருக்க வேண்டும். மற்றவைகளை ஊஹித்துக்கொள்ளவேண்டும். அந்த அரண்மனைக்குக் கிழக்கிலிருந்து செல்லுகிற மார்கமானது, ராஜவீதி என்று கூறப்படுகிறது. அந்த ரராஜவீதியின் இரண்டு பக்கங்களிலும், தனவந்தர்களின் மாளிகையின் வரிசையானது இருக்கவேண்டும். அதற்கு இரண்டு பக்கங்களிலும் வியாபாரிகளின் வாஸஸ்தலமிருக்கவேண்டும். அதற்கு தென்பக்கத்தில் தந்துவாயன்களின் (சேணியன்களின்) வாஸஸ்தலமிருக்கவேண்டும். அதற்கு வடக்கில் சக்கிரிகளின் (குயவர்களின்) வாஸஸ்தலமிருக்கவேண்டும். அதன் பக்கங்களின், அந்தந்த ஜாதியினர் வஸிப்பதற்கான இடங்களைக் கல்பிக்கவேண்டும். மற்றவைகளை முன்பு கூறப்பட்டிருக்கிறபடியே கல்பித்துக்கொள்ளவேண்டும். இவைகள் யாவும் சேர்ந்து ஸர்வதோபத்ரம் என்று கூறப்படுகிறது.

பழைய காலத்திய முனிவர்கள், இவ்விதமாகப் பதினாறு (16) விதமான நகரவிந்யாஸங்களைக் கூறியிருக்கிறார்கள். 75

पदमध्ये तु मार्गच्छेदं वर्ज्यं सन्धिर्न स्यात् ।
शेषं यत्कथितं शिल्पं योग्यं नृपाज्ञया
तच्छिक्षेत् ॥ ७५ ॥

क्षुद्राणामपि मध्यानां नगराणामपि क्रमात् ।
तत्र कुटुम्बावलिकं वक्ष्येऽहं चान्तरापणम् ॥ ७७ ॥

परितो रथवीथ्यः स्युर्मध्ये वणिजां गृहश्रेणी ।
तद्दक्षिणतः पार्श्वे गेहं स्यात् तन्तुवायानाम् ॥ ७८ ॥

उत्तरत्रावासावलिकं स्याच्चक्रिकाणां तु ।
कंसकारविसिकानां स्याद्वासं रथवीथिकानाम् ॥ ७९ ॥

ब्रह्मपदमेकं तत्राग्रापणं कार्यम् ।

பதமத்தியில், மார்கச்சேதம் செய்வது, விரும்பத்தக்கதல்ல. சந்தும் இருக்கக்கூடாது சில்பத்தை அறிந்தவர்கள் அரசனின் அனுமதியின்பேரில், இங்கு கூறப்படாத மற்றவைகளை நன்கு கல்பிக்கவேண்டும். 76

சிறிய நகரங்களிலும், மத்திம நகரங்களிலும், மற்ற (உதத்ம நகரங்களிலும்) குடும்பங்களின் வரிசைகளையும், உள்ளையில் கடைகளையும் கூறுகிறேன். 77

நகரத்தைச் சுற்றிலும் ரதமார்கங்களிருக்கவேண்டும். அதன் மத்தியில் வியாபாரிகளின் வீட்டு வரிசைகள் அமைந்திருக்கவேண்டும். அதன் தென்பக்கத்தில் சேணியர்களின் வீடுகள் இருக்கவேண்டும். 78

ரதமார்கத்தின் வடபக்கத்தில், சக்கிரிகளின் (குயவர்களின்) வீட்டு வரிசை இருக்கவேண்டும்.

ரதமார்கத்தில் பலவித தொழிலாளிகளின் வாஸஸ்தானங்கள் இருக்கவேண்டும்,

தாம்பூலாதிபலஞ்ச த்³ரவ்யம் ஸாராந்விதம் து ச || ௭௯ ||

ஈஶாநாதி³மஹேந்த்³ராந்தம் அந்தராபணமிஷ்யதே ।
தத்ரைவ உச்சமத்ஸ்யமாம்ஸம் பக்வம் ஶாகம் ச விஜ்ஞேயம் || ௮௧ ||

மஹேந்த்³ராத³க்³நிபர்யந்தம் ப⁴க்ஷ்யம் போ⁴ஜ்யம் ச நிர்தி³ஶேத் ।
* அக்³ந்யாதி³ரக்ஷ:பதா³ந்தம் தத்ர பாண்டா³தி || ௮௨ ||

தஸ்மாத் நிர்ருதிபதா³ந்தம் பாநபாத்ராதி³கம் விஜ்ஞேயம் ।
வஸ்த்ரம் பித்ருபதா³த்புஷ்பத³ந்தாந்தம் வஸ்த்ரம் ||

நகர மத்தியிலுள்ள பிரம்ஹபதத்தைச் சுற்றிச் செல்லுகின்ற ஓர் வழி இருக்கவேண்டும். அந்த இடத்தில், உட்கையில் கடைகள் கல்பிக்கப்படவேண்டும். அங்கு தாம்பூலாதிகளும், பழங்களும், ஸாரவத்தான திரவியங்களும் இருக்கவேண்டும். 80

ஈசானபதம் முதல் மஹேந்திரபதம் வரையில், அந்தராபணங்கள் (உள்கையில் கடைகள்) இருக்கவேண்டும். அதே இடத்தில் உயர்ந்த மத்ஸிய மாமிசம், காய்கறிகள் இவைகளுமிருக்கவேண்டும். 81

மஹேந்திரபதம் முதல் அக்னிபதம் வரையில், பக்ஷிய போஜ்யங்கள் வியாபாரம் செய்யவேண்டிய இடமாகக் கூறப்பட்டிருக்கிறது.

அக்கினிபதம் முதல் ராக்ஷஸபதம் வரையில், பாண்டங்கள் (சட்டிப்பானைகள்) வியாபாரம் செய்யுமிடம் ஆகும். 82

அதிலிருந்து நிருருதிபதம் வரையில், பானபாஜனம் (கிண்ணம்) முதலானவைகள் வியாபரம் செய்யுமிடமாகும்.

பிதிருபதம் முதல் புஷ்பதந்தபாகம் வரையில், வஸ்திரங்கள் (துணிகள்) வியாபாரம் செய்யுமிடமாகும். 83

* பாடா²: ராக்ஷஸபதா³ந்தம் உத பாபோ யத்ர உத ஸாதி ।

தஸ்மாத் ஸமீரணாந்தம் தாந்யாத்யாபணிகம் ப்ரகீர்த்திதம் ।
ஸமீராத் பல்லாடபதாந்தம் வஸ்த்ராத்யாபணிகம் ஸ்ம்ருதம் ॥ ௮௪ ॥

தத்ரைவ லவணாதித்ரவ்யம் தைலாதிகம் ஜ்ஞேயம் ।
தஸ்மாதீசபதாந்தம் கந்தம் புஷ்பாதிகம் விக்ரயம் ॥ ௮௫ ॥

ஏவம் நகராபணமார்க்கம் பரிவீதீஷு ஸர்வத: ।
ஈசாத்யம் ப்ரதக்ஷிணம் நவபதார்த்தம் ஆபணம் ஸ்ம்ருதம் ॥ ௮௬ ॥

ராஜிஷ்டம் தத் மரீசம் பிப்பலீகம் ஆபணி ஸர்வதா ।
மத்வாஜ்ய தைலாதிகம் ச ஔஷதத்ரவ்யம் ஸர்வத: க்ரயம் ॥ ௮௭ ॥

அங்கிருந்து வாயுபதம் வரையில் அரிசி, தானியங்கள், பாய் முதலியவைகள் வியாபாரம் செய்யுமிடமாகும்.

வாயுபதம் முதல் பல்லாடபதம் வரையில், வஸ்திரம் முதலியவைகள் வியாபாரம் செய்யுமிடமாகும். 84

அந்த இடத்திலேயே உப்பு முதலியவைகளும், எண்ணைகளும் வியாபாரம் செய்யவேண்டும்.

அங்கிருந்து ஈசானபதம் வரையில், கந்த (வாசனை) திரவியங்களும், புஷ்பம் முதலியவைகளும் வியாபாரம் செய்யவேண்டும் என்று கூறப்பட்டிருக்கிறது. 85

இவ்விதமாக நகர மத்தியில், பிரம்ஹபதத்தைச் சுற்றிலுமுள்ள வழியில், ஈசானபதம் முதல் முறையே, வலமாக ஈசானபதம் வரையில், சுற்றிலும் ஒன்பது (9) விதமான பதார்த்தங்கள் விற்பதற்குரிய ஸ்தானங்கள் கூறப்பட்டிருக்கின்றன.

அதன் மத்தியில் குறுக்கே செல்லுகின்ற வழிகளில் எங்கும் ரத்னங்கள், தங்கம், வஸ்திரம், மஞ்ஜிட்டை, மிளகு, திப்பிலி, மஞ்சள், தேன், நெய், தைலம் முதலியவைகள், மருந்து சாமான்கள், இவைகள் வியாபாரம் செய்யவேண்டும். 87

ஆர்யகபதே ச விவஸ்வந்மித்ரகே பூதரகே ச பதே ।
ஶாஸ்தா துர்கா கஜாஸ்யஶ்ச லக்ஷ்மீஶ்சாத்ரைவ விஜ்ஞேயா: ॥௮௮॥

தேவாலயாஶ்ச பரிதோ க்ராமே யதா ததா விதி: ।
வஸிதும் ஸர்வஜநாநாமுசிதம் கிஞ்சித்ததோ தூரே ॥ ௮௯ ॥

நகராத் த்விஶதம் தண்டம் த்யக்த்வா ப்ராச்யாம் து வாக்நேய்யாம் ।
சண்டாலகுடீராணி தத்ரைவ து கோலிகாநாம் து ॥௯௦॥

அநுக்தம் ஸர்வமுக்தம் து க்ராமே து யதா ததா விதி: ।
பத்தநம் ருஜுவீத்யந்தம் நைவ வ்யாகாதகாரணம் தத: ॥

ஆர்யபதம்-விவஸ்வத்பதம்-மித்ரபதம்-பூதரபதம் இந்த இடங்களில் சாஸ்தா (ஐயனார்), துர்கை—விநாயகர்—லக்ஷ்மி இவர்களைப் பிரதிஷ்டை செய்யவேண்டும். 88

அந்த இடத்தில் சுற்றிலும் நான்கு திக்குகளிலும், கிராமவிந்யாஸத்தில் கூறியிருப்பதைப்போல் தேவாலயங்களைக் கல்பிக்கவேண்டும்.

அதற்குச் சிறிது தூரத்தில் ஸகலவிதமான ஜனங்களும் வஸிப்பதற்குத்தக்க வாஸஸ்தானங்களைக் கல்பிக்க வேண்டும்.

நகரத்திற்கு வெளியில், நகரத்திலிருந்து இருநூறு(200) கோல் தூரத்திற்கப்பால், கிழக்கு திக்கிலாவது, அக்கினி திக்கிலாவது சண்டாளர்களின் குடிசைகளிருக்கவேண்டும். அந்த இடத்திலேயே கோலகர்களின் ஸ்தானங்களும் இருக்கவேண்டும். 90

இங்கு கூறப்படாத விஷயங்களைக் கிராமவிந்யாஸத்தில் கூறியிருக்கிறபடியே கொள்ளவேண்டும்.

நகரமானது நேராகச் செல்லுகின்ற வீதிகளையுடைய

ஶேஷாணாமபி தத்தத்யோக்யவாஸாஶ்ச தத்ர விஜ்ஞேயம் || ௯௨ ||

ஸ்தாநீயதுர்கபுரபத்தநகோட்டகோல-
த்ரோணாமுகாநி நிகமம் ச கேடமேவ கர்வடம் |
க்ராமம் ச தஶவிதமிதீஹ தஶைவ யுக்த்யா
விந்யாஸகாநி கதிதாநி புராதநாசார்யை: || ௯௩ ||

ஏவம் ப்ரோக்தம் ப்ராஹ்மணாதிகாநாம்
வர்ணாநாம் சாப்யத ஜாத்யந்தராணாம் |
க்ராமாதீநாம் வாஸவிந்யாஸமார்கம்
ஸாலங்காரம் ஶாஸ்த்ரஸங்க்ஷிப்ய தந்த்ராத் || ௯௪ ||

த்யக்தா(த்யக்த்வா)ஸர்வ: ஶ்ரீவதிகாதிஷு தத்ஷட்ஸ்வபி
ஶாலாதிகல்பிதவர்ணோபயுக்தம் ச மாநம் ச |

வைகளாக இருந்தால், அந்த நகரத்தில் அந்தரா பணம் இருக்கக்கூடாது. 91

மற்ற விஷயங்களை அதற்குத் தக்கபடி அறிந்துகொள்ள வேண்டும். 92

முன்காலத்தில் பெரியோர்கள் ஸ்தானீயம் 1, துர்கம் 2, புரம் 3, பத்தனம் 4, கோத்மகோலகம் 5. துரோணமுகம் 6, நிகமம் 7, கேடம் 8, கிராமம் 9, கர்வடம் 10 என்று கூறப்படுகின்ற பத்து (10) விதமான வஸ்துக்களின் விந்யாஸங்களை, யுக்தியாகக் கல்பிக்கவேண்டிய முறைகளைக் கூறியிருக்கிறார்கள். 93

இவ்விதமாகப் பிராம்ஹணாதி ஜாதியினரும்; மற்ற ஜாதியினரும் வஸிப்பதற்குரிய கிராமாதிகளின் விந்யாஸங்கள், சில்பசாஸ்திரங்களிலிருந்து கிரஹித்து இந்த நூலில் அலங்காரங்களுடன் அழகாகக் கூறப்பட்டிருக்கின்றன. 94

𑌨𑌿𑌤𑍍𑌯𑌂 𑌯𑌥𑌾 𑌜𑌨𑌪𑌤𑌿 𑌵𑌿𑌤𑍍𑌤𑍈𑌰𑌨𑍇𑌕𑌵𑌸𑍍𑌤𑍁-
𑌨𑌕𑍍𑌷𑌤𑍍𑌰𑌚𑌨𑍍𑌦𑍍𑌰𑌤𑌾𑌰𑌯𑌾𑌵𑌦𑌾𑌵𑌸𑌥𑌂 𑌦𑌦𑍍𑌯𑌾𑌤𑍍 𑌸𑌃 || ௯௫ ||

𑌇𑌤𑌿 𑌮𑌯𑌮𑌤𑍇 𑌵𑌾𑌸𑍍𑌤𑍁𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑍇 𑌨𑌗𑌰𑌵𑌿𑌧𑌾𑌨𑌂 𑌨𑌾𑌮
𑌦𑌶𑌮𑍋𑌽𑌧𑍍𑌯𑌾𑌯𑌃 ||

அரசன் மானுதி காரியங்களில் சமர்த்தர்களான ஸ்தபதி முதலான நான்கு பேர்களுக்கும், பூமியையும் பசுக்களையும் வழங்கவேண்டும். பணத்தையும் அநேகவிதமான வஸ்துக்களையும் வழங்கவேண்டும். அவர்கள் சந்திரனும் நக்ஷத்திரங்களும் இருக்கும் வரையில் சாசுவதமாக, பரம்பரையாக வஸித்துவருவதற்காக வீட்டையும் கட்டிக்கொடுக்கவேண்டும். **95**

நகரவிதானம் என்னும் பத்தாவது அத்தியாயம் முற்றும்.

𑌅𑌥 𑌏𑌕𑌾𑌦𑌶𑍋𑌽𑌧𑍍𑌯𑌾𑌯𑌃 ॥

𑌭𑍂𑌮𑌿𑌲𑌮𑍍𑌬𑌵𑌿𑌧𑌾𑌨𑌂 𑌤𑍁 𑌵𑌕𑍍𑌷𑍍𑌯𑍇 𑌸𑌂𑌕𑍍𑌷𑍇𑌪𑌤𑌃 𑌕𑍍𑌰𑌮𑌾𑌤𑍍 ।
𑌚𑌤𑍁𑌰𑌶𑍍𑌰𑌾𑌯𑌤𑌾𑌶𑍍𑌰𑌂 𑌵𑍃𑌤𑍍𑌤𑌂 𑌚 𑌵𑍃𑌤𑍍𑌤𑌾𑌯𑌤𑌮𑍍 ॥ ௧ ॥

𑌅𑌷𑍍𑌟𑌾𑌶𑍍𑌰𑌂 𑌚 𑌷𑌡𑌶𑍍𑌰𑌂 𑌚 𑌦𑍍𑌵𑍍𑌯𑌶𑍍𑌰𑌵𑍃𑌤𑍍𑌤𑌂 𑌤𑌥𑍈𑌵 𑌚 ।
𑌹𑍀𑌨𑌾𑌧𑌿𑌕 𑌵𑌿𑌨𑍍𑌯𑌾𑌸𑌹𑍇𑌤𑍁𑌂 𑌸𑌪𑍍𑌤𑌕𑌂 𑌕𑍍𑌷𑌯𑌵𑍃𑌦𑍍𑌧𑌿𑌵𑌿𑌧𑌾𑌨𑌤𑌃 ॥ ௨ ॥

𑌭𑍂𑌮𑌿𑌲𑌮𑍍𑌬𑌮𑌿𑌤𑌿 𑌪𑍍𑌰𑍋𑌕𑍍𑌤𑌂 𑌤𑍍𑌰𑌿𑌚𑌤𑍁𑌰𑍍𑌹𑌸𑍍𑌤𑌾𑌰𑌮𑍍𑌭𑌤𑌃 ।
𑌦𑍍𑌵𑌿𑌦𑍍𑌵𑌿𑌹𑌸𑍍𑌤𑌵𑌿𑌵𑍃𑌦𑍍𑌧𑍍𑌯𑍈𑌵𑌂 (𑌚) 𑌭𑍂𑌮𑍇𑌮𑌾𑌨𑌂 𑌚𑌤𑍁𑌷𑍍𑌟𑌯𑌮𑍍 ॥

𑌪𑌞𑍍𑌚𑌷𑌡𑍍𑌢𑌸𑍍𑌤𑌾𑌰𑌮𑍍𑌭𑍍𑌯 𑌦𑍍𑌵𑌿𑌦𑍍𑌵𑌿𑌹𑌸𑍍𑌤𑌵𑌿𑌵𑌰𑍍𑌧𑌨𑌾𑌤𑍍 ।
𑌵𑌿𑌤𑌸𑍍𑌤𑍇 𑌤𑍁 𑌚𑌤𑍁𑌰𑍍𑌮𑌾𑌨𑌂 𑌦𑍍𑌵𑌿𑌭𑍂𑌮𑌾𑌨𑌾𑌂 𑌚𑌤𑍁𑌷𑍍𑌕𑌮𑍍 ॥ ௪ ॥

பதினோராவது அத்தியாயம்

பூமிலம்பவிதியைச் சுருக்கமாக முறையுடன் கூறுகிறேன்.

பூமிலம்ப விந்யாஸமானது, சச்சதுரம் 1, நீண்ட சதுரம் 2, வட்டம் 3, நீண்ட வட்டம் 4, அஷ்டாச்ரம் 5, ஷடச்ரம் 6, துவியச்ரவிருத்தம் 7, என்று பூமியைக் குறைப்பதாலும், கூட்டுவதாலும், பூமிலம்பமானமானது ஏழுவிதமாகக் கூறப்பட்டிருக்கிறது. 2½

மூன்று (3) முழம் முதலும், நான்கு (முழம்) முதலும், இரண்டுமுழம் விதமாகக் கூட்டிவர, ஏகபூமியின் மானமானது, நான்கு (4) விதமாகும். 3

ஐந்து (5) ஹஸ்தம் முதலும், ஆறு (6) ஹஸ்தம் முதலும் முறையே பதினோரு முழம் வரையிலும், பன்னிரண்டு ஹஸ்தம் வரையிலும், இரண்டு ஹஸ்தம் வீதமாகக் கூட்டிவர, துவிதல பூமியின் மானம் நான்குவிதமாகும். 4

ஸப்தாஷ்டஹஸ்தமாரப்ய த்வித்விஹஸ்தவிவர்த்தநாத் ।
பஞ்சதசவிகாரா(ஷோடசா)ந்தம் த்ரிதலே பஞ்சதா ஸ்ம்ருதம் ॥

நவபங்க்திகராரப்ய யாவத் பஞ்சஷோடசஹஸ்தகம் ।
அர்த்யுஷ்ணதயம் வேதாங்கம் அர்த்தோத்தரம் ஸதாதகம் ॥௫॥

ஏகஹஸ்தம் த்விஹஸ்தம் வா க்ஷுத்ரைகதலம் ஸ்ம்ருதம் ।
யுக்மாயுக்மகரோபேதை: ஹஸ்தாத்யேஷு ஸமன்விதை: ॥

கேசித் வதந்தி தேவாநாம் மாநுஷாணாம் விமாநகே ।
ஹஸ்தாதே ஸப்தஷட்பஞ்சவேதாக்ந்யந்தாதிகம் த்ரிபி: ॥

ஏழு (7) அல்லது எட்டு (8) ஹஸ்தம் முதல், (15) பதினைந்து விகாரம் (பதினைந்து அல்லது (16) பதினறு) ஹஸ்தம் வரையில், இரண்டு ஹஸ்தம் வீதமாகக் கூட்டிவர த்ரிதலமானது ஐந்து (5) விதமாகும். 5

ஒன்பது (9) அல்லது பத்து (10) ஹஸ்தம் முதல் பதினைந்து (15) அல்லது பதினறு (16) ஹஸ்தம் வரையில் (இரண்டு ஹஸ்தம் வீதமாகக் கூட்டிவர) சதுஸ்தலமும், பஞ்ச தலமும் நான்குவிதமாகும். 6

க்ஷுத்ர ஏகதலமானது, ஒரு ஹஸ்தம் அல்லது இரண்டு ஹஸ்தம் இருக்கவேண்டுமென்று கூறப்பட்டிருக்கிறது. 6½

சிலர் தேவதைகளுக்கு இரட்டைப் படையாகவும் ஒத்தைப் படையாகவும் கூறப்பட்ட அளவுகளில், அரை முழம் கூட்டியும், அரை முழம் குறைத்துமிருப்பதாகும் என்று கூறுகிறார்கள். 7½

மானுஷ விமானங்களில், ஏழு (7) ஹஸ்தம் ஆறு (6) ஹஸ்தம், ஐந்து (5) ஹஸ்தம் நான்கு (4) ஹஸ்தம், மூன்று (3) ஹஸ்தமுள்ள அளவுகளில், மூன்று (3) ஹஸ்தம் அதிகமாக இருப்பதாகும் என்று கூறுகிறார்கள், 8

ஶாந்திகம் பௌஷ்டிகம் ஜயதஞ்சாத்புதம் ஸார்வகாமிகம் ।
உச்ச்ராயம் த்விகுணம் பாதாத்யர்த்தாதிகம் சாபி ஸம்மதம் ॥

பஞ்சதஶகரவ்யாஸாத் ஹீனம் க்ஷுத்ரவிமானகம் ।
ஸப்தாஷ்டாதிகபங்க்த்யாதி ஸப்ததிஹஸ்த விவர்த்தனாத் ॥௰॥

க்ஷுத்ரஸ்தேஶ்வதேஹம் ... த்ரீணி சதாநி ச ।
ஸப்தவிம்ஶதிமானானி த்வாதஶாந்தானி க்ரமாத் ॥௧௧॥

த்ரயோவிம்ஶச்சதுர்விம்ஶத்ஹஸ்தாத் ஶதகராந்தகம் ।
த்ரித்ரிஹஸ்தவிவ்ருத்த்யா து த்ரிஸப்தோத்ஸேதமிஷ்யதே ॥

ஸர்வஜாதிக்ஷுத்ரகேஷு ஶ்ரேஷ்டோத்யேயாயாமம் ஹயேத் ।

அவைகளுக்கு, முறையே, சாந்திகம் 1, பௌஷ்டிகம் 2, ஜயிதம் 3, அத்புதம் 4, ஸார்வகாமிகம் 5, என்று பெயர். 8½

அதன் (நீளமானது) உயரத்தைப்போல் இரண்டுபங்கு கால்பங்கு, அல்லது அரைப்பங்கு அதிகமாக இருப்பதும் அங்கீகரிக்கப்பட்டதாகும். 9.

பதினைந்து முழம் விஸ்தாரத்திலிருந்து குறைந்த விஸ்தாரமுடைய விமானமானது, க்ஷுத்ரவிமானமாகும்.

பதினேழு (17) அல்லது பதினெட்டு (18) முழம் முதல் எழுபது (70) முழம் வரையில் இரண்டு முழம் விதமாகக் கூட்டிவர, மானமானது இருபத்தேழுவிதமாகும். அவைகள் முறையே பன்னிரண்டு (12) முழம் வரையில் கூறப்பட்டவைகளாம். 11

இருபத்திமூன்று (23) இருபத்திநான்கு (24) முழம் முதல், நூறு முழம் வரையில், மூன்று (3) முழம் விதம் விருத்தி செய்துவர, உத்ஸேத மானமானது (அகலத்தின் அளவானது) இருபத்தேழு (27) விதமாகும். (12)

த்ர்யுத்தமோத்க்ருஷ்டஹஸ்தாதி த்வித்விஹஸ்தவிவர்த்தநாத் || ௧௩ ||

ஸப்தஷஷ்டிஹஸ்தாந்தம் ஸம்வ்ருத்யா ஸப்தவிம்ஶ
(௨௭)தி: |

அத்யுத்க்ருஷ்டவிமாநாதி மாநாநாம் விதீயதே || ௧௪ ||

ஸப்தாஷ்டபக்திகோஹஸ்த த்ரித்ரிஹஸ்தவிவர்த்தநாத் |
ஷண்ணவத்யந்தகம் உச்சம் ப்ராகிவ ஸம்வ்ருத்யா || ௧௫ ||

ஶ்ரேஷ்டமத்யகநிஷ்டம் ஸ்யாத் மாநம் மத்யமகேஷு ச |
நவபக்திகராந் வா ஷட்பஞ்சாஶத்கராந்தகம் || ௧௬ ||

த்வித்விஹஸ்தவிவ்ருத்யா து அத்யுத்கம் ஸம்வ்ருத்யா |

இவ்விதமாக உத்கிருஷ்டமானங்களில், உத்தம-மத்திம-அதம மானங்களாகும்.

பதிமூன்று (13) பதிநான்கு (14) முழம் முதல், அறுபத்தைந்து (65) அறுபத்தாறு (66) முழம் வரையில் இரண்டு (2) முழம் வீதமாகக் கூட்டிவர, விமானத்தின் அகலமானது முன்பு கூறியது போல இருபத்தேழு (27) விதமாகும். சதுஸ்தல விமானங்கள் பன்னிரண்டு முழம் வரையில் கூறப்பட்டிருக்கின்றன. 14

பதினேழு (17) பதினெட்டு (18) முழம் முதல் தொண்ணூற்றைந்து (95) தொண்ணூற்றாறு (96) முழம் வரையில், மூன்று (3) முழம் வீதமாகக் கூட்டிவர, அதன் உயரமானது, முன்பு கூறப்பட்டதுபோல், இருபத்தேழு விதமாகும். 15

இவ்விதமாக மத்தியம விமானங்களின், உத்தம-மத்திம அதம மானங்களாகும்.

ஒன்பது (9) அல்லது பத்து (10) முழம் முதல் ஐம்பத்தைந்து (55) அல்லது ஐம்பத்தாறு (56) முழம் வரையில்,

ஷண்ணாம் த்வாதஶாந்தாநாம் ஹர்ம்யாணாம் விஸ்தரம் க்ரமாத் ||

ஸப்தாஷ்டநவபௌமாநாம் யாநி மாநாநி கீர்திதா: |
க்ராஹ்யாத் த்வாதஶபூம்யந்தம் விஶாலம் மாநவித்புத: ||கஅ||

த்விஷட்த்ரயோதஶக்ஷ்மாணாம் ஷோடஶக்ஷ்மம் யதாக்ரமம் |
ஷட்ஷட்ஷட்ஸப்தபஞ்சாஶத் ஹஸ்தவ்யாஸௌ
ஶிவோதிதம் || ககூ ||

விஸ்தாரம் ஸ்தம்பதோ பாஹ்யே ஜந்மாத் ஸ்தூப்யவஸாநகம் |
கேசிதாஸிவாராந்தம் து வ்ருத்யதிஷ்டகாநகம் || உ0 ||

இரண்டு முழம் விதமாகக் கூட்டிவர ஹர்மிய விஸ்தாரமானது, இருபத்திநான்கு (24) விதமாகும். இந்த விஸ்தாரமானது, முறையே பஞ்சஹர்மியம் முதல், துவாதச ஹர்மியம் வரையில், (5 அடுக்கு மாடிமுதல் 12 அடுக்கு மாடி வரையில்) ஹர்மியங்களின் விஸ்தாரமாகும். 17

அளவில் சமர்த்தனுக இருப்பவன், ஏழு (7) எட்டு (8) ஒன்பது (9) பூமிகளுக்குக் கூறப்பட்ட பிரமாணத்திலிருந்து, துவாதச பூமியந்தம் பிரமாணங்களைக் கல்பித்துக்கொள்ள வேண்டும். 18

பன்னிரண்டு (12) பதிமூன்று (13) பூமிமுதல் பதினுறு (16) பூமி வரையில், முறையே, ஐம்பத்தாறு (56) ஐம்பத்தாறு (56) ஐம்பத்தாறு (56) ஐம்பத்தேழு (57) ஐம்பது (50) ஹஸ்தம் விஸ்தாரமிருக்கவேண்டும் என்று பரசிவனுல் கூறப்பட்டிருக்கிறது 19

ஸ்தம்பத்திற்கு வெளிப்பக்கத்திலிருந்து விஸ்தாரத்தை கணக்கிடவேண்டும். ஜன்ம ஸ்தானத்திலிருந்து (அஸ்திவாரத்திலிருந்து) ஸ்தூபி வரையில் உயரத்தைக்

ஸப்தாம்ஶே த்ர்யம்ஶகோ நிர்தேஶ: ஸமீரித: ।
தத்தத்பூமேஸ்து விஸ்தாரே நிர்தேஶோச்சம் த்ர்யம்ஶகை: ॥

விஸ்தாராத் த்விகுணாம்ஶேந யுக்த்யாயாமம்
ப்ரயோஜயேத் ।
தேவாநாம் ஸார்வபௌமாநாம் த்வாதஶதலம் விது: ॥ ௨௨ ॥

ரக்ஷோகந்தர்வயக்ஷாணாம் ஏகாதஶதலம் மதம் ।
விப்ராணாம் நவ பௌமம் ஸ்யாத் தஶபௌமமதாபி வா ॥ ௨௩ ॥

யுவராஜஸ்ய ராஜ்ஞஸ்ச பஞ்சமஸ்யைவ ஸம்மத: ।
ததா ஸப்ததலம் ஷண்ணாம் ஏவ ப்ரவக்ஷ்யதே ॥ ௨௪ ॥

கணிக்கவேண்டும். சிலர் சிகரம் வரையில் உயரத்தைக் கணக்கிடவேண்டுமென்று கூறுகிரார்கள். 20

மஹாபூமிகளின் (பெரிய மாடிகளின்) நீளமும் உயரமும் கூறப்பட்டது.

அந்தந்த பூமிகளின் விஸ்தாரத்தில், ஏழில் ஒரு பங்கில் மூன்று அம்சமானது, நிர்தேசோச்சமாகும். (குறிப்பிட்ட உயரமாகும்.)

அல்ப பௌமங்களில், விஸ்தாரத்தைப்போல் இரண்டு பங்கு நீளத்தை யுக்தியுடன் கல்பிக்க வேண்டும்.

தேவர்களுக்கும், ஸார்வபௌமனுக்கும், பன்னிரண்டு தலம் வரையில் கூறியிருக்கிரார்கள். 22

ராக்ஷஸர்கள், கந்தர்வர்கள், யக்ஷர்கள், இவர்களுக்கு பதினொரு (11) தலம் வரையில் இருப்பதாகும்.

பிராம்ஹணர்களுக்கு, நவதலம், அல்லது தசதலம் கூறப்பட்டிருக்கிறது. 23

யுவராஜா, ராஜா, ராஜபஞ்சமன், இவர்களுக்கு, ஸப்த பௌமம் கூறப்பட்டிருக்கிறது.

த்ரிபௌமம் ச த்விபௌமம் வணிஜாம் ஶூத்ரஜன்மனாம் |
ராஜ்ஞாம் பஞ்சதலம் ப்ரோக்தம் பட்டதாராம் ததா ||

ஶதஹஸ்தாதூர்த்வமாயாம: ஸப்ததிர்ஹஸ்தவிஸ்தர: |
நேஷ்யதே பௌமதலம் து மானவித்பிர்விசக்ஷணை: ||உச||

க்ஷுத்ராத்யுத்தமாந்தாநாம் விமாநாநாம்
வ்யாஸோச்ராயமிஶ்ரஹஸ்தகயோர்விமானயோர்மனேஷு |
யுக்த்யா யதோசிதம் ஶாஸ்த்ரைர்பூர்வஶாஸ்த்ராணாம்
ந்யூனாம் ததைவ கதிதம் ஹி மயா வாஸ்தாணெ: ||உஅ||

இதி மயமதெ வஸ்துஶாஸ்த்ரெ பூமிலம்பவிதாநம் நாம
ஏகாதஶோத்யாய: ||

ஸப்த தலம் முதல், ஏகாதச தலம் வரையில் சக்கிர வர்திக்கும், அவனுக்கடுத்த ஆறுபேர்களுக்கும் கூறப் பட்டிருக்கிறது. 24

சூத்திர ஜாதியில் பிறந்த வியாபாரிகளுக்கு அல்லது, வியாபாரிகளுக்கும் சூத்திரர்களுக்கும் திரிபௌமம் கூறப் பட்டிருக்கிறது.

ராஜாக்களுக்கு பஞ்சதலம் கூறப்பட்டிருக்கிறது. இது பட்டதாரிகளுக்குமாகும். 25

மான நிபுணர்கள் பௌமதலமானது. நூறு முழத்திற்கு மேல் நீளமாகவும், எழுபது முழத்திற்குமேல் அகலமாகவும் இருக்கக்கூடாது என்று கூறுகிருர்கள். 26

பிரஹ்மா முதலிய தேவேசுவரர்களுக்கும், மனிதர்களுக்கும், கலப்பாக முழக்கணக்குடன் கூடிய க்ஷுத்திர விமானங்கள், அல்பவிமானங்கள், மத்திம விமானங்கள்; உத்தம விமானங்கள் இவைகளின் விஸ்தார பேதங்களும், உச்ச பேதங்களும், யுக்தியுடன் உசிதமாக பிராசீனமான நூல்களில் கூறி இருப்பதையனுஸரித்து என்னால் கூறப் பட்டிருக்கின்றன. 28

பதினோராவது அத்தியாயம் முற்றும்.

अथ द्वादशोऽध्यायः ॥

தே³வதாநாம் த்³விஜாதீநாம் வர்ணாநாம் ஸத்³மஸு க்ரமாத் |
க³ர்ப⁴ந்யாஸவிதி⁴ம் ஸம்யக் ஸம்க்ஷேபாத்³விஸ்தராத்³ ப்³ருவே ||

ஸர்வரத்நௌஷதீ⁴ஸம்பூர்ணம் க³ர்ப⁴ம் தத்ஸம்பதா³ம் ப்ரத³ம் |
த்³ரவ்யஹீநஸம்பூர்ணம் க³ர்ப⁴ம் ஸர்வவிபத்கரம் ||௨||

தஸ்மாத் ஸர்வப்ரயத்நேந க³ர்ப⁴ம் ஸம்யக்³ விநிக்ஷிபேத் |
க³ர்ப⁴ஶ்வப்⁴ரஸ்ய கா³ம்பீ⁴ர்யம் ஸ்வாதி⁴ஷ்டா²நோந்நதே: ஸமம் ||௩||

[illegible] |
[illegible] ||

பன்னிரண்டாவது அத்தியாயம்

இப்பொழுது தேவதைகளுடையவும், பிராம்ஹணாதி வர்ணத்தாருடையவும், மாடிகளிலும் வீடுகளிலும், கர்ப நியாஸம் செய்யவேண்டிய விதியை நன்றாகவும், சுருக்கமாகவும் கூறுகிறேன். 1

சகலவிதமான திரவியங்களுடனும் கூடிய கர்பமானது, சகலவிதமான சம்பத்துக்களையும் அளிக்கும். கர்பமானது திரவியஹீனமாக இருந்தால், அது பலவிதமான ஆபத்துக்களையும் உண்டுபண்ணும். 2

ஆகையால், சகலவிதமான முயற்சிகளும் செய்து, கர்பத்தை நன்கு வைக்கவேண்டும். கர்பம் வைப்பதற்கான குழியின் ஆழமானது எந்த கிருஹாதிகளில் வைக்கப் படவேண்டுமோ அதன் ஸ்வாதிஷ்டானத்தின் உயரத்திற்கு ஸமானமாக இருக்கவேண்டும். 3

கர்ப பாஜனத்தை வைப்பதற்காக, பூமியில் பள்ளம் செய்து, அதை கருங்கல்லுகள் அல்லது செங்கற்களால்,

நிம்நகா³ஹ்ரத³கேதா³ராத்*வல்லிகே குலீராவடே |
ஸமுத்³ரே ஶ்ருங்கே³ பஶோ: ஹஸ்திதந்தேஷு ம்ருத்திகா: ||௫||

தது³ர்த்⁴வம் தஸ்ய மத்⁴யே து பத்³மகந்த³ம் ந்யஸேத் புந: |
பூர்வே நீலோத்பலகந்த³ம் ச த³க்ஷிணே குமுத³ம்
க்ஷிபேத் || ௬ ||

ஸௌக³ந்தி⁴கம் பஶ்சிமே வித்³யாத் காகலோஹ(ஷ்ட)முத்தரேऽபி |
தா⁴ந்யாந்யஷ்டௌ தந்மத்⁴யே து ஶாலிவ்ரீஹிப்ரியங்கவ:||

கங்குமுத்³க³ம் ச மாஷம் ச குலுத்த²ம் ச திலம் ததா² |
ப்ராத³க்ஷிண்யேந ஶால்யாதீ³நீஶாநாதி³ஷு விந்யஸேத் ||

சச்சதுரமாகக் கட்டவேண்டும். அந்தப் பள்ளத்தில் ஜலத்தை நிரப்பி, அதனடியில், சகலவிதமான மிருத்திகை (மண்) களையும் போடவேண்டும். 4

நதீ 1, மடு (ஏரி முதலிய பெரிய ஜலாசயம்) 2, பயிர் விளையும் வயல் 3, மலை 4, *பல்லிகை 5, நண்டுவளை 6, கலப்பையின் கொழு 7, ஸமுத்திரம் 8, பசுவின் கொம்பு 9, யானையின் தந்தம் 10, இந்த இடங்களிலிருந்து எடுக்கப்படும் மிருத்திகைகளை, பள்ளத்தின் அடியில் போடவேண்டும்.

அதற்குமேலே, அந்தக் குழியின் மத்தியில், தாமரைக் கிழங்கை வைக்கவேண்டும். அதற்கு கிழக்கு திக்கில், நீலோத்பல கிழங்கை வைக்கவேண்டும். தெற்கு திக்கில், அல்லிக்கிழங்கை வைக்கவேண்டும். மேற்கு திக்கில், செங்கழுநீர் கிழங்கை வைக்கவேண்டும். வடக்கு திக்கில் காகலோகத்தை (காகலோட்டியத்தை) வைக்கவேண்டும்.

அதற்குமேலே, சம்பா நெல் 1, சென்னெல் 2, வரகு தானியம் 3, கங்குதானியம் 4, பயறு 5, உளுந்து 6,

---

*வல்மீக இதி பாடா²ந்தரம் |
*புத்து என்பது பாடபேதம்.

[illegible] |
[illegible] || ௯ ||

[illegible] |
[illegible] || ௰ ||

[illegible] |
[illegible] || ௧௧ ||

கொள்ளு 7, எள்ளு 8, இந்த எட்டுவிதமான தானியங்களையும், ஈசானிய திக்கு முதல் பிரதக்ஷிணமாக எட்டு திக்குகளிலும் வைக்கவேண்டும். 8

அதற்குமேலே, தாமிரத்தினலே செய்யப்பட்ட பெட்டியை வைக்கவேண்டும். அந்தப் பெட்டியின் அகல மானது, மூன்று (3) அல்லது நான்கு (4) அங்குலம் அகலம் முதல், இருபத்தைந்து (25) அல்லது இருபத்தாறு (26) அங்குலம் வரையில், இரண்டு அங்குலம் வீதமாக விருத்தி செய்துவர, பன்னிரண்டு (12) விதமாகும்.

அதன் உயரமானது, அதன் அகலத்திற்கு சமமாகவோ, அல்லது எட்டில் ஒரு பங்கு, ஆறில் ஒரு பங்கு, அல்லது ஐந்தில் ஒரு பங்கு குறைவாகவாவது இருக்கவேண்டும். 10

இந்த அளவானது, முறையே, ஏக ஹர்மியம் முதல் துவாதச ஹர்மியம் (12-மாடி) வரையிலுள்ள வாஸ்துக்களுக்குக் கூறப்பட்டதாகும்.

அதன் பாதாலம்பிவிதானமானது, அதற்காக எடுக்கப்பட்ட உயரத்தில், மூன்றில் ஒரு பங்கு இருக்கவேண்டும். (பாதாலம்பிவிதானம் - அதன் அடிப்பக்கத்தின் மட்டமான இடம்.) 11

தத்ஸ்தலோச்ச்ராயம் ஹர்ம்யாங்க்ரிவிஷ்கம்பஸமம் வாஷ்டாம்ஶஹீநகம் |
த்ரிபாதம் வா விஸ்தாரம் தஸ்ய பேலாயா: ப்ராகிவோச்ச்ரயம்† ॥

த்ரிவர்க்கமண்டபாகாரம் வ்ருத்தம் வா சதுரச்ரகம் |
பஞ்சவிம்ஶதி கோஷ்டம் வா நவ கோஷ்டகமேவ வா ॥௧௩॥

பேலோச்ச்ராயார்த்தத்ரிபாகம் கோஷ்டபித்த்யுச்ச்ரயம் பவேத் |
தத்பித்திகநதாம் குர்யாத் யவை: த்ரி சதுஷ்டயை: ॥

அந்த இடமானது, அந்தந்த ஹர்மியங்களின் பாத விஷ்கம்பத்திற்கு (விஷ்கம்பம்-உயரம்) சமமாகவோ, அதில் எட்டில் ஒரு பங்கு குறைவாகவோ இருக்கவேண்டும். அந்த பேலையின் (பேலா-பேழை) அகலமானது, முக்கால் பங்கு இருக்கவேண்டும். உயரமானது முன்பு கூறப்பட்டிருப்பதைப்போல இருக்கவேண்டும்.* 12

அது திரிவர்க மண்டபத்தைப்போன்ற உருவமுடையதாகவாவது, வட்டமாகவாவது, சதுரச்ரமாகவாவது இருக்கவேண்டும். இருபத்தைந்து (25) கோஷ்டங்களுடையதாகவாவது, நவ கோஷ்டங்களுடையதாகவாவது இருக்கவேண்டும். 13

கோஷ்ட பித்தியின் (கோஷ்டம்-இடம்) உயரமானது, பேலையின் உயரத்தில் அரைப்பங்கு, அல்லது மூன்றில் ஒரு பங்கு இருக்கவேண்டும்.

அதன் பித்தியின் கனமானது இரண்டு யவை, மூன்று யவை, அல்லது, நான்கு யவை இருக்கவேண்டும். 14

---

†ஸமுத்ஸேதாத்த்ரிபாகைகம் பாதாலம்பிவிதாநகம் | இதி ௧௨ ஶ்லோகாதநு அதிக: பாட: இதி பாடாந்தரம் |

*பாதாலம்பிவிதானமானது, எடுக்கப்பட்ட உயரத்தில் மூன்றில் ஒரு பங்கு இருக்கவேண்டும். என்பது 12-வது சுலோகத்திற்குப் பிறகு அதிக பாடம் என்பது பாடாந்தரம்.

உபபீடபதே தேவா: பஞ்சவிம்ஶதி ஸம்ஸ்திதா: ।
ஶ்வப்ரஸ்யோர்த்வம் ததா பூமிம் கந்தபுஷ்பைஶ்ச தீபதூபகை: ॥ ௧௫ ॥

வாஸயித்வா து பூர்வேத்யு: பஞ்சகவ்யேந பாஜனம்
ப்ரக்ஷால்ய ஸூத்ரைராவேஷ்ட்ய ஶாலிதாந்யாஸ்த்ருதே ஶுபே ॥

ஸ்தண்டிலே ஸ்தண்டிலம் சாபி மண்டூகம் வாபி கல்பயேத் ।
விந்யஸ்ய தேவாந் ப்ரஹ்மாதீந் ஶுத்ததண்டுலதாரயா ॥

ஆராத்ய கந்தபுஷ்பாத்யை: புவநாதிபதிம் ஜபேத் ।
ஸ்தபதி: கும்பாந் ந்யஸ்ய வஸ்த்ரைர் விபூஷிதாந் ॥

ஸுகந்தோதகஸம்பூர்ணாந் கந்தபுஷ்பஸமர்ச்சிதாந் ।

அதன் உப பீடபதத்தில், இருபத்தைந்து தேவதைகள் இருக்கின்றார்கள்.

அந்தப் பள்ளத்திற்கு மேலேயுள்ள பூதலம் முழுமையும் சந்தனம்–புஷ்பம்–தீபம் (தூபம்) இவைகளினால், வாசனையுள்ளதாகச் செய்து, 15

முதல்நாள் கர்பபாஜனத்தை பஞ்ச கவ்யத்தினாலே பிரக்ஷாளனம் செய்து, அதன்மேலே நூல்களை சுத்தி, பூமியில் சம்பா நெல்லை நன்றாகப் பரப்பி, மேடையாகச் செய்து, அதில் சண்டித பதம், அல்லது மண்டூக பதத்தைக் கல்பித்து, அதில் சுத்தாக்ஷதையின் தாரையினாலே, பிரம்ஹாதி தேவதைகளை நியாஸம் செய்து (ஆவாஹனம் செய்து) சந்தனம் புஷ்பம் முதலியவைகளினாலே ஆராதித்து, புவநாதிபதியை ஜபம் செய்யவேண்டும். 17½

பிறகு, ஸ்தபதி, வஸ்திரம் சாத்தி அலங்கரிக்கப்பட்டவைகளும், நறுமணமுள்ள ஜலத்தினாலே நிறைந்தவைகளும்

[illegible] ||

[illegible] ।
[illegible] ||௨௰||

[illegible] ।
[illegible] || ௨௧ ||

[illegible] ।
[illegible] || ௨௨ ||

[illegible] ।

களங்கம் (அழுக்கு அல்லது தோஷம்) அற்றவைகளும், பொத்தலில்லாதவைகளும், நூல் சுற்றப்பட்டவைகளுமான ஐந்து (5) பாத்திரங்களை வைத்து, அதன் தென் பக்கத்தில் கந்தத்துடன் கூடிய சம்பா நெல்லினால் கல்பிக்கப்பட்ட ஸ்தண்டிலத்தில் (திட்டாணியில்) வைத்து, அவைகளை, சந்தணம் புஷ்பங்களினாலே ஆராதித்து (பூஜை செய்து) முறைப்படி பலி கொடுக்கவேண்டும். 20

ஸ்தபதி சுத்தனாக இருந்துகொண்டு, கர்பந்யாஸம் செய்வதற்கான பாத்திரத்தை வெளுப்பு வஸ்திரத்தினாலே சுத்தி, தானியஸ்தண்டிலத்திற்குமேலே, வெளுப்பு வஸ்திரத்தை விரித்துப்போட்டு, தர்பைகளைப் பரப்பி, அதன் மேலே, அந்த கர்பபாஜனத்தை வைக்கவேண்டும்.

பிறகு, இரவில், சுத்தமான பாலைக் குடித்துவிட்டு, உபவாஸமாக இருக்கவேண்டும். பிறகு, சில்ப சாஸ்திர மறிந்த மேதாவியான ஸ்தபதியானவன், ஸூத்திர கிராஹி முதலியவர்களால் சூழப்பட்டவனாக இருந்துகொண்டு,

ஸௌவர்ணராஜதஸ்யாந்யேஷு ஸாலிவ்ரீஹிகுலுத்தகாந் ||௨௨||

த்ரபுணா கம்பு [illegible] ஈஶாநே [illegible] ।
[illegible] வம் ச [illegible] மாஷம் [illegible] ||

[illegible] ।
ஜயந்தே ஜாதி ஹிங்குல்யம் ஹரிதாலம் [illegible] ||௨௫||

[illegible] ।
[illegible] ||

தானியம் முதலிய வஸ்துக்களை கர்ப பாஜனத்திற்குள் வைக்கவேண்டும். 22½

தங்கத்தினுலே செய்யப்பட்ட சாலிதானியம் 1, (சம்பா நெல்) வெள்ளியால் செய்யப்பட்ட விரீஹிதானியம் 2, (அறுபது நாளில் விளையும் நெல், அல்லது சென்னெல்) சுல்பத்தினுலே செய்யப்பட்ட கொள்ளு 3, (சுல்பம் சுத்தம் செய்த செம்பு) த்ரபுவினுல் (பித்தளை) செய்யப்பட்ட கம்பு தானியம் 4, ஈயத்தினுலே செய்யப்பட்ட உளுந்து 5, இரும்பினுலே செய்யப்பட்ட பயறு 6, இரும்பினுலே செய்யப்பட்ட வரகு தானியம், (7) வைக்ராந்த மென்னும் லோஹத்தினுலே [illegible] (பிரபாசத்துடன்) செய்யப்பட்ட என்ளு 8, ஆகிய எட்டு (8) தானியங்களையும், ஈசானிய திக்கு முதல் பிரதக்ஷிண [illegible] விதியுடன் வைக்கவேண்டும்.

ஜயந்த ஸ்தானத்தில் ஜாதி ஹிங்குலியத்தையும் அரி தாரத்தை பிருசஸ்தானத்தி[illegible] [illegible] பதத் திலும், மாக்ஷிகத்தை ([illegible]ர்ண மாக்ஷிகம) பிருங்கராஜ பதத்திலும், [illegible]ர்தத்தை சுக்ரீவபதத்திலும், [illegible] கைரி கத்தை (மலையிலுள்ள தாதுப்பொருள்) சோஷ பதத்திலும்,

𑌅𑌞𑍍𑌜𑌨𑌂 𑌮𑍁𑌖𑍍𑌯𑌸𑍍𑌥𑌾𑌨𑍇 𑌸𑍍𑌯𑌾𑌤𑍍 𑌅𑌦𑌿𑌤𑍌 𑌤𑌾𑌰𑌕𑌂 𑌵𑌿𑌦𑍁𑌃 ।
𑌮𑌧𑍍𑌯𑍇 𑌪𑌦𑍍𑌮𑌰𑌾𑌗𑌂 𑌤𑍁 *𑌮𑌰𑍀𑌚𑍌 𑌵𑌿𑌦𑍍𑌰𑍁𑌮𑌂 𑌤𑌥𑌾 ॥௨௭॥

𑌸𑌾𑌵𑌿𑌤𑍍𑌰𑍇 𑌪𑍁𑌷𑍍𑌪𑌰𑌾𑌗𑌂 𑌤𑍁 𑌵𑍈𑌡𑍂𑌰𑍍𑌯𑌂
𑌸𑍍𑌯𑌾𑌦𑍍𑌵𑌿𑌵𑌸𑍍𑌵𑌤𑌿 ।
𑌵𑌜𑍍𑌰𑌮𑌿𑌨𑍍𑌦𑍍𑌰𑌜𑌯𑍇 𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌤𑍍 𑌇𑌨𑍍𑌦𑍍𑌰𑌨𑍀𑌲𑌂 𑌤𑍁 𑌮𑌿𑌤𑍍𑌰𑌕𑍇 ॥

𑌰𑍁𑌦𑍍𑌰𑌰𑌾𑌜𑍇 𑌮𑌹𑌾𑌨𑍀𑌲𑌂 𑌮𑌰𑌕𑌤𑌂 𑌤𑍁 𑌮𑌹𑍀𑌧𑌰𑍇 ।
𑌮𑍁𑌕𑍍𑌤𑌾𑌮𑌾𑌪𑌵𑌤𑍍𑌸𑍇 𑌪𑍍𑌰𑌾𑌚𑍍𑌯𑌾𑌦𑌿𑌪𑍍𑌰𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑍇 𑌕𑍍𑌰𑌮𑌶𑍋 𑌨𑍍𑌯𑌸𑍇𑌤𑍍 ॥

𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌕𑍍𑌰𑌾𑌨𑍍𑌤𑌾 𑌤𑍍𑌰𑌿𑌶𑍂𑌲𑍀 𑌶𑍍𑌰𑍀𑌃 𑌸𑌹𑌾𑌦𑍇𑌵𑍀 𑌚
[illegible] ।
𑌅𑌪𑌾𑌮𑌾𑌰𑍍𑌗𑍈𑌕𑌪𑌤𑍍𑌰𑌾𑌬𑍍𑌜 [illegible] 𑌨𑍍𑌯𑌸𑍇𑌤𑍍 ॥௩௦॥

அஞ்சனத்தை (அஞ்சக்கல்) கணமுக்ய ஸ்தானத்திலும், தர தத்தை (பாதரஸத்தை)அதிதி ஸ்தானத்திலும், மத்தியில் பத்ம ராகத்தையும் 1, *மரீசிபதத்தில் பவழத்தையும் 2, சாவிந்திரபதத்தில் புஷ்பராகத்தையும் 3, விவஸ்வத் பதத்தில் வைடூரியத்தையும் 4, இந்திரஜயபதத்தில் வைரத்தையும் (5) மித்திரபதத்தில் இந்திர நீலத்தையும் 6, ருத்ரராஜ பதத்தில் மஹா நீலத்தையும் 7, மஹீதரபதத்தில் மரகதத்தையும் 8, அபவத்ஸபதத்தில் முத்தையும் 9, கிழக்கு திக்கிலிருந்து முறையே பிரதக்ஷிணமாக வைக்கவேண்டும்.

விஷ்ணுகிராந்தி, திரிசூலம், ஸ்ரீதேவீ, ஸஹதேவீ, தூர்வை, கருச்சாரங்கண்ணி, நாயுருவி, ஓரிதழ் தாமரை, இந்த எட்டு ஓஷதிகளையும் ஈசானதிக்கு முதல் முறையே வைக்கவேண்டும். 30

---

*𑌆𑌰𑍍𑌯𑌕𑍇 𑌸𑍍𑌥𑌾𑌨 𑌇𑌤𑌿 𑌮𑌰𑍀𑌚𑌿𑌸𑍍𑌥𑌾𑌨 𑌇𑌤𑌿 𑌪𑌾𑌠𑍋 𑌭𑌵𑌤𑌿 । 𑌪𑌦𑌾𑌨𑌾𑌂 𑌕𑍍𑌰𑌮𑍋 𑌨 𑌦𑍃𑌶𑍍𑌯𑌤𑍇 । 𑌤𑌤𑍍 𑌪𑍍𑌰𑌾𑌜𑍍𑌞𑍈𑌃 𑌊𑌹𑍍𑌯𑌮𑍍 ।

* ஆர்யக ஸ்தானத்தில். என்பதற்கு பதிலாக மரீசி ஸ்தானத்தில் என்று இருக்கிறது. பதங்கள் வரிசையாக கூறப்படவில்லை. இதை அறிந்து கொள்ள வேண்டும்.

சந்த³நாகருகர்பூரலவங்கைலாப²லத்³வயம் ।
தக்கோலஞ்சாஷ்டக³ந்தா⁴ம்ஸ்து ஜயந்தாதி³ஷு விந்யஸேத் ॥௰௧॥

ஸ்வஸ்திகாநி சதுஷ்கோஷ்டே ஹேமதாம்ரஸுரௌப்யகை: ।
ஸர்வேஷாமபி ஸாமாந்யமேதது³க்தம் ஸமஸ்தகே ॥௰௨॥

கபாலம் ஶூலக²ட்வாங்க³ம் பரஶும் வ்ருஷப⁴ம் ததா² ।
பிநாகம் ஹரிணம் பாஶம் ஹேமம் பூர்வாதி³ஷு
ந்யஸேத் ॥ ௰௩ ॥

---

*சந்தணம் 1, அகில் 2, பச்சைக்கற்பூரம் 3, லவங்கம் 4, ஏலக்காய் 5, லதாபலம் (ஜியோதிர் லதாபலம்) 6, தக்கோலம் 7, (செஞ்சந்தணம் 8) ஆகிய அஷ்ட (8) கந்தங்களை, ஜயந்தாதி ஸ்தானங்களில் வைக்கவேண்டும்.

தங்கம், இரும்பு, தாம்ரம், வெள்ளி, இவைகளினால் நான்கு ஸ்வஸ்திகங்களை செய்து, அவைகளை முறையே (கிழக்கு திக்குமுதல்) நான்கு திக்குகளிலும் வைக்க வேண்டும்.

இதுவரையில் கூறப்பட்டவைகள் யாவும், ஸகல தேவதைகளுக்கும் மனிதர்களுக்கும் பொதுவாகக் கூறப் பட்டிருக்கிறது. இனி அந்தந்த தேவதைக்குறிய அடையாளங்களுடன் கூறுகிறேன். 32

கபாலம் 1, சூலம் 2, கட்வாங்கம் 3, பரசு 4, விருஷபம் 5, பிநாகம் 6, மான் 7, பாசம் 8, (இவைகள் சிவசின்ஹங்கள்) இந்த எட்டு (8) ஆயுதங்களையும் கிழக்கு முதலாக எட்டு திக்குகளிலும் வைக்கவேண்டும். 33

---

* இங்கு (7) கந்த திரவியங்கள்தான் கூறப்பட்டிருக்கின்றன. ஆகையால், சந்தணம் என்பதற்கு, வெண் சந்தணம், செஞ்சந்தணம் என இரண்டையும் கொள்ளவேண்டும்.

கார்தஸ்வரமயம் சாஷ்டமங்கலம் தத்ர விந்யஸேத் |
தர்பணம் பூர்ணகும்பம் ச வ்ருஷபம் சாமரத்வயம் ||

ஸ்ரீவத்ஸம் ஸ்வஸ்திகம் ஶங்கம் தீபம் தேவாஷ்டமங்கலம் |
ஸ்தாபகஸ்யாநுஶிஷ்யஸ்தாநு ஸ்தபதி: கர்த்ருஸம்மதோ ந்யஸேத் ||

ஶுக்லாத்யேந வாஸஸா ஸம்யக் (ஸு)பிதாயைந தத்
ஸ்திரம் |
தமேவாராத்ய கந்தாத்யை: ஸ்நாபயேத் கலஶோதகை: ||

ஸுவர்ணத்தினுலே செய்யப்பட்ட அஷ்டமங்களங்களை, முன்போலவே, எட்டு (8) திக்குகளிலும் வைக்கவேண்டும்.

தர்பணம் 1, (முகம் பார்க்கும் கண்ணுடி) பூரண கும்பம் 2, விருஷபம் 3, இரண்டு சாமரம் 4, ஸ்ரீவத்ஸம் 5, ஸ்வஸ்திகம் 6, சங்கம் 7, தீபம் 8, இவைகள் தேவாஷ்டமங்களமாம். இவைகளை, யஜமானனுடைய அனுமதியுடன், ஸ்தபதியாவது அவனுடைய சிஷ்யனுவது, முறையுடன் வைக்கவேண்டும். 35

பிறகு வெளுப்பு வஸ்திரத்தினுலே, அந்த கர்ப பாஜனத்தைமூடி, அது அசங்காமலிருக்கும்படி செய்ய வேண்டும்.

அந்த கர்பபாஜனத்தை, கந்தம் – அக்ஷதை புஷ்பங்களினுலே ஆராதித்து (பூஜித்து). கலசஜலத்தினுலே அபிஷேகம் செய்யவேண்டும். 36

பிறகு, ஸ்தபதி, ஸ்தாபகனேடுகூட, புஷ்பம், குண்டலம், ஹாரம் முதலிய ஆபரணங்கள், கடகம், மோதிரம், ஸுவர்ணத்தினுலே செய்யப்பட்ட பஞ்சாங்க பூஷணங்கள், மற்றும் பலவித ஆபரணங்கள், ஸுவர்ணயஜ்ஞோபவீதம், புதிய வஸ்திரம் உத்தரீயங்கள், இவைகளை தரித்துக் கொண்டு, சுவேத சந்தனம் பூசிக்கொண்டு, வெளுப்பு

[illegible]
[illegible]

[illegible]
[illegible]

[illegible]
[illegible]

[illegible]
[illegible]

[illegible]
[illegible]

[illegible]

நிறமான புஷ்பங்களை சிரஸ்ஸில் சூடிக்கொண்டு, சுத்தனாக இருந்துகொண்டு,

பிராம்ஹணர்களுடைய வேத கோஷங்களுடனும், சங்கம் பேரிகை முதலிய வாத்திய கோஷங்களுடனும், கௌரீ கல்யாணம் முதலிய பாட்டுகளுடனும், ஜயகோஷங்களுடனும், திக்கஜங்களுடன் கூடியதும், ஸமுத்திரங்களுடனும் மலைகளுடனும் கூடியதும், அனந்தனுடைய சிரஸ்ஸில் இருப்பதுமான அகண்ட பூமண்டலத்தையும் தியானம் செய்துகொண்டு, ஸிருஷ்டி - ஸ்திதி - லயம் இவைகளுக்கு ஆதாரபூதரான புவனாதிபதியை ஜபிக்க வேண்டும்.

ஜபம் தியானம் செய்துகொண்டு.— பிரம்ஹாதிதேவர்களுக்கும் தேவிமார்களுக்கும் கர்பஸ்தானமாகக் கூறப்பட்டு இருக்கிற துவாரத்தின் (கர்பகிருஹ துவாரத்தின்) தென்

𑌹𑍋𑌮𑌸𑍍𑌤𑌂𑌭𑍇 𑌪𑍍𑌰(𑌪𑍍𑌰)𑌤𑌿𑌸𑍍𑌤𑌂𑌭𑍇 𑌪𑌾𑌦𑍁𑌕𑌾𑌸𑍁
𑌪𑍍𑌰(𑌪𑍍𑌰)𑌦𑍇𑌶𑌯𑍋𑌃 ॥௪௨॥

𑌤𑌸𑍍𑌯𑌾𑌧𑌸𑍍𑌤𑌾𑌤𑍍𑌕𑍃𑌤𑌂 𑌨𑌿𑌮𑍍𑌨𑌂 𑌗𑌰𑍍𑌭(𑌗𑌰𑍍𑌤) 𑌸𑌂𑌪𑌨𑍍𑌨𑌾𑌶𑌕𑍃𑌤𑍍 ।
𑌅𑌥𑌾𑌸𑍍𑌯 𑌶𑍍𑌰𑍀𑌕𑍃𑌤𑌾 𑌸𑌾𑌰𑌵𑍃𑌕𑍍𑌷𑌪𑌾𑌷𑌾𑌣𑌨𑌿𑌰𑍍𑌮𑌿𑌤𑌾 ॥௪௩॥

𑌪𑌾𑌤𑍍𑌰𑌾𑌦𑍍𑌵𑌿𑌗𑍁𑌣𑌵𑌿𑌸𑍍𑌤𑌾𑌰𑌾 𑌪𑌞𑍍𑌚𑌾𑌙𑍍𑌗𑍁𑌲𑌘𑌨𑌾𑌯𑌤𑌾 ।
𑌪𑍍𑌰𑌤𑌿𑌮𑌾𑌫𑌲𑌕𑌾 𑌯𑌾 𑌸𑌾 𑌸𑍍𑌥𑌾𑌪𑍍𑌯𑌾 𑌤𑌦𑍍𑌭𑌾𑌜𑌨𑍋𑌪𑌰𑌿 ॥ ௪௪ ॥

𑌤𑌦𑍂𑌰𑍍𑌧𑍍𑌵𑍇 𑌸𑍍𑌥𑌾𑌪𑌯𑍇𑌤𑍍 𑌸𑌮𑍍𑌯𑌕𑍍 𑌸𑌂𑌶𑍍𑌲𑌿𑌷𑍍𑌟𑌮𑌥𑍇𑌷𑍍𑌟𑌕𑌮𑍍 ।

பக்கத்திலுள்ள ஸ்தம்பத்திற்குக் கீழேயுள்ள குழியில், கர்பத்தை (அந்த கர்பபாஜனத்தை) நன்கு பொருத்தமாக வைக்கவேண்டும். 41½

ஹோமஸ்தம்பம், கர்பகிருஹத்தில் சுற்றிலுமுள்ள தூண்கள், கர்பகிருஹத்தைச் சுற்றிலும் பாதுகாஸ்தானம், இவைகளின் கீழே, செய்யப்படும் பள்ளமானது, கர்ப பாஜனத்தை வைப்பதற்கு செய்யப்பட்ட பள்ளத்தைக் காட்டிலும் அதிக உயரமுள்ளதாக (ஆழம் உள்ளதாக) இருந்தால் அது, கர்பஸ்தாபனத்திலே உண்டாகும் ஸகல விதமான ஸம்பத்துக்களேயும் நாசம் செய்துவிடும். [கர்ப கிருஹத்திலுள்ள தூண்கள். சுற்றுப்புறங்களில், சுவர் வைக்குமிடங்கள், இவைகளின் அஸ்திவாரத்திற்காக தோண்டப்படும் பள்ளமானது, கர்பஸ்தாபன ஸ்தானத்தை காட்டிலும் அதிக ஆழமுள்ளதாக இருக்கக்கூடாது என்பது பொருள்.]

அந்த கர்பபாஜனத்தின்மேலே, ஸாரவத்தான (மிகவும் உறுதியான) மரங்கள், அல்லது சிலையினாலே சச்சரமாகவும், பாத்திரத்தின் விஸ்தாரத்தைப்போல இருமடங்கு விஸ்தாரமுள்ளதாகவும், ஐந்து அங்குல கனமுள்ளதாகவும், பிரதிமா பலகையை கல்பித்து அதை கர்ப பாஜனத்தின்மீது வைக்கவேண்டும். 44

...ரத்நௌஷதிஸமாயுக்தம் வஸ்த்ரபுஷ்பாதிஶோபிதம் ॥௪௫॥

ஈஶகர்பமிதம் ப்ரோக்தமந்யேஷாம் து ப்ரவக்ஷ்யதே ।
[illegible] ஸௌவர்ணம் சக்ரம் து
[illegible] ॥௪௬॥

ஶங்கசாபகதாதண்டம் ச [illegible] ।
தநு: ஶங்கம் ச வாமே து கட்கம் தண்டம் ச தக்ஷிணே ॥

புரஸ்தாத் வைநதேயம் ச ஸௌவர்ணேந [illegible] ।
[illegible] ॥௪௭॥

[illegible] ।

அந்த பலகத்திற்குமேலே, நாண்கு செங்கற்களை நன்கு பொருத்தமாக ஒன்று சேர்க்கப்பட்டதும், ரத்னங்கள்—ஒஷதிகளுடன் கூடியதும், வஸ்திரம், புஷ்பம் இவைகளால் அலங்கரிக்கப்பட்டதுமான, ஸ்தம்பத்தை ஸ்தாபனம் செய்யவேண்டும். 45

இதற்கு ஈசகர்பம், என்று பெயர். மற்ற தேவாலயங்களில் கர்பஸ்தாபன விதியைக் கூறுகிறேன்.

விஷ்ணுவின் ஆலயத்தில் கர்பத்தின் மத்தியில் ஸுவர்ணத்தினுல் சக்கரம் செய்துவைக்கவேண்டும். சங்கம் - வில் - தண்டம் இவைகளை தங்கத்தினுலும், நந்தகத்தை (கத்தியை) அயஸ்ஸினுலும் (இரும்பினுலும்) செய்து தனுஸ் - சங்கம் இவைகளை இடது பக்கத்திலும், கத்தி, தண்டம் இவைகளை வலது பக்கத்திலும் வைக்க வேண்டும். ஸுவர்ணத்தினுல் கருடனை செய்து எதிரில் வைக்கவேண்டும். இது விஷ்ணு ஆலயத்தில் வைக்க வேண்டிய கர்பமாகும். 47½

𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾𑌸𑌨𑌪𑌦𑍇 𑌮𑌧𑍍𑌯𑌂𑌬𑌾𑌰𑌾𑌹𑌂 𑌸𑍍𑌥𑌾𑌪𑌯𑍇𑌦𑍇𑌵 𑌚 ॥

𑌤𑌸𑍍𑌮𑌿𑌨𑍍 𑌮𑌧𑍍𑌯𑍇 𑌤𑌥𑍋𑌂𑌕𑌾𑌰𑌂 𑌯𑌜𑍍𑌞𑌸𑍂𑌤𑍍𑌰𑌾𑌵𑍃𑌤𑌂 𑌤𑍁 𑌤𑌤𑍍 ।
𑌸𑍍𑌵𑌸𑍍𑌤𑌿𑌕𑌾𑌨𑌿 𑌚𑌤𑍁𑌰𑍍𑌦𑌿𑌕𑍍𑌷𑍁 𑌵𑌾𑌮𑍇 𑌸𑍍𑌥𑌾𑌪𑍍𑌯𑌂 𑌕𑌮𑌣𑍍𑌡𑌲𑍁𑌮𑍍 ॥௫௧॥

𑌕𑍁𑌶𑌾𑌕𑍍𑌷𑌮𑌾𑌲𑌾𑌂 𑌵𑌾𑌮𑍇 (𑌸𑌵𑍍𑌯𑍇) 𑌤𑍁 𑌵𑌾𑌮𑍇(𑌰𑌃)
𑌤𑍀𑌕𑍍𑌷𑍍𑌣𑌾𑌗𑍍𑌨𑌯𑌂 𑌕𑍍𑌷𑌿𑌪𑍇𑌤𑍍 ।
𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌗𑌰𑍍𑌭𑌮𑌿𑌦𑌂 𑌪𑍍𑌰𑍋𑌕𑍍𑌤𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌸𑍍𑌥𑌾𑌨𑍇 𑌪𑍍𑌰𑌤𑌿𑌷𑍍𑌠𑌯𑍇𑌤𑍍 ॥

𑌸𑍍𑌵𑌸𑍍𑌤𑌿𑌕𑌂 𑌚𑌾𑌕𑍍𑌷𑌮𑌾𑌲𑌾𑌂 𑌚 𑌶𑌕𑍍𑌤𑌿𑌂 𑌚𑌕𑍍𑌰𑌂 𑌚 𑌕𑍁𑌕𑍍𑌕𑍁𑌟𑌂 ।
𑌮𑌯𑍂𑌰𑌂 𑌚𑍈𑌵 𑌸𑍌𑌵𑌰𑍍𑌣𑍈*𑌰𑌯𑌸𑌾 𑌶𑌕𑍍𑌤𑌿𑌮𑌧𑍍𑌯𑌮𑍇 ॥ ௫௨ ॥

𑌵𑌾𑌮𑍇 𑌚 𑌕𑍁𑌕𑍍𑌕𑍁𑌟𑌂 𑌦𑌦𑍍𑌯𑌾𑌤𑍍 𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑍇 𑌚 𑌮𑌯𑍂𑌰𑌕𑌮𑍍 ।

பிரஹ்மாவின் ஆலயத்தில் யஜ்ஞோபவீதம், ஓங்காரம், ஸ்வஸ்திகம், அக்னி இவைகளை ஸுவர்ணத்தினாலும், பத்மம் கமண்டலம் - ஜபமாலை - தர்பம் இவைகளை தாமிரத்தினாலும் செய்துவைத்து, பிரஹ்மாவின் ஆஸனபதத்தில், பத்ம மத்தியில் வைக்கவேண்டும். அந்த கர்ப மத்தியில் யஜ்ஞோபவீதத்தினால் சுத்தப்பட்ட ஓம்காரத்தை வைக்க வேண்டும். ஸ்வஸ்திகங்களை நான்கு திக்குகளிலும் வைக்க வேண்டும். இடது பக்கத்தில் கமண்டலத்தை வைக்க வேண்டும். தர்பம் - ஜபமாலை இவைகளை வாம (வலது) பாகத்திலும் வைக்கவேண்டும். எதிரில் ஜ்வலித்துக்கொண்டிருக்கின்ற அக்னியை வைக்கவேண்டும். இது பிரஹ்ம கர்பமாகும். இதை பிரஹ்ம ஸ்தானத்தில் வைக்க வேண்டும். 51

ஸ்வஸ்திகம் - ஜபமாலை - சக்தி - சக்கரம் - கோழி-மயில் களை ஸுவர்ணத்தினால் செய்யவேண்டும். இரும்பினால் சக்தி யாயுதத்தை செய்து மத்தியில் வைக்கவேண்டும். இடது

---

*𑌮𑌧𑍍𑌯𑍇 𑌶𑌕𑍍𑌤𑌿𑌮𑌯𑌸𑍀𑌂 𑌉𑌦𑌿 𑌯𑌾𑌕𑍍𑌤𑌃 𑌵𑌾𑌰𑌃 ।

𑌅𑌕𑍍𑌷𑌸𑍂𑌤𑍍𑌰𑌂 𑌪𑍁𑌰𑌃 𑌸𑍍𑌥𑌾𑌪𑍍𑌯𑌂 𑌗𑌰𑍍𑌭𑌂 𑌷𑌣𑍍𑌮𑍁𑌖𑌵𑍇𑌶𑍍𑌮𑌨𑌿 ॥

𑌅𑌮𑍍𑌭𑍋𑌜𑌂 𑌅𑌙𑍍𑌕𑍁𑌶𑌂 𑌪𑌾𑌶𑌂 𑌸𑌿𑌂𑌹𑌂 𑌸𑌵𑌿𑌤𑍁𑌰𑌾𑌲𑌯𑍇 ।
𑌵𑌜𑍍𑌰𑌂 𑌨𑌨𑍍𑌦𑌕𑌂 𑌚𑌕𑍍𑌰𑌂 𑌚𑌾𑌮𑌰𑌂 𑌯𑌾𑌨𑌿 𑌵𑌜𑍍𑌰𑌿𑌣𑌃 ॥ ௫௪ ॥

𑌜𑌾𑌮𑍍𑌬𑍂𑌨𑌦𑌮𑌯𑌂 𑌮𑍇𑌷𑌂 𑌶𑌕𑍍𑌤𑌿𑌂 𑌪𑌾𑌵𑌕𑌸𑍍𑌯𑌾𑌲𑌯𑍇 𑌨𑍍𑌯𑌸𑍇𑌤𑍍 ।
𑌅𑌯𑌸𑌾 𑌮𑌹𑌿𑌷𑌂 𑌪𑌾𑌶𑌂 𑌹𑍈𑌮𑌜𑌂 𑌯𑌮𑌾𑌲𑌯𑍇 𑌨𑍍𑌯𑌸𑍇𑌤𑍍 ॥ ௫௫ ॥

𑌅𑌯𑌸𑌾 𑌨𑌨𑍍𑌦𑌕𑌂 𑌗𑌰𑍍𑌭𑌂 𑌨𑌿𑌰𑍃𑌤𑍇𑌸𑍍𑌤𑍁 𑌵𑌿𑌮𑌾𑌨𑌕𑍇 ।
𑌵𑌾𑌰𑍁𑌣𑍇 𑌮𑌕𑌰𑌂 𑌪𑌾𑌶𑌂 𑌲𑍋𑌹𑌜𑌂 𑌹𑍈𑌮𑌜𑌂 𑌤𑌥𑌾 ॥ ௫௬ ॥

பக்கத்தில் குக்குடத்தையும், வலது பக்கத்தில் மயிலேயும் வைக்கவேண்டும். அக்ஷஸூத்திரத்தை எதிரில் வைக்க வேண்டும். இது ஷண்முகபவனத்தில் வைக்கவேண்டிய கர்பமாகும். 53

தாமரைப்பூ – அங்குசம் – பாசம் – ஸிம்ஹம், இவைகள் ஸூரியாலயத்தில், கர்பத்தில் வைக்கவேண்டியவை களாகும்.

இந்திரனுடைய ஆலயத்தில், வஜ்ரம், யானை, நந்தகம், (கத்தி) சக்ரம், சாமரம், இவைகளை வைக்கவேண்டும். 54

தங்கத்தினுலே செய்யப்பட்ட, செம்மரியாடு, சக்தி இவைகளை அக்நியின் ஆலயத்தில் வைக்கவேண்டும்.

இரும்பினுலே செய்யப்பட்ட எருமைக்கடா, தங்கத்தி னுலே பாசம் இவைகளை யமனுடைய ஆலயத்தில் வைக்க வேண்டும். 55

நிருருதியின் விமானத்தில், இரும்பினுலே செய்யப்பட்ட நந்தகத்தை (கத்தியை) கர்பத்தில் வைக்கவேண்டும்.

வருணனுடைய ஆலயத்தில், இரும்பினுல் செய்யப் பட்ட மகரத்தையும் (முதலையையும்) தங்கத்தினுலே

वायोः कृष्णसारं हैमं व्यालं तारापतेः
क्षिपेत् ।
नरवाहे नरः प्रोक्तः मकरो मकरध्वजे ‖ ५७ ‖

परशुं दन्ताक्षमालां च विघ्नेश्वरालये क्षिपेत् ।
ओंकारं वक्रदण्डं च सौवर्णं चार्यकस्य तु ‖

अश्वत्थं कलशं सिंहं छत्रं स्वर्णेन कारयेत् ।
अश्वत्थः पारतः स्थाप्यः छत्रं तस्योपरि स्थितम् ‖

कुण्डिका वामभागे तु केसरी दक्षिणे भवेत् ।
जैनदेवालये सर्वं श्रीवत्साशोकसिंहकम् ‖

செய்யப்பட்ட பாசம், இவைகளை, கர்பத்தில் வைக்க வேண்டும். 56

வாயுவுக்கு தங்கத்தினாலே மானையும், சந்திரனுக்கு, வியாளத்தையும், (வியாளம் – யாளி, அல்லது பாம்பு) கர்பத்தில் வைக்கவேண்டும்.

குபேரபவனத்தில் மனுஷ்யாகிருதியையும், மன்மத பவனத்தில் மகரத்தையும் வைக்கவேண்டும். 57

பரசு, தந்தம், ஜபமாலை, இவைகளை, விக்னேசுவருடைய ஆலயத்தில், கர்பத்தில் வைக்கவேண்டும்

சாஸ்தாவின் ஆலயத்தில், ஓம்காரம், கோணலான தண்டம், இவைகளை ஸுவர்ணத்தினாலே செய்து வைக்க வேண்டும். 58

புத்தருடைய ஆலயத்தில், அரசமரம் – கமண்டலம் – ஸிம்ஹம் – குடை – இவைகளை தங்கத்தினாலே செய்து, அரசமரத்தை எதிரில் வைக்கவேண்டும். குடையை அதன் மேலே வைக்கவேண்டும். கமண்டலத்தை இடது பக்கத்திலும், ஸிம்ஹத்தை வலது பக்கத்திலும் வைக்கவேண்டும்

கமண்ட்வக்ஷமாலா ச பிஞ்சிபிஞ்சம் து வாமத: ।
ஶ்ரீவத்ஸம் கனகம் (பிம்பம்) தாம்ரவ்ருக்ஷம் ந்யஸேத் ததா ॥௬௧॥

வ்ருக்ஷஸ்ய வாமத: ஸ்தாப்ய: சத்ரம் தஸ்யோபரிஷ்டத: ।
பிம்பம் தக்ஷிணபார்ஶ்வே து அக்ஷமாலா வாமே து குண்டிகா ॥

ஶ்ரீவத்ஸம் மத்யமே ஸ்தாப்யம் கேஸரீம் தத்ர விந்யஸேத் ।
ஸௌவர்ண கனகம் தாம்ரவ்ருக்ஷம் மயூர பிஞ்சிகாயுதம் ॥ ௬௨ ॥

ஶுகம் சக்ரம் ச ஸௌவர்ணம் து ஸிம்ஹம் ஶங்கம் ச ராஜதம் ।
ரௌப்யம் தாம்ரமயம் சைவ க்ருஷ்ணோ ஹேம தடாகம் ॥ ௬௩ ॥

ஶவம் த்ரிமூர்த்தி விசாலே து மஹாமூர்த்தி காயத்ரி லக்ஷண: ।

ஸ்ரீவத்ஸம், அசோகஸிம்ஹம் (ஸிம்ஹத்துடன் அசோக சக்ரம்) இவைகளை கர்பத்தில் வைக்கவேண்டும். 60

ஜைனாலயத்தில், கமண்டலம் – ஜபமாலை – மயில் தோகை, இவைகளையும், மூன்று குடை, அரசமரம், விசிறி, இவைகளையும், தங்கத்தினாலே செய்து, மரத்தை எதிரில் வைத்து, அதன்மேலே குடையை வைக்கவேண்டும். வலது பக்கத்தில், மயில்தோகை, அல்லது ஜபமாலையையும் இடது பக்கத்தில் கமண்டலத்தையும் வைக்கவேண்டும். ஸ்ரீ ஸ்வரூபத்தை மத்தியில் வைக்கவேண்டும். அங்கு ஸிம்ஹத்தையும் வைக்கவேண்டும். அபரபாகத்தில் (இடது பக்கத்தில்) கமண்டலத்தையும், விசிறியையும், வைக்கவேண்டும். இவ்விதமாக கர்பத்தை வைக்க வேண்டும். 63

ஸமர்த்தனாக இருப்பவன், துர்கையின் ஆலயத்தில், கிளி – சக்ரம், இவைகளை ஸ்வர்ணத்தினாலும், ஸிம்ஹம்,

𑌖𑌟𑍍𑌵𑌾𑌙𑍍𑌗𑌂 𑌨𑌨𑍍𑌦𑌕𑌂 𑌶𑌕𑍍𑌤𑌿𑌂 𑌕𑍍𑌷𑍇𑌤𑍍𑌰𑌪𑌾𑌲𑌸𑍍𑌯 𑌹𑍇𑌮𑌜𑌮𑍍 ॥௬௫॥

𑌪𑌦𑍍𑌮𑌂 𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍍𑌯𑌾𑌃 𑌸𑌰𑌸𑍍𑌵𑌤𑍍𑌯𑌾𑌃 𑌓𑌂𑌕𑌾𑌰𑌂 𑌚 𑌤𑍍𑌰𑌿𑌵𑌰𑍍𑌣𑌕𑌮𑍍 ।
𑌧𑍍𑌵𑌜𑌂 𑌕𑌾𑌕𑍇𑌨 𑌸𑌂𑌯𑍁𑌕𑍍𑌤𑌂 𑌹𑍈𑌮𑌂 𑌜𑍍𑌯𑍇𑌷𑍍𑌠𑌾𑌲𑌯𑍇𑌷𑍍𑌵
[illegible] ॥௬௬॥

𑌕𑌪𑌾𑌲𑌶𑍂𑌲𑌘𑌣𑍍𑌟𑌾𑌭𑌿𑌃 𑌪𑍍𑌰𑍇𑌤𑌾𑌨𑍍 𑌕𑌾𑌳𑍀𑌮𑌨𑍍𑌦𑌿𑌰𑍇
𑌨𑍍𑌯𑌸𑍇𑌤𑍍 ।
𑌹𑌂𑌸𑌾𑌕𑍍𑌷𑌶𑌿𑌖𑌿𑌤𑌾𑌰𑍍𑌕𑍍𑌷𑍍𑌯𑌾𑌂𑌶𑍍𑌚 𑌸𑌿𑌂𑌹𑍇𑌭𑌪𑍍𑌰𑍇𑌤
𑌰𑍂𑌪𑌕𑌾𑌨𑍍 ॥

𑌜𑌾𑌮𑍍𑌬𑍂𑌨𑌦𑌮𑌯𑌾𑌨𑍍 𑌮𑌾𑌤𑍃𑌕𑌾𑌲𑌯𑍇𑌷𑍁 𑌵𑌿𑌨𑍍𑌯𑌸𑍇𑌤𑍍 ।

சங்கும், இவைகளை, வெள்ளியினாலும், மானை தாமரத்தினாலும், கத்தியை இரும்பினாலும் செய்து கர்பஸ்தாபனம் செய்ய வேண்டும். 64½

க்ஷேத்திரபாலருடைய ஆலயத்தில், கட்வாங்கம் - நந்தகம் (கத்தி) - சக்தி - இவைகளை கர்பத்தில் வைக்க வேண்டும். 65

லக்ஷ்மீதேவிக்கு, தாமரை புஷ்பத்தையும், ஸரஸ்வதீ தேவிக்கு, மூன்று அக்ஷர ஸ்வரூபமான ஓம்காரத்தையும், கர்பத்தில் வைக்கவேண்டும்.

ஜ்யேஷ்டாதேவியின் ஆலயத்தில் காக்கை - துவஜம் - நீலோத்பலம் - இவைகளை தங்கத்தினாலே செய்து வைக்க வேண்டும். 66

காளிகோவிலில், கபாலம் - சூலம் - மணி - பிரேதங்கள், இவைகளை கர்பத்தில் வைக்கவேண்டும்.

ஸப்தமாதாக்களின் கோவிலில், ஹம்ஸம் 1, ஜபமாலை 2, மயில் 3, கருடன் 4, ஸிம்ஹம் 5, யானை 6, பிரேதரூபங்கள் 7, இவைகளை, தங்கத்தினாலே செய்து வைக்கவேண்டும். 67½

பத்மாக்ஷமாலிகம் தீபம் ரோஹிண்யா கர்பமண்டலே ||

தர்பணம் சாக்ஷமாலாம் ச பார்வத்யா கர்பகே விக்ஷிபேத் |
பத்மாக்ஷமாலிகம் பூர்ணகும்பம் மோஹிநி கர்பகே ||

ஸ்வஸ்வாயுதாகாரஸ்ய ஸவிசேஷஸ்ஸ வாஹநை: |
அநுக்தாநாம் ச தேவாநாம் தேவீநாம் கர்பமிஷ்யதே ||

விப்ராதீநாம் து வர்ணாநாம் ஜாதிகர்ப விதீயதே |
காரகம் தண்டகாஷ்டம் ச ரௌப்யம் ஹைமமயம் க்ரமேண ||எக||

யஜ்ஞோபவீதம் யஜ்ஞாக்நிம் யஜ்ஞபாண்டம் ச ராஜதம் |
யஜ்ஞோபவீத(தம்)யேஷ்யம் யஜ்ஞபாண்டாநி நிக்ஷிபேத் ||

ரோஹிணீதேவியின் ஆலயத்தில், தாமரை மணிமாலை, அல்லது, தாமரைப்பூ, ஜபமாலை, தீபம், இவ்வகைகளை கர்பத்தில் வைக்கவேண்டும். 68

பார்வதீ தேவியின் ஆலயத்தில், கண்ணாடி, ஜபமாலை, இவைகளை வைக்கவேண்டும். தாமரைப்பூ, ஜபமாலை, அல்லது தாமரைமணி மாலை, பூரணகும்பம், இவைகளை மோஹிநி ஆலயத்தில் வைக்கவேண்டும். 69

இங்கு கூறப்படாத புருஷதேவதைகளுக்கும், ஸ்திரீ தேவதைகளுக்கும், அவரவர்களுக்கு உரிய அடையாளங்களுடனும், வாஹனங்களுடனும் கர்ப்பத்தை வைக்க வேண்டும். 70

பிராம்ஹணர் முதலானவர்களுக்கு அந்தந்த ஜாதிக்குரிய கர்பத்தை வைக்கவேண்டும் என்று கூறப்பட்டிருக்கிறது.

தாமரத்தினாலே கமண்டலம், தங்கத்தினாலே தண்டம், வெள்ளியினாலே யஜ்ஞோபவீதம் - யஜ்ஞாக்னி - யஜ்ஞ பாண்டங்கள் - (பாண்டம் - பாத்திரம்) இவைகளைச்செய்து

[illegible] |
[illegible] ||

[illegible] |
[illegible] ||

[illegible] |
[illegible] ||

[illegible] |
[illegible] ||௭௩||

[illegible] |

மத்தியில் யஜ்ஞோபவீதத்தையும், யஜ்ஞபாண்டங்களை வலது பக்கத்திலும், கமண்டலத்தையும், தடியையும் இடது பக்கத்திலும், அக்னியை முன்னிலையிலும் வைக்கவேண்டும். இது பிராம்ஹணர்களுக்குரிய கர்பமாகும். 72½

க்ஷத்திரியர்களுக்கு நான்கு பக்கங்களிலும் ஸ்வஸ்திகங்களையும், நடுவில் ஸுவர்ணமயமான சக்கரத்தையும், இடது பக்கத்தில் வெள்ளியினாலே சங்கத்தையும், தாமரத்தினாலே செய்யப்பட்ட வில்லை இடது பக்கத்திலும், வெள்ளியினாலே செய்யப்பட்ட தண்டம் - கத்தி, இவைகளை வலது பக்கத்திலும், - தங்கம் - இரும்பு - தாமரம் - வெள்ளி, இவைகளால் செய்யப்பட்ட நான்கு யானைகளை நான்கு திக்குகளிலும் முறையே வைக்கவேண்டும். நடுவில் லக்ஷ்மீதேவியின் உருவத்தையும், அதற்கு நான்கு திக்குகளிலும் ஸ்வஸ்திகங்களையும், குடை, துவஜம், பாவட்டா, இவைகளையும், ஆஜ்ஞாரூபமான தண்டத்தையும் வைக்கவேண்டும். இந்த கர்பமானது, அரசனுடைய அரண்மனையில் வைப்பதானால், ராஜகிருஹதுவாரத்தில் வைக்கவேண்டும். மற்ற

𑌵𑌾𑌰𑍍𑌷𑍍𑌣𑍇𑌯𑌕𑌾𑌨𑌾𑌂 𑌗𑌰𑍍𑌭𑌂 𑌨𑍍𑌯𑌸𑍇𑌤𑍍 †𑌵𑌿𑌜𑌯𑌦𑍍𑌵𑌾𑌰𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑍇 ॥௭௭॥

𑌆𑌯𑌸𑌂 𑌹𑌲𑌶𑍀𑌰𑍍𑌷𑌂 𑌚 𑌶𑌙𑍍𑌖𑌂 𑌤𑌾𑌮𑍍𑌰𑌂 𑌕𑍁𑌳𑍀𑌰𑌕𑌮𑍍 ।
𑌪𑌞𑍍𑌚𑌾𑌯𑍁𑌧𑌂 𑌸𑍀𑌸𑌜𑌂 𑌮𑌾𑌷𑌂 𑌹𑌯𑌂 𑌵𑍃𑌷𑌗𑌜𑍌 𑌹𑌰𑌿𑌮𑍍 ॥௭௮॥

𑌸𑍂𑌰𑍍𑌯𑌾𑌗𑍍𑌨𑌿𑌵𑌰𑍁𑌣𑍇𑌨𑍍𑌦𑍁𑌨𑌾𑌂 𑌸𑍍𑌥𑌾𑌨𑍇 𑌸𑌮𑍍𑌯𑌕𑍍 𑌨𑌿𑌵𑍇𑌶𑌯𑍇𑌤𑍍 ।
𑌚𑌤𑍁𑌰𑍋 𑌰𑌾𑌜𑌤𑌾𑌨𑍍 𑌗𑍋𑌨𑍍 𑌦𑌿𑌕𑍍𑌷𑍁 𑌚𑌤𑌸𑍃𑌷𑍍𑌵𑌪𑌿 ॥

𑌗𑍋𑌵𑍃𑌷𑌂 𑌚 𑌪𑍁𑌰𑌸𑍍𑌤𑌾𑌤𑍍 𑌵𑍈𑌶𑍍𑌯𑌾𑌨𑌾𑌂 𑌪𑍍𑌰𑌵𑌿𑌧𑍀𑌯𑌤𑍇 ।
𑌬𑍀𑌜𑌵𑌾𑌪𑍍𑌯𑌂 𑌹𑌲𑌂 𑌸𑍌𑌵𑌰𑍍𑌣𑌂 𑌤𑌾𑌮𑍍𑌰𑌜𑌂 𑌯𑌾𑌮𑌿𑌷𑍍𑌯𑌤𑍇 ॥௮௦॥

க்ஷத்திரியர்களுடைய கிருஹத்திலானால் உசிதம்போல் வைக்கவேண்டும். 76½

வார்ஷ்ணேயகர்களுடைய கிருஹகர்பமானால், (வார்ஷ்ணேயகர்-விருஷ்ணிவம்சத்தில் பிறந்தவன்) * விஜய துவாரத்திற்கு தென் பக்கத்தில் கர்பத்தை வைக்க வேண்டும். இரும்பினால் செய்யப்பட்ட கலப்பையின் கொழு, சங்கு, தாமரத்தினால் செய்யப்பட்ட நண்டு, பஞ்சாயுதங்களையும், ஈயத்தினால் செய்யபட்ட உளுந்து, குதிரை, விருஷபம், யானை, சிங்கம், இவைகளையும் சூரியன்-அக்கினி-வருணன்-இந்து இவர்களின் ஸ்தானத்தில் நன்கு வைக்கவேண்டும். வெள்ளியால் செய்யப்பட்ட நான்கு பசுக்களை நான்கு திக்குகளிலும் வைக்கவேண்டும். காளைமாட்டை முன்பக்கத்தில் வைக்க வேண்டும். இது வைசியர்களுக்குக் கூறபட்ட கர்பமாகும். 79½

---

†𑌵𑌿𑌵𑌸𑍍𑌵𑌦𑍍𑌸𑍍𑌥𑌾𑌨 𑌇𑌤𑌿 𑌵𑌾, 𑌵𑌿𑌤𑌤𑌸𑍍𑌥𑌾𑌨 𑌇𑌤𑌿 𑌵𑌾, 𑌪𑌾𑌠𑍋 𑌭𑌾𑌵𑍍𑌯𑌮𑌿𑌤𑌿 𑌭𑌾𑌤𑌿 ।

* விவஸ்வத்ஸ்தானத்திற்கு, என்றாவது விததஸ்தானத்திற்கு என்றாவது, பாடம் இருக்க வேண்டுமென்று தோன்றுகிறது.

ராஜதேந வஸாம் விதத்யாத் அதர்வி-ரக்ஷா விதிக்ஷிவேக: ।
மத்யே மொவாம் மவம் சைவ தக்ஷிணஸ்யாம் யாமம் வாமத: ॥

ஹைமம் தக்ஷிணஹாமே து வாமாம்ஸே பீஜபாத்ரகம் ।
பீஜம் ஹிரண்மயம் ஶூத்ர மஹம் வைஶ்யே ச ஸம்மதம் ॥

ப்ராஹ்மணாம் ப்ராஹ்மமஹம் ச ஜாதிமஹம் விநிர்திஶேத் ।
அநேகபூமியுக்தாநி யாநி வாஸப்ராஹ்மணி ச ॥௮௩॥

வாஸ்துதிக்கு ச ஹர்ம்யாதி மண்டபே ச ப்ராஹ்மகம் தே* ।
தக்ஷிணே தேது ஹிக்ஷா து ஸாஷ்டாதிள து
அதர்வ்-ஶ்ரமே ॥ ௮௪ ॥

தங்கத்தினுலே செய்யப்பட்ட விதைகள் வைக்கும் பாத்திரமும், கலப்பையும், தாமரத்தினுலே செய்யப்பட்ட நுகத்தடி, வெள்ளியினுல் செய்யப்பட்ட பசு, இவைகளை நான்கு திக்குகளிலும் வைக்கவேண்டும். நடுவில் காளை மாட்டை வைக்க வேண்டும். அதைப் பார்த்து (அதற்கு எதிரில்) நுகத்தடியை வலது பக்கத்திலும், பீஜபாத்திரத்தை (விதை வைக்கும் பாத்திரத்தை) இடது பக்கத்திலும் வைக்கவேண்டும். பீஜங்கள் (விதைகள்) தங்கத்தினுலே செய்யப்பட்டிருக்க வேண்டும். இது சூத்திரர்களுக்குரிய கர்பமாகும். இது வைசியர்களுக்குமாகும். 82

பிராம்ஹணர் முதலிய ஜாதியினரின் வீடுகளில், வைக்கப்படுகின்ற கர்பமானது, கர்பத்திற்கு கூறப்பட்டிருக்கிற திரவியங்களுடன் அந்தந்த ஜாதியினருக்குக் கூறப்பட்டிருக்கிற பதார்த்தங்களையும் சேர்த்து வைக்க வேண்டும்.

வசிக்கின்ற வீடானது அநேக பூமியுக்தமாக (பல மாடிகளுடன் கூடியதாக இருந்தால்) அந்த வீடுகளில்,

*ஶாக்ஷவேவி ச ஊதி வாமேந ஹாவயேதி ஹாதி ।

𑌦𑍍𑌵𑌾𑌰𑍇 𑌵𑌾 𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑍇 𑌸𑍍𑌤𑌮𑍍𑌭𑍇 𑌯𑍋𑌗𑍇𑌵𑌾𑌪𑌿 𑌵𑌿𑌨𑍍𑌯𑌸𑍇𑌤𑍍 ।
𑌸𑍍𑌥𑌾𑌲𑍀𑌤𑌦𑌪𑌿𑌧𑌾𑌨𑌂 𑌚 𑌵𑌾𑌰𑍍𑌷𑌿𑌕𑌂 𑌤𑌣𑍍𑌡𑍁𑌲𑌂 𑌸𑍍𑌰𑌜𑌮𑍍 ॥

[illegible] 𑌦𑌨𑍍𑌤𑌕𑌾𑌷𑍍𑌠𑌾𑌗𑍍𑌨𑌿𑌂 𑌕𑍃𑌷𑍍𑌣𑌂 𑌲𑍋𑌹𑌂 𑌚 𑌭𑌾𑌜𑌨𑍇 ।
𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑍇 𑌵𑌿𑌨𑍍𑌯𑌸𑍇𑌤𑍍 [illegible] 𑌕𑍁𑌮𑍍𑌭𑌃 𑌶𑌾𑌲𑍍𑌯𑌾𑌦𑍍𑌯[illegible] ॥

𑌧𑌨𑌸𑌦𑍍𑌮𑌨𑌿 [illegible] 𑌕𑍁𑌞𑍍𑌚𑌿𑌤𑌂 [illegible] ।
[illegible] ॥

புஷ்பதந்த ஸ்தானம், பல்லாடஸ்தானம். மஹேந்திர ஸ்தானம், *கிரஹக்ஷதம் தென்பக்கத்திலுள்ள நேத்திர பித்தி, இந்த இடங்களில் கர்பத்தை வைக்க வேண்டும்.

அந்த கிருஹமானது சதுர்பூமிகம் முதலானதாக இருந்தால் (நான்கு முதலிய மாடிகளுடையதானல்) சோமாதி ஸ்தானங்கள், வாயில்வழி, அதன் வலது பக்கத்திலுள்ள ஸ்தம்பம், அல்லது இவ்விரண்டுகளும் கூடுமிடம், இந்த இடங்களில் கர்பத்தை வைக்க வேண்டும். 84½

சமையல் கட்டில் அன்னம் பக்குவம் செய்யும் பாத்திரம் ததுபதானம் (அதன் தலையணை-அதாவது அந்த பாத்திரத்தின் மேலே மூடுகின்ற பாத்திரம்) வார்ஷிகம் தண்டுலம். (ஒரே வருஷத்திய அதாவது பழைய அரிசி) புஷ்பமாலை, களக்யம், தந்த காஷ்டம், அக்நி, இரும்பு, (இரும்பு பாத்ரம்) இவைகளை சமயல் கட்டில் தென் பக்கத்தில் வைக்கவேண்டும். சம்பா நெல் அல்லது அரிசி, ஜலம் விட்டு, நிறப்பிய கும்பம் இவைகளையும் வைக்க வேண்டும். 86

தனஸத்மத்தில் தனங்கள் வைக்கும் உள்ளில் தாப்பாள் குஞ்சிதம் (சாவி) இவைகளை கர்பத்தில் வைக்கவேண்டும்.

---

*கிரஹக்ஷதம் என்பதற்கு பதிலாக ராக்ஷஸஸ்தானம் என்று இருக்க வேணுமென்று தோன்றுகிறது.

யேந யத்கர்ம நிஷ்பாத்யம் தேந தத்ஸர்வமாசரேத் |
யாநி யஸ்ய ச ஶில்பாநி தாநி தஸ்ய நியோஜயேத் ||

ஸபாப்ரபாமண்டபேஷு §கர்ணபாதே ச தக்ஷிணே |
த்விதீயஸ்தம்பகே வாபி தக்ஷிணாங்க்ரௌ து *வா ந்யஸேத் ||

அயோமயகஜோ மத்யே கர்பஸ்யாயஸ கம்புக: |
லக்ஷ்மீம் ஸரஸ்வதீம் ஹைமீம் பாத்ரமத்யே து விந்யஸேத் ||

மத்யம் நாட்யஸபாயாம் ச ப்ரக்ஷிப்தே கர்பபாத்ரகே |
ஸ்நிக்தம் ஸர்வமாதோத்யம் உபயோஜ்ய விசேஷத: ||௯௧||

ஶய்யாதீநி ச ஸர்வாணி ஸர்வலோஹமயாநி ச |
ஶ்ரீவத்ஸம் பங்கஜம் பூர்ணகும்பம் ஹேமஜமிஷ்யதே ||

சுகாலயத்தில், கட்டில், தீபம், படுக்கை, இவைகளை கர்பத்தில் வைக்கவேண்டும்.

எந்த கட்டிடம் எதனுல் செய்யப்பட வேண்டுமோ, அதை அந்த இடத்தில் கர்பத்தில் வைக்க வேண்டும். 88

சபை, தண்ணீர் பந்தல், மண்டபம், இவைகளில் வலது பக்கத்தில், கர்ணபாதத்தில், இரண்டாவது தூணில் அல்லது வழிக்கு தென்பக்கத்தின் காலில் கர்பத்தை வைக்க வேண்டும். அந்த கர்ப பாத்திரத்தின் மத்தியில், இரும்பினுலே செய்யப்பட்ட யானை, இரும்பினுலே செய்யப்பட்ட கம்பு, தங்கத்தினுலே செய்யப்பட்ட லக்ஷ்மி, சரசுவதி இவைகளை வைக்க வேண்டும். 90

நாட்டிய சபையில் சகலலோஹங்களினுலும் செய்யப் பட்ட ஆதோத்யங்கள் எல்லாவற்றையும், [ஆதோத்யம்—

---

§கர்ண இதி பாடாந்தரம் | *விந்யஸேத் இதி பாடாந்தரம் |

‡[illegible] ।
[illegible] ॥ [illegible] ॥

துலாபாராபிஷேகார்த்தம் மண்டபே சாபி [illegible] ।
பாஷண்டாஶ்ரமிணாம் வாஸே தத்தச்சிஹ்னம் து [illegible] ॥

ஜாத்யந்தராணாம் ஸர்வேஷாம் தத்தச்சிஹ்னம் ப்ரயோஜயேத் ।
[illegible] ॥

வீணை முதலிய தந்தி வாத்யங்கள், மிருதங்கம் முதலிய தோல் வாத்தியங்கள், புல்லாங்குழல் முதலிய சுஷிரவாத்தியங்கள், ஜாலரா முதலிய கனவாத்யங்கள் என்று நான்கு வகையான வாத்யங்கள்] குடிகாமுகம் (கட்டிடத்தில் வாசப்படி) அல்லது மண்டிதஸ்தம்ப மூலம், (அலங்காரம் செய்து கொள்ளுமிடத்திலுள்ள தூணின் அடித்தலம்) அல்லது இரண்டு இடங்களிலும் வைக்கவேண்டும். 91½

ஹிரணியகர்பனுடைய (பிரம்ஹாவினுடைய) சபையில் ஸ்ரீவத்ஸம், தாமரை மலர், பூரணகும்பம் இவைகளை சுவர்ணத்திருலே செய்து, கர்பத்தில்வைத்து, அதை துவாரஸ்தம்பத்தில் வைக்கவேண்டும். முன்பு கூறப்பட்ட கர்ணபதத்தில் வைப்பதுமாகும். 92

ஹிரண்யகர்ப மண்டபத்திற்கு கூறப்பட்ட கர்பத்தை, துலாபாரம் செய்வதற்கான மண்டபத்திலும் வைப்பதாகும்.

பாஷண்டாசிரமிகளுடைய வாசஸ்தானத்தில், அவரவர்களுக்குரிய அடையாளங்களை கர்பத்தில் வைக்கவேண்டும். 94

மற்ற ஜாதியினாரின் வாசஸ்தானங்களில் அவரவர்களுடைய அடையாளங்களை கர்பத்தில் வைக்கவேண்டும்.

‡ஹிரண்ய[illegible] பாடாந்தரம் ।

ரத்நாநி தாதவச்சைவ ஸம்பூர்ணாந் ஸமாஜநே ।
தத்தேவஸ்யாநுபாவஜ்ஞை: ந்யஸ்தவ்யா நீஷபாத்ரகே ॥

த்வாரஸ்ய தக்ஷிணே ஸ்தாநே ஸ்வாமிஸ்தாநஸ்ய தக்ஷிணே ।
அப்யந்தரமுகம் கர்ப்பம் வேச்மமத்யே பஹிர்முகம் ॥

இமம் மந்த்ரம் ஸமுச்சார்ய ப்ராங்முகோ வாப்யுதங்முக: ।
ஸம்யக் ஸ்தாபயேத் கர்ப்பம் ஸ்தபதி:
க்ரமாத் ॥ ௯௮ ॥

அயம் மந்த்ர: —

ஸர்வதேவதாப்யோ நம: *ஸ்வாஹா । ஸர்வரத்நாதிபதயே ஸ்வாஹா । உத்தரப்ரஜாபதயே ஸத்யாஸிதே நம: ।

யஜமானனுடைய மனைவி கர்ப்பிணியாக இருந்தால், அப்பொழுது கர்ப்பநியாசம் செய்யக்கூடாது. 95

அந்தந்த தேவதா பாவங்களை அறிந்தவர்கள் ரத்னங்கள், தாதுப்பொருள்கள் இவைகளை ஸ்வல்ப விஸ்தாரமான பாத்திரத்தில் வைத்து, அதை துவாரத்திற்கு வலது பக்கத்திலுள்ள ஸ்தானம், ஸ்வாமி ஸ்தானத்திற்கு வலது பக்கம், இந்த இடங்களில் வைக்கவேண்டும். 96†

கர்பமானது, உள்பக்கத்தைப் பார்த்து இருக்க வேண்டும். வீடுகளில் மத்தியில் வைக்கும் கர்பமானது பஹிர்முகமாக (வெளிப்பக்கத்தைப் பார்த்து) இருக்க வேண்டும். 97

ஸ்தபதியானவன், கிழக்கு முகமாக, அல்லது வடக்கு முகமாக இருந்துகொண்டு, இந்த மந்திரத்தைச் சொல்லிக் கொண்டு, முறையே கர்பபாஜனத்தை நன்ருக ஸ்தாபிக்க வேண்டும். 98

---

† ஸ்வாஹா ஓம் நம: இதி பாடாந்தரம் ।

ஶ்ரியை நம: । ஸரஸ்வத்யை நம: । வைவஸ்வதாய நம: । வஜ்ரபாணயே நம: । அபிநவஸர்வவிக்நப்ரஶமநாய நம: । நமோ வஹ்நயே ஸ்வாஹா ॥ இதி ॥

வாபீகூபதடாகேஷு தீர்கிகாஸேதுபந்தகே ।
மத்ஸ்யமண்டூககுளீரம் ஸர்ப்பம் வை ஶிம்ஶுமாரகம் ॥

ஹைமஜம் தஜ்ஜலோத்தரே பூர்வஸ்யாம் திஶி வா புந: ।
புருஷாஞ்ஜலிமாத்ரே து ஶ்வப்ரே பாத்ரம் நிதாபயேத் ॥

ஸுமுஹூர்த்தே ஸுலக்நே ச ஹோராகரணஸம்யுதே ।
ராத்ரௌ கர்ப்பம் ததூர்த்வே து ஸ்தாபயேச்சதுரிஷ்டகம் ॥ ௱௧ ॥

கர்பபாஜனம் வைப்பதற்கு மந்திரம்:—

ஸ்வரதேவதாப்ய: மந்த்ரேப்ய:* ஸ்வாஹா । ஸர்வ ரத்நாதிபதயே ஸ்வாஹா । உத்தம ப்ரஜா பதயே ஸத்ய வாதிநே நம: । ஸரஸ்வத்யை நம: । வைவஸ்வதாய நம: வஜ்ரபாணயே நம: । அபிநவ ஸர்வவிக்ந ப்ரசமநாய நம: । நமோ வந்ஹயே ஸ்வாஹா ॥

குட்டை - கிணறு - குளம்- ஏரி - அணைக்கட்டு, இவைகளில், சுவர்ணத்திநாலே செய்யப்பட்ட மத்ஸ்யம் - தவளை- நண்டு-பாம்பு-சிம்சுமாரம் (முதலை) இவைகளை, அந்த ஜலாசயத்தின் வடபக்கம், அல்லது கிழக்குப் பக்கத்தில், புருஷனுடைய கை எடுப்புமட்டமுள்ள பள்ளத்தில், கர்ப பாஜனத்தை வைக்கவேண்டும். 100

சிலாக்கியமான முஹூர்த்தம், சிலாக்கியமான லக்னம், நல்ல ஹோரை, நல்ல கரணம், இவைகளுடன் கூடிய காலத்தில், ராத்திரியில், கர்பஸ்தாபனம் செய்யவேண்டும். அதற்கு மேலே வைக்கவேண்டிய சதுரிஷ்டகத்தை,

*ஸ்வாஹா ஓம் நம:, என்பது பாடபேதம்

यद्गर्भस्थानं तु यस्य स्यात् तत्र स्थाप्य प्रथमेष्टका ।
मृत्कन्दधान्यलोहधातुरत्नौषधिभिः सह ॥१०३॥

शैले शैलेन्द्रिका स्यादेव प्रथमेष्टका ।
शैले शिलामयी वेष्टके चैष्टके चेष्टका
शुभाः ॥

गर्भभाजनविस्तारा विस्ताराद्विगुणायता ।
विस्तारार्धघना सा चतुःसंहितेष्टका ॥१०४॥

(நான்கு கல்லுகளினுலே இணைக்கப்பட்ட கல்லை) பகலி லேயே வைக்கவேண்டும். 101

எந்த கர்பத்திற்கு எது ஸ்தானமோ, அந்த இடத்தில் பிரதமேஷ்டகையை (முதலாவது கல்லை) வைக்கவேண்டும்.

முன்பு கூறப்பட்ட அஷ்டமிருத்திகைகள், புஞ்ச கந்தங்கள் (விவிதமான கிழங்குகள்), தானியங்கள், சிறந்த உலோகங்கள், தாதுக்கள், ரத்னங்கள், ஒஷதிகள் இவை களுடனும் விதைகளைச் சேர்த்து, பிரதமேஷ்டகையைச் செய்யவேண்டும். 102½

கருங்கற்களால் கட்டப்படும் வாஸ்துக்களில் கருங்கல்லி னுலேயே பிரதமேஷ்டகை இருக்கவேண்டும். செங்கற்களி னுலே கட்டப்படும் வாஸ்துவில் செங்கல்லினுலேயே இருக்க வேண்டும். அவ்விதமிருப்பது சுபங்களையளிக்கும். 103

அந்த பிரதமேஷ்டகையானது, கர்ப பாஜனத்தின் விஸ்தாரமும், அதைப்போல் இருமடங்கு நீளமுள்ளதாகவும், அகலத்தில் அரைப்பங்கு கனமுடையதாகவும், நான்கு கற்களைச் சேர்த்து செய்யப்பட்டதாகவுமிருக்கவேண்டும். இது, சகல வாஸ்துக்களுக்கும் பொதுவாகக் கூறப்பட்ட விதியாகும். 104

[illegible] ।
[illegible] ॥

[illegible] ।
[illegible] ॥

[illegible] ।
[illegible] ॥

[illegible] ।
[illegible] ॥

மத்தியமோத்தம வாஸ்துவில், சதுரிஷ்டகங்களில் எட்டு அல்லது பன்னிரண்டு, எடுத்துக்கொள்ளவேண்டும்.

நேராக நீண்ட விரல் அடையாளமுள்ள கல்லானது, ஆண்கல்லாகும். 105

விரல் பதிந்திருப்பது ஒத்தப்படையாக இருந்தால், அது ஸ்திரீயாகும்.

அந்தக் கற்களில் கோணலாகக் கோடுகள் இருந்தால், அந்தக்கல் அலியாகும். 105½

மேடுபள்ளங்களில்லாமலும், ஒரே விதமாக சுடப்பட்டும் நல்ல ஒலியுடையதாகவும், அழகாகவும் இருக்கின்ற கற்கள் சிறந்தவைகளாம். 106

இவைகளில், புருஷக் கற்களை புருஷ கிரஹங்களிலும், ஸ்திரீ கற்களை ஸ்திரீ கிரஹங்களிலும், நபும்சகக் கற்களை நபும்சக கிரஹங்களிலும் வைக்கவேண்டும். கற்கள் எவ்விதமாக உருவாயிற்றோ, அவ்விதமாகவே அவைகளை வைக்கவேண்டும். (ஜாதிக்கேற்ப வைக்கவேண்டும்) 107

பிரதமேஷ்டகைக்கான சிலையானது, முன்னமே

𑌵𑌿𑌮𑌾𑌨𑌾𑌧𑌾𑌰𑌵𑌟𑍇 𑌶𑌿𑌰𑌸𑌿 𑌤𑌾 𑌗𑌰𑍍𑌭𑌸𑍍𑌯𑌾𑌧𑌃 𑌪𑍍𑌰𑌥𑌮𑍇𑌷𑍍𑌟𑌕𑌾𑌂 ।
𑌤𑌸𑍍𑌯𑌾𑌗𑍍𑌨𑍇𑌯𑌦𑌿𑌕𑍍𑌷𑍁 𑌪𑍍𑌰𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑌂 𑌤𑍍𑌰𑌿𑌕𑍋𑌣𑍇𑌷𑍁
𑌪𑍍𑌰𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑌮𑍍 ॥ ௱௮ ॥

𑌦𑍇𑌵𑌾𑌦𑍀𑌨𑌾𑌂 𑌦𑍍𑌵𑌿𑌜𑌾𑌤𑍀𑌨𑌾𑌂 𑌸𑍍𑌥𑌾𑌪𑌯𑍇𑌤𑍍 𑌸𑍍𑌥𑌪𑌤𑌿𑌃 𑌕𑍍𑌰𑌮𑌾𑌤𑍍 ।
𑌕𑍇𑌚𑌿𑌤𑍍 𑌪𑍍𑌰𑌾𑌹𑍁𑌰𑍍 𑌮𑌂𑌜𑍀𑌰𑍇 𑌪𑌞𑍍𑌚𑌾𑌂𑌶𑌾𑌵𑌸𑌾𑌨𑌕𑍇 ॥

𑌇𑌷𑍍𑌟𑌕𑌾𑌭𑌿𑌶𑍍𑌚𑌿𑌤𑍇 𑌖𑌾𑌤𑍇 𑌪𑌙𑍍𑌕𑍍𑌤𑌿 𑌪𑍍𑌰𑌥𑌮𑍇𑌷𑍍𑌟𑌕𑌾𑌮𑍍 । ,
𑌪𑍍𑌰𑌦𑍇𑌶𑌸𑍍 𑌸𑍍𑌥𑌾𑌪𑌯𑍇𑌦𑍍𑌯𑌸𑍍𑌤𑍁 𑌤𑌤𑍍𑌰 𑌸𑍍𑌥𑌾𑌪𑌯𑍇𑌤𑍍 ॥

𑌸𑍍𑌥𑌾𑌪𑌨𑍀𑌯𑌸𑍍𑌯 𑌦𑍍𑌰𑌵𑍍𑌯𑌸𑍍𑌯 𑌦𑍀𑌪𑍍𑌤𑌿𑌮𑌣𑍍𑌡𑌲𑌕𑌾𑌦𑌿𑌸𑌹𑌿𑌤𑌾𑌨𑌿
𑌯𑌾𑌤𑌾𑌨𑌿
𑌪𑌾𑌤𑍍𑌰𑍇 𑌨𑍍𑌯𑌸𑍍𑌯𑌾𑌗𑍍𑌨𑌾𑌦𑍀𑌨𑍍 𑌪𑍍𑌰𑌾𑌹𑍁𑌰𑍍𑌦𑌿𑌕𑌪𑌾𑌲𑌕𑌾𑌨𑍍
𑌹𑍋𑌮𑌾𑌦𑌿𑌭𑌿𑌃 𑌸𑌹𑌿𑌤𑍇 ।

சஷாலத்தில் பிந்துக்கள், ரேகைகள் இல்லாமல், தோஷங்களில்லாமல் செய்யப்பட வேண்டும். 108

விமானத்தில், கர்பத்திற்காக தோண்டப்பட்ட குழியில் கர்பத்தின் சிரஸ்ஸில் பிரதமேஷ்டகையை வைக்க வேண்டும். பிறகு அதற்கு தென்கிழக்கில் வைக்கவேண்டும். அதன் பிறகு, வலமாக திரிகோணங்களில் வைக்க வேண்டும்.

ஸ்தபதியானவன், இவ்விதமாக தேவதைகளுக்கும் பிராம்ஹணர்களுக்கும் கர்பஸ்தாபனத்தை செய்ய வேண்டும். 109½

சிலர், கர்பத்திற்காகத் தோண்டி, கற்களாலே கட்டப்பட்ட பள்ளத்தில், அந்த பள்ளத்தின் ஐந்தில் இரண்டு பங்கு அளவுக்கு மேலே பிரதமேஷ்டகையை வைக்க வேண்டுமென்று கூறுகிறார்கள்.

ஸ்தபதியானவன், முன்போலவே நன்கு அலங்காரங்

[illegible]

[illegible] ||

[illegible]

[illegible] |

[illegible]

[illegible] ||

[illegible]

[illegible] |

கள் செய்துகொண்டு, அந்தவிடத்தில் யுக்தியுடன் கற்களை வைக்கவேண்டும். 111

தேவதாதி ரூபங்கள், ஓஷதிகள், ஒளி பொருந்திய ரத்னங்கள், சுவர்ணம் முதலான அஷ்ட லோகங்கள், தாதுப்பொருள்கள், அஞ்சனக்கல் முதலியவைகளையும், அஷ்டமிருத்து, தானியங்கள், இவைகளையும், கர்ப பாத்திரத்தில் வைத்து, சுபதினம், சுபபக்ஷம், சுபநக்ஷத்திரம், சுப ஹோரை, சுபமுஹூர்த்தம், இவைகளுடன் கூடிய சுப காலத்தில், புத்திமானான சில்பியானவன், ராத்திரியில் அந்த கர்ப பாஜனத்திற்குப் பலி கொடுத்து, குழியில் ஜலத்தை விட்டு, அந்த ஜலத்தில், கர்ப பாஜனத்தை யுக்தியுடன் முதலில் வைக்கவேண்டும். 112

தேவர்கள் மனிதர்கள், இவர்களின் விமானங்களில், துவாரம் கூடுமிடத்தில், அதன் பாதமூலத்தில், அங்கங்கள் குறைவில்லாத கர்பத்தை முதலில் விதியுடன் வைத்து, அதன்மேலே சகல பதார்த்தங்களுடனும் செய்யப்பட்ட சதுரிஷ்டகத்தை, கர்பத்திற்கு மேலே வைக்கவேண்டும்.

ஸர்வமங்கலத்ரவ்யாட்யாம் தாம்

ஸ்தாபயேத் ஸ்தபதிஸ்தம் வ்ருக்ஷயோர்மதம் ॥ ௩௪ ॥

இதி மயமதே வ(ா)ஸ்துஶாஸ்த்ரே கர்பவிந்யாஸோ நாம த்வாதஶோ(அ)த்யாய: ॥

ஸ்தபதியானவன், ஐந்து ஐந்து கலசோதகங்களாலே அபிஷேகம் செய்யப்பட்டு பரிசுத்தமாக இருப்பவைகளும், வெண் சந்தணம் - புதிய வஸ்திரங்களுடன் கூடியவைகளும், சகலவிதமான மங்கள பதார்த்தங்களாலேயும் ஆச்சரியத்தையளிப்பவைகளும், பாதஸ்தானத்தில் சேர்த்து வைக்கவேண்டியவைகளுமான அந்த கர்ப பாஜனம், பிரதமேஷ்டகை இரண்டையும் வைக்கவேண்டும்.

கர்பவிந்யாசம் என்னும் பன்னிரண்டாவது அத்தியாயம் முற்றும்.

𑌅𑌥 𑌤𑍍𑌰𑌯𑍋𑌦𑌶𑍋𑌽𑌧𑍍𑌯𑌾𑌯𑌃 ॥

𑌅𑌧𑌿𑌷𑍍𑌠𑌾𑌨𑌸𑍍𑌯 𑌅𑌧𑌸𑍍𑌤𑌾𑌤𑍍 𑌉𑌪𑌪𑍀𑌠𑌂 𑌪𑍍𑌰𑌯𑍋𑌜𑌯𑍇𑌤𑍍 ।
𑌰𑌕𑍍𑌷𑌾𑌰𑍍𑌥𑌮𑍁𑌚𑍍𑌚𑌤𑌾𑌰𑍍𑌥𑌂 𑌚 𑌶𑍋𑌭𑌾𑌰𑍍𑌥𑌂 𑌚 𑌪𑍍𑌰𑌵𑌕𑍍𑌷𑍍𑌯𑌤𑍇 ॥

𑌸𑌮𑌂 𑌤𑍍𑌰𑌿𑌪𑌾𑌦𑌮𑌰𑍍𑌧𑌂 𑌵𑌾 𑌪𑌞𑍍𑌚𑌾𑌂𑌶𑌦𑍍𑌵𑍍𑌯𑌂𑌶𑌮𑍇𑌵 𑌵𑌾 ।
𑌸𑌪𑌾𑌦𑌂 𑌪𑌾𑌦𑌸𑌾𑌰𑍍𑌧𑌂 𑌵𑌾 𑌪𑌾𑌦𑍋𑌨𑌦𑍍𑌵𑌿𑌗𑍁𑌣𑌂 𑌤𑍁 𑌵𑌾 ॥

𑌦𑍍𑌵𑌿𑌗𑍁𑌣𑌂 𑌵𑌾 𑌪𑍍𑌰𑌕𑌰𑍍𑌤𑌵𑍍𑌯𑌮𑌧𑌿𑌷𑍍𑌠𑌾𑌨𑌤𑍁𑌙𑍍𑌗𑌤𑌃 ।
𑌉𑌤𑍍𑌸𑍇𑌧𑌂 𑌦𑌶𑌭𑌾𑌗𑍇 𑌤𑍁 † 𑌏𑌕𑍈𑌕𑍈𑌕𑍇𑌨 𑌵𑌰𑍍𑌧𑌨𑌾𑌤𑍍 ॥

𑌪𑌞𑍍𑌚𑌾𑌂𑌶𑌾𑌨𑍍𑌤𑌮𑌧𑌿𑌷𑍍𑌠𑌾𑌨𑌜𑌨𑍍𑌮𑌾𑌤𑍍 𑌬𑌾𑌹𑍍𑌯𑍇 𑌤𑍁 𑌨𑌿𑌰𑍍𑌗𑌮𑌃 ।

பதிமூன்றுவது அத்தியாயம்.

அதிஷ்டானத்திற்குக் கீழே உபபீடத்தை வைக்க வேண்டும். அந்த உபபீடமானது, அதிஷ்டானத்தின் ரக்ஷைக்காகவும், அதிஷ்டானமானது உயரமாக இருப்பதற்காகவும், அழகுக்காகவும் வைக்கவேண்டுமென்று கூறப்பட்டிருக்கிறது. 1

அந்த உபபீடமானது, அந்த அதிஷ்டானத்தின் உயரத்திற்கு ஸமம், முக்கால்பங்கு, அரைப்பங்கு, ஐந்தில் இரண்டுபங்கு, ஒண்ணேகால்பங்கு, ஒண்ணரைப்பங்கு, ஒண்ணேமுக்கால்பங்கு அல்லது இரண்டுபங்கு, உயரமுள்ளதாக இருக்கவேண்டும். 3

அதன் உத்ஸேதமானது (பருமனானது) அதிஷ்டானத்தின் பருமனில், பத்தில் ஒருபாகம், பத்தில் இரண்டுபாகம், பத்தில் மூன்றுபாகம், பத்தில் நான்குபாகம், அல்லது பத்தில் ஐந்துபாகம்வரையில், அதிஷ்டான ஜன்மத்திற்கு வெளியில் நிர்கமம் இருப்பதாகும். [அதிஷ்டானத்திற்கு வெளியில் நீட்டிவைக்கவேண்டும்] 3½

†𑌭𑌾𑌗𑍇𑌽𑌕𑍈𑌕𑍇𑌨 𑌇𑌤𑌿 𑌪𑌾𑌠𑌾𑌨𑍍𑌤𑌰𑌮𑍍 ।

தண்டம் வா ஸார்த்ததண்டம் வா த்விதண்டம் வா த்ரிதண்டகம் ॥ ௪ ॥

அதிஷ்டானஸமதுங்கா வா ஸமம் தத்பாதபாஹ்யகம் ।
வேதிபத்ரம் ப்ரதிபத்ரம் ஸுபத்ரம் ச த்ரிதா மதம் ॥ ௫ ॥

உத்ஸேதே த்வாதசாம்சே து த்வ்யம்சேனோபானமீரிதம் ।
பத்மமம்சம் ததூர்த்வேऽர்த்தாம்சம் க்ஷேபணம் பஞ்சபாகிகம் ॥

க்ரீவமர்த்தேன கம்பம் ஸ்யாத் பாகேனைகேனாம்புஜம் பவேத் ।
சேஷாம்சம் வாஜனம் கம்பமஷ்டாங்கமுதீரிதம் ॥ ௭ ॥

ஷடங்கம் வா விஹாயாதஸ்சோர்த்வஸ்தாம்புஜம் ।
வேதிபத்ரம் த்விதா ப்ரோக்தம் ஸர்வஹர்ம்யேஷு யோக்யகம் ॥ ௮ ॥

அதன் பாதபாஹியமானது, (பாஹியம்-வெளிப்பக்கம்) ஒருகோல், ஒண்ணரைக்கோல், இரண்டுகோல் அல்லது மூன்று கோலளவு இருக்கவேண்டும். 4½

உபபீடமானது வேதிபத்ரம் பிரதிபத்ரம், ஸுபத்ரம், என்று மூன்றுவிதமாகும்.

அதன் உயரத்தை பன்னிரண்டு (12) பாகங்களாகச் செய்து அவற்றுள் உபானம் இரண்டு (2) அம்சம் பத்மம் ஒரு (1) அம்சம், அதற்குமேலே அரை (½) அம்சம் க்ஷேபணம், ஐந்து (5) பாகம் க்ரீவம், அரை (½) அம்சம் கம்பம், ஒரு (1) பாகம் அம்புஜம், மீதமுள்ளபாகம் (2 பாகம்) வாஜனமும் கம்பமும், இவ்விதமாக எட்டு (8) அங்கங்களுடனுவது, அல்லது கீழேயும் மேலேயும் கூறப்பட்டிருக்கிற அம்புஜங்களை நீக்கி ஆறு (6) அங்கங்களுடனுவது இருப்பது இவ்விரண்டும் வேதிபத்ரமாகும். இது, ஸகலவிதமான ஹர்மியங்களுக்கும் யோக்யமாகும். 8

†सप्तविंशद्विभक्तेंशे द्वौ पञ्च द्वौ तथैकांशकैः ।
द्वादशांशैः षडंशैकत्र्यंशैकद्व्यंशकैः क्रमात्
योजयेत् ॥

जन्मादिवाजनान्तं तु तत्तन्मेतिद्रवहाभिके ।
पादुकं पङ्कजं कम्पं कण्ठमुत्तराम्बुजम् ॥ १० ॥

कपोतपालिकान्तादि प्रतिवाजनमुच्यते ।
प्रतिपत्रमिदं नाम सर्वालङ्कारसंयुतम् ॥ ११ ॥

जन्ममसूरकपादेषु प्रत्येकाष्टांशभागकांशकैः ।
त्र्यंशेनैकांशकेनापि द्व्यंशेनैकेन
योजयेत् ॥ १२ ॥

[1] ஜன்மாதி வாஜனந்தமான உயரத்தை இருபத்தேழு (27) பாகமாகச் செய்து, அந்த அம்சங்களில் இரண்டு (2) அம்சம், ஐந்து (5) அம்சம், இரண்டு (2) அம்சம், ஒரு (1) அம்சம், பன்னிரண்டு (12) அம்சம், ஆறு (6) அம்சம், ஒரு (1) அம்சம், மூன்று (3) அம்சம், ஒரு (1) அம்சம், இரண்டு (2) அம்சம் இவைகளால் சேர்க்கவேண்டும். [2] 9½

பாதுகம், பங்கஜம், கம்பம், கண்டம், உத்தராம்புஜம், இவைகளை கபோதபாலிகாந்தம் முதல் கல்பிக்கவேண்டும். இதற்குப் பிரதிவாஜனம் என்று பெயர். இது ஸகல விதமான அலங்காரங்களுடன் கூடியதானுல் இதற்குப் பிரதி பத்திரம் என்று பெயர். 11

---

†सप्तविंशद्विभक्तेंशे द्वौ पञ्चांशकैः ।
इति वा पाठः ।

1. 2, 14, 9, 12 1, 1, அம்சங்களுடன் என்பது பாடபேதம்

2. இங்கு கூறியுள்ள அம்சங்கள் பொருத்தமாக இல்லை. அதை சீர்படுத்திக்கொள்ளவேண்டும்.

பாதுகம் பங்கஜஞ்சைவ ஆலிங்காந்தரிதம் ததா ।
ப்ரத்யூர்த்வவாஜனம் கண்டமுத்தராப்ஜகபோதகம் ॥௧௩॥

ஆலிங்காந்தரிதம் சோர்த்வ ப்ரதிரூர்த்வவாஜனம் ।
விதேயம் ப்ரதிபத்ரம் ஸ்யாதேகபாகாதிகம் தத: ॥௧௪॥

உபபீடோதயே பாகே ஏகவிம்ஶதிபாஜிதே ।
ஜன்மத்வயம் அம்புஜத்வயம் கண்டார்த்தம் பத்மமர்த்தகம் ॥௧௫॥

ஜன்மாப்ஜம் ததா கம்பம் கண்டமஷ்டாம்ஶமீரிதம் ।
கம்போத்தரத்வயம் பத்மம் கோபானகம் த்ரிபி: ॥ ௧௬ ॥

பாதார்த்தமூர்த்வகம்பம் ஸ்யாத் பத்மார்த்தம் வாஜனம் ததா ।

பாதுகம் இரண்டு (2) அம்சம், பங்கஜம் ஒரு (1) அம்சம், ஆலிங்காந்தரிதம் இரண்டு (2) அம்சம், பிரத்யூர்துவ வாஜனம் இரண்டு (2) அம்சம், கண்டம் ஒரு (1) அம்சம், உத்தராப்ஜம் (8) அம்சம், கபோதம் இரண்டு (2) அம்சம், ஆலிங்காந்தரிதம் இரண்டு (2) அம்சம், ஊர்துவ ப்ரதி (விருதி) இரண்டு (2) அம்சம், ஊர்துவ வாஜனம் ஒரு (1) அம்சம், இவைகளுடன் கூடியது பிரதிபத்திரமாகும்.

இவைகளுடன் ஒருபாகம் அதிகமாக உள்ளது மற்றொரு பிரதிபத்ரமாகும். இவ்விதமாக பிரதிபத்ரம் இரண்டுவித மாகும். 14

உபபீடத்தின் உயரத்தை இருபத்தோரு (21) பாக மாகச் செய்துகொண்டு, அவற்றுள், ஜன்மம் இரண்டு (2) அம்சம், அம்புஜம் இரண்டு (2) அம்சம், கண்டம் அரை (½) அம்சம், பத்மம் அரை (½) அம்சம், வாஜனம் இரண்டு (2) (2) அம்சம், அப்ஜம் அரை (½) அம்சம், கம்பம் அரை (½) அம்சம், கண்டம் எட்டு (8) அம்சம், உத்தரம் பத்மம் ஒண்ணரை (1½) அம்சம், கோபானகம் மூன்று (3) அம்சம்,

ஜந்மத்³வ்யம்ʼஶம்ʼ த்ர்யம்ʼஶேந பத்³மமம்ʼஶேந கந்த⁴ரம் || ௧௭ ||

த்³வாப்⁴யாம்ʼ வாஜநமேகேந கம்பமஷ்டாம்ʼஶகைர்க³லம் |
அம்ʼஶேந கம்பகம்ʼ த்³வாப்⁴யாம்ʼ வாஜநம்ʼ கம்பமம்ʼஶகம் || ௧௮ ||

ஸுப⁴த்³ரம்ʼ த்³விவித⁴ம்ʼ ப்ரோக்தம்ʼ ஸர்வாலங்காரஸம்ʼயுதம் |
ஸிம்ʼஹேப⁴மகரவ்யால[illegible]

[illegible] || ௧௯ ||

ப்ரதிவக்த்ரம்ʼ ஜ²ஷாஸ்யம்ʼ ஸ்யாத் [illegible] |
அர்பிதா(அ)நர்பிதே ஹர்ம்யே ஸர்வத்ர பரிகல்பயேத் ||

ஊர்துவ கம்பம் அரை (½) அம்சம் என்று, அதன் அங்கங்களைக் கல்பிக்கவேண்டும். இதற்கு ஸுபத்திரம் என்று பெயர். 16½

உபபீடத்தின் உயரத்தில் ஜன்மம் இரண்டு (2) அம்சம், பத்மம் மூன்று (3) அம்சம், கந்தரம் ஒரு (1) அம்சம், வாஜனம் இரண்டு (2) அம்சம், கம்பம் ஒரு (1) அம்சம், களம் எட்டு (8) அம்சம், கம்பம் ஒரு (1) அம்சம், வாஜனம் இரண்டு (2) அம்சம், கம்பம் ஒரு (1) அம்சம், இவ்விதமாக அமைக்கப் பட்டதும் ஸுபத்ரமாகும். இவ்விதமாக ஸுபத்திரமானது இரண்டுவிதமாகும். இது ஸகலவிதமான அலங்காரங்களுமுள்ளதாகும். 16½

இதில் ஸிம்ஹம், யானை, மகரம் வியாளம், (யாளி) பூதங்கள், இலைகள், இவைகளையமைக்க வேண்டும். இதன் முகப்புதோரும், மகர மத்ஸ்யத்தையமைக்கவேண்டும். அதன் வாலானது தலையில் ஏறி இருக்கவேண்டும். 19½

இதை அர்பிதஹர்மியம், அனர்பிதஹர்மியம், (மாடியுள்ளது, மாடி இல்லாதது) இவைகளில் எங்கும் கல்பிக்க வேண்டும். 20

கும்பம் பத்மம் வ்ருத்தவ்ருத்தாங்கை: ப்ரதிவாஜநாந்தரிதோந்நதே ।
ததா மஸூரகாணாம் து யுஞ்ஜீயாதுபபீடகே ‖ ௨௧ ‖

அதிஷ்டாநஸ்ய துங்கம் ஸ்யாத் த்விகுணேந ஸமம்
ஸபாதமர்த்தம் த்ரிபாதம்
பஞ்சாம்சத்வ்யம்சகம் வா த்ர்யம்சத்வ்யம்சிதே
ச்ரேஷ்டமாநே த்ர்யுபபீடம் ।
ஸர்வாங்கம் ஸமம் சேத் ததபி ச மஹதா
வாஜநேநோபயுக்தம்
ஸர்வாதிஷ்டாநத்யயோர்ந்தஸ் ச்ருதத்ரஸதிநா
யோஜிதவ்யம் பலாய ‖

இதி மயமதே வஸ்துசாஸ்த்ரே உபபீடவிதாநோ நாம
த்ரயோதசோऽத்யாய: ।

புத்திமான்களாக இருப்பவர்கள், இதன் ஒவ்வொரு அங்கத்திலும் அளவை கூட்டியும் குறைத்தும் கொள்ளுவதாகும்

அவ்விதமே மஸூரகங்களின் உபபீடங்களிலும் கல்பிக்க வேண்டும். 21

உபபீடமானது அதிஷ்டானத்தின் உயரத்தைக் காட்டிலும் இரண்டு (2) பங்கு, அதற்கு சமமான உயரம், ஒண்ணரைப்பங்கு, அரைப்பங்கு, முக்கால் பங்கு ஐந்தில் இரண்டு பங்கு, மூன்றில் இரண்டு பங்கு, இருப்பதாகும். இந்த உபபீடத்தின் அங்கங்களின் அளவு ஸமானமாக இருப்பதானாலும், வாஜனம் பெரிதாக இருக்கவேண்டும். திடமான புத்தி சக்தியுள்ளவன், அதன் அடிப்பக்கத்தில் மனோஹரமான சில்பங்கள் எல்லாவற்றையும் கல்பிக்க வேண்டும். இது உபபீடத்திற்கு வலுவைக்கொடுப்பதற்காகவாகும். 22

உபபீடவிதாநம் என்னும் பதிமூன்ருவது அத்தியாயம்
முற்றும்.

𑌅𑌥 𑌚𑌤𑍁𑌰𑍍𑌦𑌶𑍋𑌽𑌧𑍍𑌯𑌾𑌯𑌃 ॥

𑌦𑍈𑌵𑌤𑌾𑌨𑌾𑌂 𑌦𑍍𑌵𑌿𑌜𑌾𑌤𑍀𑌨𑌾𑌂 𑌵𑌰𑍍𑌣𑌾𑌨𑌾𑌂 𑌗𑍃𑌹𑌕𑌰𑍍𑌮𑌣𑌿 ।
𑌤𑌦𑍍𑌯𑍋𑌗𑍍𑌯𑌂 𑌦𑍍𑌵𑌿𑌵𑌿𑌧𑌂 𑌕𑍍𑌷𑍇𑌤𑍍𑌰𑌂 𑌜𑌾𑌙𑍍𑌗𑌲𑌾𑌨𑍂𑌪𑌭𑍇𑌦𑌤𑌃 ॥

𑌬𑌹𑍁𑌶𑌰𑍍𑌕𑌰𑌯𑌾 𑌯𑌾 𑌕𑍃𑌷𑍍𑌟𑍇𑌤𑍍𑌯𑌰𑍍𑌥𑌂 [illegible] ।
𑌸𑌿𑌤𑌾𑌂 𑌸𑍍𑌤𑍋𑌕𑌤𑍋𑌯𑌾𑌢𑍍𑌯𑌾𑌂 𑌜𑌾𑌙𑍍𑌗𑌲𑌾𑌂 [illegible] 𑌭𑌵𑍇𑌤𑍍 ॥

𑌬𑌹𑍂𑌨𑌾𑌂 𑌕𑍍𑌰𑌿𑌯𑌮𑌾𑌣𑌸𑍍𑌯 𑌕𑍍𑌷𑍇𑌤𑍍𑌰𑌸𑍍𑌯 𑌫𑌲𑌂 𑌯𑌥𑌾 ।
†[illegible] ॥

[illegible] ॥
[illegible] ॥ ௪ ॥

பதினுன்காவது அத்தியாயம்

தேவதைகள், பிராமணர்கள், மற்ற ஜாதிகள், இவர்களுடைய கிருஹ காரியங்களில், அதற்கு யோக்யமான பூமியானது, ஜாங்கலம்-அநூபம் என்று இரண்டுவிதமாகும்.

பெருமணலுடன் கூடியதும், கெல்லும்பொழுது மிகவும் அழுத்தமாக இருப்பதும், வெளுப்பு நிறமான ஸ்வல்ப ஜலமுடையதுமான பூதலமானது, ஜாங்கலம் என்று பெயருடையதாகும். 2

கெல்லப்படுகிற பூமியானது, பலத்தை அனுஸரித்து, கூழாங்கற்களுடனும் கசேரு முதலியவைகளுடனும் கூடியதாகவும், சிறுமணலுடன் கூடியதும், கெல்லும் பொழுது ஜலத்தைக் காணும் வரையில், கற்கள் - கூழாங்கற்கள், மணல், இவைகளுடன் கூடியதும், பசையுள்ளதுமான பூமியானது, அநூபம் எனப்படும். 4

---

†[illegible] 𑌇𑌤𑌿 𑌪𑌾𑌠𑌾𑌨𑍍𑌤𑌰𑌮𑍍 ।

ஸுக³ர்தோஹி: க்ரமாத் பூர்ணம் நிஷ்பங்கம் ஸிகதாம்பஸா ।
ஸுநிக்ருதைர்ஹஸ்திபாதைஶ்ச காஷ்டகனைர் ப்ருஹத்தரை: ॥

தத்பாதே ஸலிலைரேவ ஸம்பூரிதே அக்ஷயதா ஶுபா ।
ஸமத்வம் ஸலிலைரேவ ஸாமர்த்யாத் விசக்ஷண: ||௬||

மஹீம் பரீக்ஷ்ய தாம் நீத்வா கர்பம் தத்ர நிதாபயேத் ।
ஸம்ஹதிம் ப்ரமாணாயாமம் தத்ர ஸ்தம்போபானாதிகம் || எ ||

உபானோந்நதி பாதோச்சம் த்விபாகம் த்ரிபாகம் து தத: ।
ததா பத்மம் ததோபானம் கல்பயேத்து விசக்ஷண: ||அ||

ஸ்வபாவம் ப்ருதிவீம் ஹஸ்தம் க்ருத்வா ஸம்பூர்ணத: ।
ஸுநிக்ருத்ய ததூர்த்வே து ஜன்மாதி போதயேத் ||கூ||

கெல்லப்பட்டுள்ள பள்ளத்தை, முறையே மணல்களால் ஒட்டையில்லாமல் துற்று, அதை யானையின் கால்களினுலும், பெரிய மரத்துண்டுகளாலும் கெட்டித்து, அதில் ஜலத்தை நிரப்பவேண்டும். அது குறையாமல் ஜலத்துடன் சமமாக இருந்தால், அந்த பூமியானது, சுபகரமாகும். சமர்த்தனுக இருப்பவன், அத்தகைய பூமியைத் தேர்ந்தெடுத்து, அந்த இடத்தில் கர்பஸ்தாபனம் செய்து, அதன் மேலே, உபானத்தை வைக்கவேண்டும். 6½

அந்த உபானமானது, (அதன் மேலே வைக்க வேண்டிய) ஸ்தம்பத்தின் உயரத்தைப் போல இரண்டு அல்லது மூன்று பங்கு உயரமுள்ளதாகவும், அதன் பஹளத்தில் (கனத்தில்) பாதி கனமுள்ளதாகவும் இருக்கவேண்டும். அந்த உபானத்தின்மேல், பத்மத்தையும், அதன்மேல், உபோபானத்தையும் அழகாக இருக்கும்படி அம்சகல்பனைகளுடன் செய்யவேண்டும். 8

இயற்கையாக உள்ள பூமியை ஒரு முழம் உயரமாகச் செய்து அதைக் கெட்டிக்கவேண்டும். அதற்கு மேலே இருப்

தஸ்யோர்த்வே த்வதிஷ்டானம் ஸோபபீடம் து கேவலம் ।
ஸ்தம்பம் வா ஸகுட்யம் வா ஜங்காவர்க்கம் ததூர்த்வகம் ॥

பூமிதேஶ இதி ப்ரோக்தா கபோதோர்த்வகதா ப்ரதி: ।
ப்ராஸாதாதீநி வஸ்தூநி அதிதிஷ்டந்தி யாநி தத் ॥ ௧௧ ॥

அதிஷ்டானம் தது ந்நத்யம் ஜாதிபூமிவஶாத் த்விதா ।
தைவிகானாம் சதுர்ஹஸ்தம் த்ரிஹஸ்தார்த்தம் த்விஜந்மனாம் ॥

ந்ருபாணாம் த்ரிகரம் ஸார்த்தத்விஹஸ்தம் யுவராஜகம் ।
த்விஹஸ்தம் வணிஜாமேகஹஸ்தம் ஶூத்ரஸ்ய கீர்த்திதம் ॥ ௧௨ ॥

பதற்கு, உபானம் என்றும் ஜன்மம் என்றும் பெயர் கூறப்பட்டிருக்கிறது 9

அதற்குமேலே உபபீடம் மட்டிலுமிருந்தால், அதற்கு அதிஷ்டானம் என்று பெயர்.

அந்த உபபீடமானது, ஸ்தம்பத்துடனாவது சுவற்றுடனாவது இருந்தால், அதன் மேலேயுள்ள பாகத்திற்கு (அதாவது உபபீடத்தின் மேலுள்ள தூண், சுவர், இவைகளுக்கு) ஜங்காவர்கம் என்று பெயர். 10

கபோதத்திற்கு மேலேயுள்ள பிரதியானது பூமிதேசம் எனப்படும்.

பிராஸாதம் முதலிய வாஸ்துக்கள், எதன்மீது இருக்கின்றனவோ, அதற்கு, அதிஷ்டானம் என்று பெயர். 11

அந்த அதிஷ்டானத்தின் உயரமானது, ஜாதியின் வசத்தினாலும், பூமியின் வசத்தினாலும், இரண்டு விதமாகும்.

தேவர்களின் அதிஷ்டானத்தின் உயரமானது, நான்கு (4) முழமிருக்கவேண்டும். பிராம்ஹணர்களின் அதிஷ்டானமானது, மூணரை ($3\frac{1}{2}$) முழம் உயரமுள்ளதாக இருக்க வேண்டும். அரசனின் அதிஷ்டானத்தின் உயரமானது,

[illegible]
[illegible]
[illegible] (கஂ) || கச ||

[illegible] ।
[illegible] ||கரு||

மூன்று (3) முழம் உயரமுள்ளதாக இருக்கவேண்டும். யுவ ராஜாவின் அதிஷ்டானமானது, இரண்டரை (2½) முழம் உயரமுள்ளதாக இருக்கவேண்டும். வைசியர்களுக்கு இரண்டு (2) முழமும், சூத்ரர்களுக்கு ஒரு (1) முழமும் உயரமுள்ளதாக இருக்கவேண்டும் என்று கூறப்பட்டுள்ளது. 13

இந்த அளவுகள் ஜாதிகளைப் பொருத்தவைகளாகும். இனி பூமி வசத்தினாலே அளவுகள் கூறப்படுகின்றன. 13½

துவாதச (12) பூமி முதல் த்ரி (3) பூமி வரையில் அதிஷ்டானத்தின் உயரமானது ஒரு (1) கோலளவுக்கு ஆறு (6) அங்குலம் குறைவாக இருக்கவேண்டும். 14

உத்தம த்ரி (3) தலத்தின் அதிஷ்டானோச்சமானது, ஒன்றே முக்கால் (1¾) முழம் இருப்பது விரும்பத்தக்க

---

* கரு ஶ்லோகாநந்தரம் அதிகபாட:—

[illegible] ।
[illegible] ||

[illegible] ।
[illegible] ||

[illegible] ।
[illegible] ||

[illegible] ।
[illegible] ||

தத்த்ராஷொடியாயெ-ந்த ஷஷ்டாம்ஸொ நகோநத: ।
ஸயிஷ்டாநஸ்ய ஸொகஸெயம் வாஸ்துவஸ்துநி ஸூவஸாக ॥

யஷ்வாநஸ்ய நிஷ்ராந்தம் தக் த்ர்யம்ஸெந விஸாஜயெக் ।
தஸ்ரெகைகாம்ஸம் ஸஹிஷ்க்ர்த்ய ஐமதீம் காரயெத்ஸுயஃ ॥

தாகும். மேதாவிகள் இந்த முறையை அனுஸரித்து அதம த்ரி (3) தலம் முதலியவைகளின் உயரத்தைக் கல்பித்துக் கொள்ளவேண்டும். * 15

